


# கந்தவேள் கோட்டம்

செங்கை ஆழியான்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கந்தவேள் கோட்டம்

(சரித்திர நாவல்)

செங்கை ஆழியான்

கமலம் பதிப்பகம்
75/10 A, பிறவுண் வீதி,
யாழ்ப்பாணம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

| | | |
|---|---|---|
| நூல் | : | கந்தவேள் கோட்டம் (சரித்திர நாவல்) |
| இரண்டாம் பதிப்பு | : | ஏப்பிரல் 2008 |
| ஆசிரியர் | : | செங்கை ஆழியான் |
| உரிமை | : | திருமதி கமலா குணராசா<br>75/10 A, பிறவுண் வீதி, யாழ்ப்பாணம். |
| வெளியீடு | : | கமலம் பதிப்பகம், யாழ்ப்பாணம். |
| விலை | : | ரூபா. 200/- |
| அச்சுப்பதிப்பு | : | யுனி ஆர்ட்ஸ் (பிறைவேட்) லிமிட்டெட்,<br>48B, புளுமெண்டால் வீதி, கொழும்பு 13.<br>தொ.பே: 0112330195 |
| ISBN | : | ISBN: 978-955-1624-07-1 |

| | | |
|---|---|---|
| Book | : | Kandavel Koddam (Historical Fiction) |
| Second Edition | : | April 2008 |
| Author | : | Sengaiaaliyan |
| Copyright | : | Mrs. Kamala Kunarasa<br>75/10 A, Brown Road, Jaffna. |
| Published | : | Kamalam Pathippakam, Jaffna. |
| Price | : | Rs. 200/- |
| Printed | : | Unie Arts (Pvt) Ltd.,<br>48B, Bloemendhal Road, Colombo 13.<br>Tel: 0112330195 |
| ISBN | : | ISBN: 978-955-1624-07-1 |

விற்பனையாளர்கள்

*பூபாலசிங்கம் புத்தகசாலை*

**தலைமை :**

இல. 340, 202 செட்டியார் தெரு, கொழும்பு 11.
இலங்கை. தொ. பே. : 2422321

*கிளை:*

இல. 309 A–2/3, காலி வீதி, கொழும்பு 06.
இலங்கை. தொ. பே. : 4-515775, 2504266

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பதிப்புரை

'கந்தவேள் கோட்டம்' என்ற இந்த நாவல் செங்கை ஆழியானால் படைக்கப்பட்ட ஒரு வரலாற்றுப் புதினமாகும். யாழ்ப்பாணத்து இராச்சியத்தின் வரலாற்றை ஆராயும் பொழுது நல்லூர்க் 'கந்தவேள் கோட்டம்' யாழ்ப்பாண இராச்சிய ஆள்புலத்தில் முக்கியமான ஒரு மையப்பிர தேசமாக விளங்கியது. இப்புனித பூமி பல்வேறு போர்களையும், பல்வேறு சித்தர்களையும், கொண்டமைந்த புண்ணிய தலமாகும். யாழ்ப்பாண அரசின் புகழ்பூத்த ஆரியச் சக்கரவர்த்திகள் இப்பிரதேசத்தை தலைநகராகக் கொண்டு செங்கோல் செலுத்தியுள்ளனர்.

யாழ்ப்பாண வரலாற்றின் வீழ்ச்சியும், எழுச்சியும் இந்தக் கந்தவேள் கோட்டத்திலேயே நிகழ்ந்து முடிந்துள்ளது. நல்லூர் கந்தசுவாமி கோயிலின் வரலாற்றை 'இவ்வாறும் கூறலாம்' என்பதற்கு இந்நாவல் தக்கவோர் எடுத்துக்காட்டாகும். இதனை வெறுமனே நாவல் என்ற உணர்வோடு வாசிக்கும்போது இப்புனை கதை விபரிக்கின்ற வரலாற்று செய்திகளையும், கந்தவேளின் அருள் விளக்கத்தையும் புரிந்து கொள்ளத் தவறி விடுவோம்.

செங்கை ஆழியானின் இந்த நாவலின் இரண்டாம் பதிப்பினை வெளியிட்டு வைப்பதில் பெருமிதமடை கின்றோம்.

கமலா குணராசா
கமலம் பதிப்பகம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## ஆசிரியரின் நாவல்கள்

1. வாடைக்காற்று
2. நந்திக்கடல்
3. சித்திரா பௌர்ணமி
4. ஆச்சி பயணம் போகிறாள்
5. இரவின் முடிவு
6. அலை கடல்தான் ஓயாதோ
7. முற்ற ஒற்றைப்பனை
8. கொத்தியின் காதல்
9. பிரளயம்
10. கங்கைக் கரையோரம்
11. காட்டாறு
12. நடந்தாய் வாழி வழுக்கியாறு
13. ஒருமைய வட்டங்கள்
14. யானை
15. காவோலை
16. கனவுகள், கற்பனைகள், ஆசைகள்
17. இந்த நாடு உருப்படாது ?
18. கிடுகுவேலி
19. அக்கினிக் குஞ்சு
20. காற்றில் கலக்கும் பெருமூச்சுக்கள்
21. கடல்கோட்டை
22. மழைக்காலம்
23. ஓ அந்த அழகிய பழைய உலகம்
24. தீம்தரிகிட தித்தோம்
25. குவேனி
26. மழையில் நனைந்து வெயிலில் காய்ந்து
27. கந்தவேள் கோட்டம்
28. யாககுண்டம்
29. அக்கினி
30. சாம்பவி
31. கொழும்பு லொட்ஜ்
32. போரே நீ போ
33. மரணங்கள் மலிந்த பூமி
34. ஈழ ராஜா எல்லாளன்
35. ஆறுகால் மடம்
36. பூதத்தீவு புதிர்கள்
37. வானும் கனல்சொரியும்
38. ஆயிரம் ஆயிரம் ஆண்டுகள்
39. ஜன்மபூமி
40. மீண்டும் வருவேன்
41. அலையின் கீதம்
42. யுத்தபூமி

## ஆசிரியரின் சிறுகதைத் தொகுதிகள்

1. இதயமே அமைதி கொள்
2. யாழ்ப்பாணத்து இராத்திரிகள்
3. இரவு நேரப் பயணிகள்
4. ஓடில்லா நத்தைகளும் கூடில்லா ஆமைகளும்
5. குந்தி இருக்க ஒரு குடிநிலம்
6. வற்றாநதி

## ஆசிரியரின் பல்சுவைக் கட்டுரை நூல்கள்

1. கூடாரவாழ்க்கை.
2. சுனாமி
3. ஈழத்து சிறுகதை வரலாறு
4. ஈழத்தவர் வரலாறு
5. யாழ் கோட்டை வரலாறு
6. 24 மணிநேரம்
7. 12 மணிநேரம்
8. மீண்டும் யாழ்ப்பாணம் எரிகிறது.

**கமலம் பதிப்பகம்**

75/10 A, பிறவுண் வீதி, யாழ்ப்பாணம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கந்தவேள் கோட்டம்

## முன்னிகழ்வு 1

### கி.பி. 948

உத்தரதேசம் எனும் நாகதீபத்தில் சோழராட்சி நிலைபெற்றிருந்த காலம். ஆவணி மாதத்துப் பனிப்புகார் நீங்காத ஓர் அதிகாலையில் நல்லூர் நனைந்தது. மேலைவானில் அஸ்தமனச் சந்திரனின் முழுவடிவமும், கீழைவானில் உதயத்துச் சூரியனின் இளம் மஞ்சள் கதிர்களும் ஒரே வேளையில் தெரிவதை இரசித்து அனுபவிக்கும் நிலையில் அப்பெரியவர் காணப்படவில்லை. அவர் விழிகள் தன் முன் முழுவடிவம் பெற்று வரும் கந்தன் ஆலயத்தின் கர்ப்பக்கிரகத்தில் நிலைத்திருந்தன.

அவர் தான் சோழப் பிரதிநிதியாக நல்லூரில் இருந்து நாகதீபத்தை பரிபாலித்து வரும் அமைச்சர் புவனேகவாகு; ஆசாரமான பிராமணோத்தமர். கந்தன் மீது அடங்காக் காதல் கொண்ட பக்திமான். அவர் அருகில் சின்னமனத்துளார் என்ற நாமம் பூண்ட மாவிட்டபுரத்து அந்தணர் அடக்கத்துடன் நின்றிருந்தார். வயல்களும் சோலைகளும் சூழ்ந்திருந்த நல்லூர் கிராமத்தின் மத்தியில் அமைந்திருந்த குருக்கள் வளவு புதுக்கோலம் பூண்டிருந்தது. கோயில் திருப்பணி ஒன்றை நிறைவேற்றுவதற்கான ஆயத்தங்கள் அங்கு காணப்பட்டன. பல்வேறு அளவிலான கருங்கற் குவைகளும் பொழியப்பட்ட சுண்ணக்கற்களும் சுட்ட செங்கற்களும் ஆங்காங்கே பரவிக் காணப்பட்டன. சிற்பாச்சாரிகளும் கல்தச்சர்களும் ஏனைய வேலையாட்களும் தங்குவதற்கும் வேலை செய்வதற்குமான தென்னங்கீற்றுக் கொட்டகைகள் பல அமைக்கப் பட்டிருந்தன.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆமாம், நல்லைநகர் வாழ் மங்கை உமைபாலன் செங்கை வடிவேலன் மயில்வாகனக் கடவுளுக்குத் திருக்கோயில் ஒன்றினை முதன்முதல் அமைக்கின்ற பணியினை அமைச்சர் புவனேகவாகு நிறைவேற்றிக் கொண்டிருந்தார். அவர் விழிகளில் ஆவல், பக்தி பரவசம்.

"சின்னமனத்துளாரே என் கனவு நிறைவேறுவதற்கான வேளை வந்து விட்டது. இவ்விடத்தில் எம்பெருமானுக்கு விமானத்தோடு கூடிய மூலஸ்தானம், அர்த்த மண்டபம், மகா மண்டபம், நிருத்த மண்டபம், தம்ப மண்டபம், பரிவார மூர்த்திகள் மண்டபங்கள், வசந்த மண்டபம், இராஜகோபுரம் என்பன கொண்ட கோயில் ஒன்றினை அமைக்க இருபது ஆண்டுகளாக கனவு கண்டேன். எம் ஐயன் அதற்கு வழியமைத்துவிட்டான்" என்றார் ஆனந்தப் பரவசத்துடன் புவனேகவாகு.

அமைச்சரை சின்னமனத்துளார் புன்னகையுடன் திரும்பிப் பார்த்தார்.

"மண்ணிற் பிறப்பவர் வேண்டும் வரங்கள் மலர்ந்தளிக்க எண்ணிய வேற் பெருமானுறை கோயிலிது. இறைவன் மக்கள் கடைந்தேறுவதற்காக உங்கள் மூலம் தனக்குக் கோயில் அமைத்துக் கொள்கிறான்...."

"நன்று சொன்னீர், சின்னமனத்துளாரே! கண்ணிற்கு அழகு தரும் கோபுரமும் கனமணியும் விண்ணிற்குணர்த்தும் நல்லையம் பதியாக இது விளங்க வேண்டும்..."

அமைச்சர் புவனேகபாகுவின் திருப்பணி நிறைவேறியது.

அலர்பொலிமாலை மார்பனாம் புவனேகபாகு நலமிகும் யாழ்ப்பாண நகரி ட்டுவித்து நல்லைக் குலவிய கந்தவேட்குக் கோயிலும் புரிவித்தானே.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## முன்னிகழ்வு: 2

### கி.பி 1384.

யாழ்ப்பாண இராச்சியத்தின் தமிழர் படை சமுத்திர வெள்ளமென கம்பளை இராசதானியை முற்றுகையிட்டது. தமிழர் படையின் இன்னொரு பிரிவு, விஜயநகர மன்னனின் துணைப் படையுடன் ஸ்ரீ ஜயவர்த்தனபுர கோட்டையை முற்றுகையிட்டது.

“திறைபெற்றுச் செல்ல வந்த எமது தூதுவர்களைத் தூக்கிலிட்டுக் கொன்ற ஜயவர்த்தனபுரக்கோட்டை மன்னன் அழகக்கோணாரைப் பிடியுங்கள். இக்கோட்டையை அழியுங்கள்...” என்று யாழ்ப்பாண இராச்சியத்து மன்னன் ஜயவீரசிங்கை ஆரியன் முழக்கமிட்டான்.

கோட்டை மன்னன் அழகக்கோணார் வெள்ளமெனத் திரண்ட தமிழர் படையைக் கண்டு கதிகலங்கினான். தன் மதியீனத்தை எண்ணித் துயரப்பட்டான். வழமைபோல யாழ்ப்பாணத்து மன்னனுக்குரிய திறையைச் செலுத்தியிருக்கலாம். செலுத்தாது விட்டிருந்தாலும் பரவாயில்லை, திறைபெற்றுச் செல்ல வந்த தூதுவரை தூக்கிலிட்டு தன் வல்லாதிக்கத்தை நிலைநாட்ட முயன்றது தவறாகிவட்டது.

கம்பளை மன்னன் புவனேகபாகுவின் படை கோட்டை மன்னனுக்கு உதவிக்கு வரமுடியவில்லை. அங்கும் தமிழர் படை சூழ்ந்து கொண்டிருந்தது.

“நமது வெற்றியை சிலாசாசனத்தில் பொறியுங்கள். அவர்கள் நாடு நமக்கு வேண்டாம். நம் சுதந்திரத்தில் தலையிடாதிருந்தால் போதுமானது. தலையிட்டால் இப்பொழுது நிகழ்ந்தது போன்ற அழிவுகளை எதிர்நோக்க நேரிடும் என்று எச்சரிக்கை அழியாதிருக்க, சிலாசாசனத்தில் எமது வெற்றியைப் பொறியுங்கள்...” என்று முழக்கமிட்டான் ஜயவீரசிங்கை ஆரியன்.

வெற்றிச் சின்னம் கல்லில் பொறிக்கப்பட்டது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 1 சின்னமனத்துளார்

பதினைந்தாம் நூற்றாண்டின் முற்பகுதியில் ஒரு நாள்.

கிழக்கு வானில் உதயக் கதிர்கள் பரவத் தொடங்கிய அதிகாலை வேளையில், மாவிட்டபுரம் கந்தசுவாமி கோயில் கிழக்கு வாசலில் பயண வண்டில் ஒன்று புறப்படத்தயாராக நின்றிருந்தது. கொம்புகள் நிமிர்ந்த வடக்கன் காளைகள் இரண்டு கழுத்துச் சலங்கைகளை இடையிடையே சப்திக்கத் தக்கவாறு தலையை ஆட்டிக் கொண்டு கம்பீரமாக நின்றிருந்தன. அலங்காரமான அக்கூடார வண்டிலின் முன் காளைகளின் நாணயக் கயிறுகளைப் பற்றியவாறு அதன் சாரதி வீரராயன் நின்றிருந்தான்.

அவன் அடிக்கடி கோபுரவாசலைப் பார்த்தான். அவன் விழிகளில் எவரையோ எதிர்பார்க்கும் ஆவல் தெரிந்தது. இருந்தாற்போல் அவன் விழிகள் மலர்ந்தன. அவன் எதிர்பார்த்தவர்கள் கோபுரவாசலில் தென்பட்டார்கள்.

நடுவயதைத் தாண்டி முதுமையின் தொடக்கத்தில் கால்பதிக்கும் சிவந்த பிராமணர் ஒருவரும், அவரைத் தொடர்ந்து அழகிய கன்னிகை ஒருத்தியும் பயண வண்டிலை நோக்கி வந்தனர். ஆசார ஒழுக்கங்களை கடைப்பிடித்து பிராமணிய வரம்புகளை சிறிதேனும் பிறழாத உத்தமப் பிராமணராக அவர் காணப்பட்டார். மாவிட்டபுரம் கந்தனாலயத்தின் பிரதம குருவான சின்னமனத்துளார் எனப் பெயர் பூண்ட பெருமகனே அவர். கச்சையணிந்த மார்பில் முத்துச்சரங்களும் பட்டுத் துகிலும் விளங்க அழகுத்தேராக அவர் அருகில் வரும் பெண் அவரின் இரண்டாவது மகள் மீனலோசினி அம்மாள்.

மகளை அவதானமாக வண்டிலில் ஏற்றிவிட்டு அவர் வண்டிலில் ஏறிக் கொண்டார். அவர்கள் ஏறும்வரை வண்டிலின் நுகத்தை பிடித்துக்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கொண்டிருந்த வீரராயன், இடக்கன் காளையை அன்பாகத் தட்டிவிட்டு, ஆசனத் தட்டில் தாவ, காளைகள் வேகமாகக் கிளம்பின.

கிழக்கு நோக்கிச் செல்லும் மண்பாதையில் அவை சலங்கைகள் சப்திக்க விரைந்தன.

"தலைநகருக்குப் போவதற்கு முன் நீ களைத்துப் போகப் போகிறாய், மீனா... பிடிவாதமாக இன்றைக்குப் புறப்பட்டிருக்கிறாய்..." என்றார் மகளைப்பார்த்து சின்னமனத்துளார். அவள் அவரைப் பார்த்து அழகாகச் சிரித்தாள். செம்மாதுளை முத்துக்களாகப் பல்வரிசைகள் பளீரிட்டன.

"வீட்டில் எப்போதும் அடங்கிக் கிடப்பதா, அப்பா உங்களுக்குத் துணையாக நானும் வருகிறேன்.."

வண்டில் காளைகளை விரட்டிக் கொண்டிருந்த வீரராயன், திரும்பிக் குருக்களை பார்த்துச் சிரித்தான். சின்னமனத்துளார் சிரித்துக் கொண்டார்.

"மன்னன் அழைத்தால் உடனே செல்ல வேண்டுமா அப்பா? அவரின் ஜாதகங்களை கணிக்க வேறு சோதிடர்கள் கிடைக்கவில்லையா?.."

"இதென்ன விதண்டாவாதம் பெண்ணே? அழைப்பது மன்னர் ... கூட இருப்பது அரச சபை... அதற்கு கீழ்ப்படிந்து நடப்பது நமது கடமை. மன்னரின் கட்டளையை தட்டமுடியுமா?".

சின்னமனத்துளாரின் வார்த்தைகளில் சிறிது கோபம் தொனித்தது. மீனலோசினி அதைப் புரிந்து கொண்டு, வெளியிற் பார்வையைச் செலுத்தினாள்.

சாலையின் இரு பக்கங்களிலும் செம்மண் தோட்டங்கள் பரவிக் கிடந்தன. காய்கறிகள் செழித்துக் கிடந்தன. பலர் அவற்றில் வேலை செய்து கொண்டிருந்தார்கள். துலாக்களில் இருவர் ஏறி மிதிக்க, பட்டையால் கிணற்றிலிருந்து நீர் இறைத்துக் கொண்டிருந்தார்கள். அவர்கள் பாடுவது காற்றில் மிதந்து வந்து கொண்டிருந்தது.

வாய்க்கால் வழியே ஓடிவந்து குண்டொன்றில் நிரம்பிய நீரைச் சில பெண்கள், பனை ஓலையால் இழைத்த பட்டைகளால் அள்ளி, நாற்று மேடைக்கு வார்த்துக் கொண்டிருந்தார்கள். இன்னோரிடத்தில் பச்சைப் பூவரசங்குழைகளை தோட்டத்தில் வெட்டிப் புதைத்துக் கொண்டிருந்தனர்.

சாலையின் இருமருங்கிலும் நிழல் மரங்கள் நெருக்கமாக வளர்ந்திருந்தன. வாகைகளும் வேம்புகளும், ஆலமரங்களும் அடுத்தடுத்துக் காணப்பட்டன. வெயிலின் கடுமை தெரியாமல் அவை தண்ணிழல் பரப்பிக்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கொண்டிருந்தன. வழியில் இடையிடையே கோயில்களும் மடங்களும் காணப்பட்டன. கோயில்களைச் சூழ்ந்து குடியிருப்புக்கள் நெருக்கமாக அமைந்திருந்தன.

சங்கடப் படலைகளும் அப்படலைக் கொட்டில்களில் குளிர்ந்த நீர் நிரம்பிய பானைகளும் வழியெங்கும் தூரத்திற்குத் தூரம் காணப்பட்டன. வண்டில் மாடுகள் நீரருந்துவதற்காக தொட்டிகள் சில வீடுகளின் காரைச் சுவர்களுக்கு அருகில் கட்டப்பட்டிருந்தன.

"எங்கள் கிராமங்கள் அழகானவை, அப்பா.." என்றாள் மீனலோசினி இருந்தாற் போல.

"நீ சிங்கை நகரின் அழகைப் பார்க்க வேண்டும், பெண்ணே. பிரமித்துப்போவாய். கடற்கரையோரத்தில் மாடமாளிகைகளுடன் அலங்காரமாகக் காணப்படும். ஒரு பக்கத்தில் பொங்கி ஆரவாரிக்கும் சமுத்திரம்... பரந்த மணற்படுக்கை... இடையில் நகரம்... கோயில்கள்... அரண்மனை... பிரதானிகள் மாளிகைகள்... மறுபக்கம் வயல்களும் தோட்டங்களும்... இரவும் பகலும் அந்த நகரத்தில் கலகலப்பு நிறைந்திருக்கும். விஸ்தாரமான நகரம் அது, மீனா. மாடமாளிகைகளில் இடபக் கொடிகள் பறக்கும்... யாழ்ப்பாண இராச்சியத்தின் செல்வச் செழிப்புக்கு அந்த நகரம் சிறந்த எடுத்துக்காட்டு..."

தொண்டமானாற்றங்கரையை அவர்கள் அடைந்த போது, மதியம் மலர்ந்திருந்தது. தொண்டமானாற்றங்கரையில் சாலையோரமாக அமைக்கப்பட்டிருந்த மடத்தின் முன் வீரராயன் வண்டிலை நிறுத்தினான். அவ்விடத்தில் பொதுக்கிணறு ஒன்றும் மடமும் சிறியதொரு கோயிலும் இருந்தன. வழிப்போக்கர்கள் தம் சுமையை இறக்கி வைத்து விட்டுப் பின்னர் பிறர் உதவியின்றியே தலையில் சுமந்து செல்வதற்கு வாய்ப்பாகச் சுமைதாங்கி வெண்சுதையால் கட்டப்பட்டிருந்தது.

வீரராயன் வண்டில் காளைகளை நீர்காட்டுவதற்காக நுகத்தடியிலிருந்து அவிழ்த்தான். அவற்றைக் கிணற்றடியிலிருந்த நீர்த் தொட்டிக்கு அழைத்துச் செல்லும் போது, கிணற்றருகில் பவ்வியமாக மூவர் நின்றிருந்தனர். அவர்கள் சுமந்து வந்த தலைச்சுமைகள் சுமைதாங்கியில் வைக்கப்பட்டிருந்தன.

"அவர்கள் யாரப்பா? "

"தண்ணீர் குடிக்க நிற்கிறார்கள் அம்மா."



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"அள்ளிக் குடிக்க வேண்டியது தானே? துலாவும் பட்டையும் அங்கிருக்கின்றனவே?"

சின்னமனத்துளார், மகளை வியப்புடன் பார்த்தார்.

"அவர்கள் கிணற்றில் தண்ணீர் அள்ளக்கூடாது, அம்மா. அள்ளவும் மாட்டார்கள். யாராவது அள்ளி ஊற்றினால் தான் குடிப்பார்கள்..."

"வீரராயன் அள்ளலாமா?"

"அள்ளலாம்... அவன் வெள்ளாளன்..."

"அப்ப அவர்கள்..."

"சிறைக் குடிகள்..."

அவள் முகம் வாடியது. வானில் பறக்கின்ற பறவைகளைக் கவலையுடன் பார்த்தாள். கடற்கரையும் தொண்டமானாறு எனப்படும் களப்பும் அருகில் இருந்தமையால் வானிற் கடற்பறவைகள் கூடுதலாக சஞ்சரித்தன. முகம் கழுவிவிட்டு, கட்டிவந்த புளிச்சாதத்தை உண்ணும் பொழுதும் அவள் முகவாட்டம் தீரவில்லை. சின்னமனத்துளார் அதனைக் கவனித்தார்.

"என்னம்மா?..." என்று கேட்டார்: "அரைநாள் பயணத்தில் களைத்துவிட்டாயா?"

"இல்லை அப்பா... எனக்கு எங்கள் நாட்டு இந்தக் குடிமை வழக்கம் பிடிக்கவில்லை. அவர்களை ஆலயத்துக்குள் விடாதிருப்பது, இப்படிப் பொதுக் கிணற்றில் தண்ணீர் அள்ளவிடாது தடுப்பது... அவர்களும் மனிதர்கள் தானே..."

சின்னமனத்துளார் அவள் கேள்விகளுக்கு பதில் சொல்லவில்லை. பாரம்பரியமாக இச்சமூகத்தில் நிலையூன்றிப் போன சமூகக் கட்டுப்பாடுகளுள் வாழ்ந்தவர் அவர். காலமாற்றத்தால் இச்சமூகக் குறைகள் தளர்ந்து போகும் என அவர் எண்ணமிட்டார். கந்தரோடை யாழ்ப்பாண இராச்சியத்தின் தலைநகராகவிருந்த காலத்தில், அவர் முற்பாட்டனார் பெரியமனத்துளார், ஆலயத்தின் பிரதான குருவாக இருந்தார். அவர் காலத்தில் சாதிக் கட்டுப்பாடுகள் மிகவும் அதிகமாகவிருந்தன என அவர் கூறுவாராம்.

அவர்கள் மீண்டும் பயணத்தை ஆரம்பித்தார்கள்.

"சாதிப் பிரிவினைகள் இங்கு தொழில்களால் வந்தன அம்மா. பாரத தேசத்தில் பிராமணரே உயர்ந்த அந்தஸ்தில் காணப்படுகின்றார்கள்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இங்கு அப்படியில்லை. வெள்ளாளரே அதிக செல்வாக்குடையவர்களாக இருக்கிறார்கள். அவர்கள் தான் இங்கு முதற்குடியேறினார்கள். வளமான நிலங்கள் யாவும் அவர்களுக்குத் தான் சொந்தம். அவர்களிடம் தான் நாங்களும் ஏனைய குடிமைகளும் தங்கியிருக்க வேண்டியுள்ளது. அதனால் அவர்கள் சொல்லும், நிர்ணயிக்கும் சமூக விதிகள் கைக்கொள்ளப்பட வேண்டியுள்ளது. சீவிப்பதற்கு அவர்களில் தங்கியிருக்க வேண்டிய நிலைமாறும் போது, இந்தச் சமூகக் கட்டுப்பாடுகளும் அழிந்தொழிந்துவிடும்..." என்றார் சின்னமனத்துளார்.

யாழ்ப்பாணக் குடாநாட்டின் வடகரையின் மத்தியிலிருந்து, தென் கிழக்குத் திசையில் பச்சிலைப்பள்ளி வரை, ஒடுங்கிய கடனீரேரி ஒன்று காணப்படுகிறது. கடல் நீர் பெருக்குக் காலத்தில் அதனுள் பிரவேசித்து அதனைப் பெருங்களப்பு ஆக மாற்றியிருக்கின்றது. இக்களப்பு கால்வாய் போன்று நீண்டமைந்திருப்பதால், தொண்டமானாறு என வழங்கப்படுகிறது. யாழ்ப்பாணத்தில் தொண்டைமானின் பரிசனங்கள் குடியேறி, இக்கால்வாயை அமைத்ததாக ஐதீகம். அதனால் அவன் பெயரால் இக்களப்பு வழங்கப்படுவதாயிற்று.

தொண்டமானாற்றில் அதிவரட்சிப் பருவத்தில் இயற்கையாகவே உப்பு அபரிமிதமாக விளையும். யாழ்ப்பாணக் குடாநாட்டின் பல பகுதிகளில் தன்படுவன் உப்பு அதிகமாக விளைந்தது. இவற்றைச் சேமித்து மரக்கலங்களில் இந்தியாவிற்கு அனுப்பி வந்தார்கள். அதற்கென உப்பதிகாரி ஒருவரும், அவருக்குத் துணையாக வேறு பல அதிகாரிகளும் கூலியாட்களும் அமர்த்தப்பட்டிருந்தார்கள்.

சின்னமனத்துளாரின் வண்டில் தொண்டமானாற்றைக் கடந்தபோது, தொண்டமானாற்றுத்துறையில் பல மரக்கலங்கள் நங்கூரமிட்டிருந்தன. அவற்றில் தன்படுவான் உப்பு ஏற்றப்படுவதை கம்பீரமான ஓர் இளைஞன் மேற்பார்வை செய்துகொண்டிருந்தான்.

"அவன் தான் வல்லியத்தேவன். உப்பதிகாரி அம்மா. இவனுடைய முன்னோர்கள் தான் வல்லிபுரப்பகுதியில் முதன்முதல் குடியேறினார்கள். இவனுடைய முன்னோன் பெயரும் வல்லியத்தேவனே. அவர்கள் தெலுங்கர்கள். விஷ்ணு பக்தர்கள். சிங்கை நகரில் இவர்களால் அமைக்கப்பட்ட விஷ்ணு கோயில் இன்றும் இருக்கிறது..."



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அலங்காரமான வண்டில் ஒன்று தரித்து நிற்பதை வல்லியத்தேவன் கண்டான். வண்டிலின் அலங்காரத்திலிருந்து ஒரு பிரமுகர் வருகிறார் என்பதை அவன் புரிந்து கொண்டான். அவன் வண்டிலை நோக்கி வந்தான். அவன் வண்டிலைநோக்கி வருவதை கண்ட சின்னமனத்துளார் வண்டிலை விட்டுக் கீழிறங்கினார். அவரை அவன் அடையாளங் கண்டுகொண்டான்.

"நீங்களா...?" என்று வல்லியத்தேவன் வியப்பினை காட்டினான்.

அவர்கள் ஒருவரையொருவர் சுகம் விசாரித்துக் கொண்டார்கள்.

வண்டிலினுள் அமர்ந்திருந்த மீனலோசினியின்மீது வல்லியத்தேவனின் கண்கள் நிலைத்தன. தாமரைமலராக வீற்றிருந்த அந்தப் பிராமணப் பெண்ணின் அழகு அவனை ஒருகணம் கலங்கடித்தது.

"இவள் என் பெண் மீனலோசினி..." என்று அவளை அவனுக்கு அறிமுகப்படுத்தி வைத்தார் சின்னமனத்துளார். அவள் அவனை நோக்கிப் புன்முறுவலுடன் கரம் குவித்தாள்.

சின்னமனத்துளார் மீண்டும் வண்டிலில் ஏறிக்கொண்டார். அப்போது வல்லியத்தேவன் சொன்னான்: "பெரும் யுத்தம் ஒன்று வரப்போகுதாம். யாழ்ப்பாண இராச்சியம் யுத்தகளமாகப் போகுது. ஸ்ரீ ஜயவர்த்தனபுரக் கோட்டை மன்னன் பராக்கிரமபாகு யாழ்ப்பாணத்தின் மீது படையெடுக்க ஆயத்தங்கள் செய்வதாகத் தகவல் வந்திருக்கிறது..."

இச்செய்தி சின்னமனத்துளாரின் பயண மகிழ்ச்சியை கணப்பொழுதில் அழிப்பதாக இருந்தது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 2 சிங்கைநகர் ஆரியன்

தொண்டமானாற்றிற்குக் கிழக்கே விரிந்து பரந்து கிடக்கும் வடமராட்சி அன்று, மகிஷ தீவு என அழைக்கப்பட்டது. பருத்தித்துறைக்கு அணித்தாக வல்லிபுரம் என வழங்கப்படும் கிராமத்தினை மையமாகக் கொண்டு, அன்றைய யாழ்ப்பாண இராச்சியத்தின் தலைநகரான சிங்கைநகர் சிறப்புற்றிருந்தது. பொங்கொலி நீர்ச்சிங்கை நகர் எனப் புகழப்பட்ட, இத்தலை நகரின் கீழைக்கரையில் சமுத்திர அரசன் அடக்கமாக கடல் மணலைப்பரப்பி, நிலத்தை வளர்த்துக் கொண்டிருந்தான்.

எட்டாம் நூற்றாண்டளவில் யாழ்ப்பாண இராச்சியத்தின் தலைநகரமாக இருந்தது கதிரமலை என வழங்கப்பட்ட கந்தரோடையாகும். உக்கிரசிங்கன் என்ற மன்னனும் அவன் வழியினரும் இங்கிருந்து தனியரசு செலுத்தினர். இவர்கள் வேற்றரசர்களால் நாற்றிசையிலுந் தாக்கப்பட்டு இடருற்றதால், காலகதியில் சிங்கைநகர் தலைநகராக மாறியது.

இக்கதை நிகழும் காலத்தில் யாழ்ப்பாண இராச்சியத்தின் மன்னனாக விளங்கியவன் கனகசூரியசிங்கை ஆரியன் ஆவான்.

1450 ஆம் ஆண்டு.

ஒரு நாள் மாலைப் பொழுதின் தொடக்கத்தில், நெய்தலும் மருதமும் சந்திக்கின்ற பிரதேசத்தின் விளிம்பாக வடக்குத் தெற்காக அமைந்திருந்த சிங்கை நகரின் ராஜவீதியில் இருந்தாற்போல பரபரப்பு எழுந்தது. மக்கள் பதற்றமடைந்தவர்களாகக் காணப்பட்டனர். வர்த்தகர்கள் கலக்கத்துடன் வியாபாரம் செய்தனர். சிலர் தம் வியாபாரத் தலங்களை மூடுவதில் ஈடுபட்டனர்.

நகரத்திற்குப் பொருட்களை வாங்குவதற்காக வண்டில்களில் வந்திருந்த பிரமுகர்கள் இடைநடுவில் தத்தமது கிராமங்களுக்கு அவசரமாகப் புறப்பட்டனர்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அக்காட்சிகளை அரண்மனையின் மேன்மாட உப்பரிகையில் நின்றிருந்த மன்னன் கனகசூரியசிங்கை ஆரியன் கவலையுடன் அவதானித்தான். நகரின் மத்தியில் கொடிக்கம்பத்தில் பட்டொளி வீசிப் பறந்து கொண்டிருந்த இடபக்கொடி கலக்கத்துடன் படபடப்பதாக அவனுக்குப்பட்டது. இன்று அதிகாலை சிங்கை நகரின் அமைதி குலையக் கூடிய செய்தியுடன் ஒற்றன் நீலகண்டன் தென்னிலங்கையிலிருந்து வந்திருந்தான்.

"...யாழ்ப்பாண இராச்சியத்தின் மீது பெரும் படையுடன் வெகுவிரைவில் ஸ்ரீஜயவர்த்தனபுரக் கோட்டையின் சிங்கள இளவரசன் ஒருவன் புறப்பட இருக்கிறான்..."

நீலகண்டன் கொண்டுவந்த செய்தி இது தான். நாடு, நகர், காடு, மலை தாண்டி இந்தச் செய்தியுடன் அவன் வந்திருந்தான். அவன் நம்பகமான ஒற்றன், சந்தேகமில்லை.

ஒருகணம் கனகசூரியன் திகைப்படைந்த போதிலும், உடன் எதையும் எதிர்கொள்ளும் துணிவுடன் நிமிர்ந்தமர்ந்தான் சிங்கை ஆரியன். நீண்டகாலமாக யாழ்ப்பாண இராச்சியம் அமைதியையும் சமாதானத்தையும் பேணிவந்திருக்கிறது. வடக்கே காங்கேயன்துறையிலிருந்து தெற்கே வன்னிச்சிற்றரசுகளை உள்ளடக்கியதாக விளங்கிய, இராச்சியத்தில் நிரந்தரமான அமைதி கொலுவிருந்தது.

அந்த அமைதி குலையப்போகின்ற அறிகுறி ஆரம்பமாகிவிட்டது.

நீலகண்டன் சொன்னான்: "கோட்டை மன்னன் பராக்கிரமபாகு மிகுந்த சினம் கொண்டவனாகக் காணப்படுகின்றான். அரசே! தங்களது முன்னோன் ஜயவீரசிங்கை ஆரிய மகாராசா செகராசசேகரன் கம்பளை மீதும் ஜயவர்த்தனபுரக் கோட்டை மீதும் ஒருங்கே படையெடுத்து அளகக்கோணாரின் செருக்கடக்கிய சம்பவத்தை இன்றைய கோட்டை மன்னனால் இன்னமும் மறக்கமுடியவில்லை. அதற்குப் பழிவாங்கும் நோக்குடன் வெஞ்சினம் கொண்டவனாகக் காணப்படுகிறான்."

சிங்கை நகர் ஒற்றன் நீலகண்டன் தொடர்ந்தான்: "மன்னவா, உமது முன்னோன் ஜயவீரசிங்கை ஆரியன் கம்பளையை வெற்றி கொண்டதுடன், ஜயவர்த்தனபுரக் கோட்டைக்குப் பெரும் அழிவுகளை ஏற்படுத்தியமையைப் பராக்கிரமபாகுவால் இலகுவில் மறக்கமுடியவில்லை. அதுமட்டுமல்ல, கம்பளையை வெற்றிகொண்ட ஜயவீரசிங்கைஆரியன் அங்கு ஒரு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சிலாசாசனம் (கல்வெட்டு) ஒன்றினை தனது வெற்றியின் ஞாபகச் சின்னமாக பொறிப்பித்துள்ளார்..."

கனகசூரியசிங்கை ஆரியன் நீலகண்டனை வியப்புடனும் பெருமிதத்துடனும் ஏறிட்டு பார்த்தான். அவன் விழிகளில் அளவிட முடியாத கம்பீரம் குடிகொண்டது.

"அந்தச் சிலாசாசனத்தை நீ பார்த்தாயா நீலகண்டா..."

"பார்த்தேன் அரசே.... அச்சிலாசாசன வாக்கியங்களையும் ஓலையில் குறித்து வந்துள்ளேன்"

நீலகண்டன் வழங்கிய ஓலையை ஆவலுடன் கனகசூரியசிங்கை ஆரியன் வாங்கிக்கொண்டான். ஆவலுடன் படித்தான்.

"கங்கணம்வேற் கண்ணிணையாற் காட்டினார் காமர்வளைப்
பங்கயக்கை மேற்றிலதம் பாரித்தார் பொங்கொளிநீர்ச்
சிங்கைநக ராரியனைச் சேரா
வனுரேசர் தங்கள் மடமாதர் தாம்."

"ஆகா....."என்றான்: " நீலகண்டா? இதன் பொருள் உனக்குப் புரிகிறதா?"

"புரிகிறது அரசே. ஆரவாரிக்கின்ற அலைகளையுடைய சிங்கைநகரில் வாழும் ஆரியனைச் சென்றடையாத அனுரேசரின் (கம்பளை மன்னனின்) இளமாதர் தம்வேல் போன்ற கண்களில் நீர் சொரிந்த வண்ணம் வளையல் அணிந்த தாமரைமலர் போன்ற கைகளினால் தங்கள் நுதல்களின் திலகங்களை நீக்கினார்கள்...என்பதாகும்"

"சிலாசாசனத்தில் பொறிக்கப்பட்ட பழியை துடைப்பதற்காகவா பராக்கிரமபாகு நம் நாட்டின் மீது படையெடுத்து வருகிறான்? தமிழரின் வீரத்தை தப்பாக எடை போட்டுவிட்டான். சிங்கள இராச்சியத்தை தமிழர்கள் எப்படித் தம் ஆதிக்கத்தின் கீழ் வைத்திருக்க முடியாதோ அதே போல தமிழரின் இராச்சியத்தை சிங்களவர் தமது ஆதிக்கத்தின் கீழ் வைத்திருக்க முடியாது. இதற்காக நிகழ்ந்த போர்கள் ஆதிக்கப் போட்டிகள் யாவும் நிலைக்காது போனதற்கு வரலாறு சான்று என்பதைப் பராக்கிரமபாகு உணரவில்லை...."

கனகசூரியசிங்கை ஆரியன் உடன் நடவடிக்கைகளில் இறங்கினான். மறுநாள் அரச சபையைக் கூட்டி ஆலோசிப்பதற்காக, நாட்டின் சகல பிரமுகர்களுக்கும் செய்தி காவித் தூதுவர்களை விரைந்தனுப்பி வைத்தான்.

நாளை காலை அரசசபை கூடப்போகிறது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வன்னிச் சிற்றரசர்களுக்கும் தூதுவர்கள் செய்தியுடன் சென்றிருந்தனர். ஆனால் நாளைய கூட்டத்தில் அவர்கள் கலந்து கொள்வதற்கான வாய்ப்புக்கள் இல்லை. பனங்காமம், மேல்பத்து, முள்ளியவளை, கரிக்கட்டுமூலை, கருநாவல் பத்து ஆகிய பிரதேசங்களை நிர்வகித்து வரும் வன்னிமைகள் ஒரு நாளில் சிங்கை நகர் வந்து சேர்ந்துவிட முடியாது. யாழ்ப்பாண அரசிலிருந்த நிருவாக அதிகாரிகளில் வன்னியரே முதன்மை பெற்றிருந்தனர். தலைமுறை தலைமுறையாகத் தம் நாடுகளை வன்னியர் ஆண்டு வந்தனர். மேலும், யாழ்ப்பாணத்தில் வருடத்திற்கு இருமுறை வரிசைகள் கூடியபொழுது வன்னியரும் அரசனுக்கு உபகார அன்பளிப்புகள் அனுப்பி வைத்தனர். எனினும் ஆண்டுக்கு ஒரு முறை தலைநகருக்குச் சென்று யாழ்ப்பாண மன்னனைச் சந்தித்து ஆண்டுக்குத் திறை கொடுத்தனர். யாழ்ப்பாண இராச்சியத்தின் பாதுகாப்பு வன்னியர்களின் திறனிலும் தங்கியிருப்பதை கனகசூரியசிங்கை ஆரியன் அறிவான்.

அரண்மனையின் மேன்மாட உப்பரிகையில் நின்றிருந்த கனகசூரியசிங்கைஆரியன் விழிகள் நகரின் பரபரப்பில் நிலைத்திருந்தன. யுத்தம் ஒன்று வரப்போகிறது என்ற செய்தியால் ஏற்பட்ட கலக்கம் நகரத்தில் தெரிந்தது. யாழ்ப்பாண அரசின் மக்கள் நீண்டகாலம் அமைதியாக வாழ்ந்து பழக்கப்பட்டு விட்டவர்கள்

யுத்தமேகங்கள் இராச்சியத்தில் கவியத் தொடங்கியதால் சாதாரண வாழ்கையின் போக்கில் பாதிப்புக்கள் ஏற்படப்போகின்றன.

நீண்ட நேரம் மன்னன் அப்படியே நின்றிருந்தான். மாலைக்கதிரவன் தன் கரங்களை ஒடுக்கிக்கொண்டு அடிவானத்தில் மறைந்ததன் பின்னரும் அவன் அப்படியே நின்றிருந்தான்.

இருள் கவியத் தொடங்கிய வேளையில் மேன்மாடத்திற்கு கனகசூரியசிங்கைஆரியனின் மகன் பரராசசேகரன் வந்தான். அவனுக்கு வயது பதினெட்டு இருக்கும். அழகும் வலிமையும் கொண்ட கட்டிளங்காளை.

"அப்பா இரவு கவியத்தொடங்கி விட்டது..."

மகனை மன்னன் ஏறிட்டுப் பார்த்தான்.

"ஆமாம் பரராசா.....இராச்சியத்தின் மீதுந்தான். என் பாட்டன் ஜயவீரசிங்கை ஆரியன் போன்று படைப்பலத்தை தான் அதிகரிக்காமல் இருந்துவிட்டேன். அது தவறு என்று புலப்படுகின்றது."

பரராசசேகரன் புன்னகைத்தான்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"அதற்காக கவலைப்பட வேண்டாம். தந்தையே காலம் இருக்கிறது. அதற்குள் படைவலிமையை கூட்டிவிடலாம். ஆனால் எனக்கு ஒரு நிலமைதான் கவலை தருகிறது...."

'என்ன' என்பது போல மகனை பார்த்தான். பரராசசேகரன் தொடர்ந்தான்: "நமது நாட்டின் பிரமுகர்கள் சிலர் யுத்தம் வருகின்றது என்ற செய்தியைக் கேள்விப்பட்டதும் இந்தியாவிற்கு குடிபெயர முயல்கிறார்களாம். ராமேஸ்வரத்திற்கும் தொண்டை மண்டலத்திற்கும் அவர்கள் ஓடிவிடப்போகிறார்களாம்.... நமது தண்டநாயக்கன் கனகமழவன் சொன்னார்"

"ஓடுபவர் ஓடட்டும் தமது இராச்சியத்தின் கஷ்டத்தில் பங்கு கொள்ள முடியாதவர்கள் நமது இராச்சியத்தில் அமைதி மீண்டும் நிலை நாட்டப்பட்டதும் இங்கு உரிமைபாராட்டித் திரும்பி வரக்கூடாது என்று அறிவித்துவிடு......" என்றான் கனகசூரியசிங்கைஆரியன்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மாதோட்டநன்னகர் 3

வங்கம் மலிகின்ற கடல் மாதோட்ட நன்னகரின் புகழ் மிக்க மாந்தைத் துறைமுகத்தில் தரித்து நின்ற மரக்கலம் ஒன்றிலிருந்து கம்பீரமான இளைஞன் ஒருவன் தளத்தில் குதித்தான். அவன் வந்த மரக்கலம் சேரநாட்டுக்குரியதென்பது அம்மரக்கலத்தின் உச்சியில் பறந்து கொண்டிருந்த விற்கொடியிலிருந்து புலனாகியது.

மேற்கே அலையெறிந்து ஆரவாரித்துக் கொண்டிருந்த சமுத்திரத்தின் மடியில் சாய்வதற்காக சூரியன் சரிந்துகொண்டிருந்த இனிய மாலைப் பொழுதில் மாந்தைத் துறையின் கரையில் நிற்பது இனிய அனுபவமாக இருந்தது. அவன் மரக்கலத்தில் ஏறுவதற்கு முன்னரே மாந்தைத் துறைமுகத்தின் அழகையும் கம்பீரத்தையும் பெருமையையும் கேள்விப்பட்டிருந்தான். நேரில் பார்க்கும் போது அவன் கேள்விப்பட்டவை உண்மையில் மிகச் சொற்பம் எனப்புலப்பட்டது.

இன்று மல்வத்து ஓயா என்றும் அருவியாறு என்றும் குறிக்கப்படுகின்ற நதி பண்டை நாளில் கதம்ப நதி எனப்பட்டது. மாத்தளை மலைகளின் மேற்குச் சாய்வுகளில் தோற்றம் பெற்று நிறை நீருடன் வடமேற்கு நோக்கிப்பாயும் கதம்ப நதி ராஜபுரத்தை (மன்னார்) அடைவதற்கு இருபது கல்தொலைவில் இரண்டு கிளைகளாகப் பிரிகின்றது. அவ்வாறு பிரிந்த நதியின் ஒரு கிளை அருவியாறு என்ற பெயருடன் மன்னார் தீவிற்கு தெற்கே பல கல் தொலைவில் கடலில் கலக்கின்றது. மற்றைய கிளை பாலாவி என்ற பெயருடன் திருக்கேதீஸ்வரத்துக்கருகில் கடலுடன் சேர்கின்றது. அதனால் பாலாவியில் எப்போதும் தங்கு தடையின்றி நீர் பாய்ந்து கொண்டிருந்தது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பாலாவியின் வடகரையில் பாவம் வினையறுக்கும் திருக்கேதீஸ்வர ஆலயம் அமைந்து திகழ்கின்றது. பாலாவியின் தென் கரையில் ஈழமண்டலத்தின் பிரதான துறையாக மாந்தை விளங்கி வந்தது. பண்டைக் காலத்தில் அராபிக் கடலூடாக நடைபெற்ற கப்பற்போக்குவரத்தில் மாந்தைத்துறைமுகம் மிக்க வளம் பெற்றிருந்தது. தென்மேல் பருவக் காற்றின் தாக்கத்திலிருந்து மாந்தைத்துறை பாதுகாப்பளித்தது. அராபிய, உரோம, கிரேக்க, இந்திய கப்பல்கள் பலவும் மாந்தையில் வந்து தங்கிச் சென்றன. அலைபுரண்டு ஓடி வேகமாகக் கடலைச் சேர்ந்த பாலாவி நீரினாலும், கடல் நீரோட்டங்களினாலும் சுரிசேராத ஆழமான துறையாக மாந்தை விளங்கியது.

ஈழத்திற்கும் தென்னிலங்கைக்குமிடையிலான இணைப்பினை மாந்தைத்துறையே ஏற்படுத்தியது. சோழமன்னர்கள் இலங்கையைப் பொலநறுவையிலிருந்து ஆட்சி செய்த காலத்தில் மாதோட்டத்தினதும் திருக்கேதீஸ்வரத்தினதும் புகழ் பாரதமெங்கும் பரவியிருந்தது.

அத்தகைய மாந்தையின் துறையில் நமது சேரநாட்டுப் பிரயாணி, வியப்புடன் இறங்கி நின்றான். களஞ்சியக் கட்டிடங்களும் சுங்கக் கட்டிடங்களும் நிறைந்த இத்துறையில் மரக்கலங்களில் பொருட்களை ஏற்றுவதிலும் இறக்குவதிலும் பலர் ஈடுபட்டிருந்தனர். இறங்கு துறையின் மத்தியில் நிறுத்தப்பட்டிருந்த கொடிஸ்தம்பத்தில் இடபக் கொடி பறந்து கொண்டிருந்தது. யாழ்ப்பாணத்து சிங்கை ஆரியமன்னனின் ஆதிக்கத்தின் கீழ் இப்பிரதேசம் இருக்கின்றது எனபதை அது பறைசாற்றியது.

சுங்கக் கட்டிட வாசலில் அவன் தடுத்து நிறுத்தப்பட்டான். பட்டோலை ஒன்றுடன் வாசலில் நின்றிருந்த அதிகாரி ஒருவன் அவன் பற்றிய விபரங்களை ஓலையில் குறித்துக் கொண்டான்.

"உமது பெயர்"

"சதாசிவப்பெருமாள்"

"எங்கிருந்து வருகிறீர்?"

"மலையாள தேசத்திலிருந்து"

"இப்போது எங்கு செல்கிறீர்?"

"அனுராதபுரத்திற்குச் சென்று அங்கிருந்து ஜயவர்த்தனபுரத்திற்குச் செல்கிறேன்..." என்றான் சதாசிவப் பெருமாள். அதிகாரி அவனை ஏறிட்டுப் பார்த்தான். கரிய ஆஜானுபாகுவான சதாசிவப்பொருமாளின் கம்பீரமான



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தோற்றமும் கன்னக்குடுமியும் இப்போது தான் அவன் கண்களிற்பட்ட மாதிரி ஏறிட்டுப் பார்த்தான்.

"காரணம் தலயாத்திரையா!"

"இல்லை. தென்னிலங்கை மன்னவனின் படையில் சேர்ந்து பணிபுரிய"

"பணிபுரிவதாயின் சிங்கை நகர் செல்லலாமே?..."

"எனக்கு உகந்த தொழில் அங்கு இல்லை..." என்றான் சதாசிவப் பெருமாள்.

சுங்க அதிகாரியின் விழிகளில் மீண்டும் வியப்பு. அதனை காட்டிக் கொள்ளாமல் கேட்டான்.

"கையிலுள்ள பொதியில் இருப்பவை என்ன?"

சதாசிவப்பெருமாள் கரத்தில் இருந்த பொதியை அவிழ்த்துக் காட்டினான். உடுபுடவைகளும் அவற்றிடையே அங்குசம் ஒன்றும், கட்டுச்சாதமும் அவற்றில் இருந்தன. அதிகாரி அந்த அங்குசத்தை கரத்தில் எடுத்துப் பார்த்தான். அதன் நுனிக்கூர்மையை பரிசோதித்துப் பார்த்தான்.

"நீ பணிக்கனா"

"ஆம்..." என்றான் சதாசிவப்பெருமாள். ஈழத்தில் யானைபிடித்துப் பழக்குபவர்களாக பணிக்கர்கள் இருந்தார்கள். யானைப் படையில் இவர்கள் முதன்மையான பாகர்களாக இருந்தனர்.

அதிகாரியின் முன் நின்றிருந்த அந்தக்கரிய பெருமாளின் தோற்றம் அவன் யானைகளை அடக்கிப் பழக்கக் கூடியவன் என்பதை நிரூபிக்குமாறு இருந்தது.

"உனக்கு ஏற்ற தொழில் உத்தரதேசத்தில் இல்லையென்று சொல்ல முடியாது. நீர் பனங்காமத்து வன்னியரிடம் பணிக்கனாகச் சேரலாமே..."

"எனக்கு அதில் விருப்பம் தான்... என்றாலும் இப்போது ஜயவர்த்தனபுர மன்னன் பராக்கிரமபாகுவின் பணிக்கராக எனது மாமன் இருக்கிறார். அவருக்கு வயதாகிவிட்டது. அவர் ஊர் திரும்ப இருக்கிறார். அந்த இடத்தில் என்னை அமர்த்துவதற்காக என்னை அழைத்துள்ளார்... தட்ட முடியாத கட்டளை." என்று சதாசிவப் பெருமாள் சிரித்தான்.

அவன் சுங்கக் கட்டிடத்தை விட்டு வெளியேறும் போது அந்த அதிகாரி "கட்டுச்சாதம் கட்டிக் கொண்டு ஈழத்திற்கு வரத்தேவையில்லை. பணிக்கரே எங்கள் நாட்டிற்கு வந்த விருந்தாளியை நாம் ஒருபோதும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பட்டினி போடமாட்டோம். வழிகள் தோறும் விருந்தினர் மடங்கள் இருக்கின்றன. இன்றிரவு கூட நீர் திருக்கேதீஸ்வரம் சென்று தங்கலாம்.'' என்றான்.

சதாசிவப்பெருமாள் திரும்பிப் பார்த்து நட்புடன் சிரித்துவிட்டு, பாலாவி ஆற்றினை நோக்கி நடந்தான். தூரத்தில் பாலாவியின் கரைமேல் செய்யசடை முடியான். திருக்கேதீச்சரத்தான் திருக்கோயில் கோபுரம் உயர்ந்து விளங்கியது. பரம் பரன் உருவாய் உற்ற பாலாவியில் பலவினை குறும்பு போக்க இறங்கித் தீர்த்தமாடிக் கொண்டான், சதாசிவப்பெருமாள். அவன் களைப்பு பாலாவியின் தெளிந்த நீரில் கரைந்து சென்றது. மாதோட்ட நன்னகரின் பாவவினை அறுப்பார் பயில் பலாவியின் கரைமேல் ஏறி நின்ற போது, அவன் மயில் ஒன்றின் அகவினைக் கேட்டான்.

நிமிர்ந்து பார்த்த போது கோபுரத்தின் கலசத்தில் மூன்று மயில்கள் தோகை ஒளிர அமர்ந்திருந்தன.

கோயில் அமைந்திருந்த நகரம், அருள்மொழித்தேவன் வளநாடு எனப்பட்டது. சோழ மன்னர்கள் இந்த ஆலயத்தினை நிறுவிப் பராமரிப்பதற்குத் தேவதானங்கள் வழங்கியிருந்தார்கள். இந்தக் கோயிலைக் கட்டியவரின் பெயர் ஆலய முன்றலில் இராசகோபுர அடிப்பீடத்தில் சிலாசாசனமாகப் பொறிக்கப்பட்டிருந்தது. சதாசிவப்பெருமாள் அதனைப் படித்துப் பார்த்தான். "சோழ மண்டலத்து 'சத்திரிய சிகாமணி வளநாட்டு வேளார் நாட்டுச் சிறுகூற்ற நல்லூர் கிழவன் தாழிகுமரன் ஈழமான மும்முடி சோழ மண்டலத்து மாதோட்டமான ராஜராஜபுரத்து எடுப்பித்த ராஜராஜ ஈஸ்வரத்த மாதேவர்க்கு சந்திராதித்தவன் நிற்க ராஜராஜ...''

சோழ மண்டலத்து சிறு கூற்ற நல்லூர்த் தலைவன் தாழிகுமரன் என்பவன் இச்சிலாசாசனத்தை எடுப்பித்திருந்தான். பின்னர் ஈழத்தின் மீது தண்டெடுத்து வென்ற ராஜராஜன், அவனது மகன் ராஜேந்திரன் என்போர் இந்த ஆலயத்தின் பரிபாலனத்திற்கு வேண்டிய ஒழுங்குகளைச் செய்திருந்தனர்.

திருக்கேதீஸ்வரத்தின் மேற்குப்பக்க எல்லையாக ராஜராஜப் பெருந்தெரு அமைந்திருந்தது. வடக்கு எல்லையாக கம்மனாச்சேரி காணப்பட்டது. தாழிக்குமரனால் அமைக்கப்பட்ட இக்கோயிலிற்குரிய கிருத்தியங்கள் குறைவின்றி நடப்பதாக சோழ மன்னர்கள் நிரந்தர ஒழுங்குகள் செய்திருந்தார்கள். தஞ்சாவூர்ப் பெருங்கோயிலில் கர்ப்பக்கிரகத்தையும் உட்பிரகார மண்டபத்தையும் சுற்றி அமைக்கப்பட்ட



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கருங்கற் சுவர்களில் சிலாசாசனங்கள் பதியப்பட்டிருப்பது போல இங்கும் காணப்பட்டன.

"வனைபெருங்கோலால் ஐங்கோல் உட்பட வடக்கும், மேல்பாற்கெல்லை ராஜராஜ பெருந்தெருவுக்குக் கிழக்கும், வடபாற்கெல்லை கம்மாணச்சேரிக்குத் தெற்கும் இவ்விசைந்த பெருநான்கெல்லைக்குள் அகப்பட்ட நிலத்தில் இவ்வூர்க்குடி குன்றன் காமன் இருந்த மாளிகையும் வீடும் தோட்டமும் நீங்கலாகவும் இன்னல்பட்ட இத்தனையும் இத்தேவர்க்கு இறையிலி தேவதானம் ஆவ..."

சதாசிவப் பெருமாள் மகாலிங்கத்தை வணங்கிய பின் உட்பிரகாரத்தை வலம் வந்தான். கோயிலில் பக்தர்கள் நிறைந்து காணப்பட்டனர். கோயிலை விட்டு வெளியேறி, அருள்மொழித்தேவ வளநாட்டினுள் நடக்கத் தொடங்கினான்.

வளம்மிக்க சிறியதொரு நகரமாகக் காணப்பட்டது. சேலை நெசவு செய்யும் தறிகளின் சத்தம் வீதிகளில் கேட்டது. இங்கிருந்து துகில்களை வாங்குபவர்களும் விற்பவர்களும் அதற்குரிய வரிப்பணம் செலுத்த வேண்டும். அதற்காகச் சோழ மன்னன் சட்டம் செய்திருந்தான்: "இவ்வூர் நெய்யும் தறிகளால் தறியும் திங்கள் அரைக்கால் அக்கமும், இறுப்பனவற்றில் கொடுப்போனிடை காசின் வாயொரு வட்டமும், கொள்வானிடை ஒரு வட்டமும் கொள்வதாகவும், ஆக இப்படிக் கொண்டு பொழுது இரு நாழியாக நிதம் ஆறு நாழி அரிசி திருவமிர்தம், அரிசிக்கும் மாணி இரண்டுக்கு நிதம் நெல்லெண்ணாழியும்..." இவ்வாறு பெறப்படுகின்ற பணத்திலிருந்து திருவமுது படைப்பதற்கான அரிசியும், இரு பிராமணர்களுக்கு எட்டுப்படி நெல்லும் வாங்குவதற்கு ஏற்பாடிருந்தது.

வீதிகளின் சந்திகளில் சந்தி விளக்குகள் ஏற்றப்படுவதை சதாசிவப்பெருமாள் கண்டான். இந்நகரத்தில் சந்தி விளக்குகள் ஏற்றுகின்ற செலவினை வாழைக்காய் வணிகரும் வெற்றிலை வணிகரும் ஏற்றிருந்தனர்.

ராஜராஜப் பெருந்தெருவும் கம்மானச்சேரித் தெருவும் சந்திக்கின்ற இடத்திலிருந்து கிழக்குப் பக்கமாக குன்றன்காமம் என்ற தோட்டம் இருந்தது. சதாசிவப்பெருமாள் வந்த போது அத்தோட்டத்தில் மக்கள் குழுமி நிறைந்திருப்பதைக் கண்டான். அடங்கா ஆவலுடன் "அங்கு ஏன் கூட்டம்?" என்று அவ்வழிவந்த ஒருவனை கேட்டான்.

வழிப்போக்கன் அவனை விழிப்புடன் பார்ப்பதாகப் புலப்பட்டது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

“சுபதிட்ட முனிவரின் ஆச்சிரமம் அது... நீர் கேள்விப்பட்டதில்லையா?”

‘இல்லை’யெனத் தலையசைத்தான் கரியபெருமாள். அவனை அறியாமல் அவன் கால்கள் குன்றன்காமன் தோட்டத்தினுள் பிரவேசித்து ஆச்சிரம வாசலில் தரித்து நின்றன. பார்ப்போரைக் கவர்ந்திழுக்கும் கருணை முகத்துடன் துறவி ஒருவர் ஆச்சிரம திண்ணையில் அமர்ந்திருந்தார். அவரிடம் பலர் தங்கள் குறைகளைக் கூறி தெளிவு பெற்றனர். நீண்ட நேரம் ஒதுங்கி நின்று அங்கு நிகழ்பவற்றினை அவதானித்துக் கொண்டு பயபக்தியுடன் அவன் நின்றிருந்தான்.

துறவியைத் தரிசிக்க வந்த மக்கள் கரைந்து போன வேளையில் அவர் நிமிர்ந்து அவனைப் பார்த்தார்.

“ஐயனே” எனச் சதாசிவப் பெருமாள் அவர் முன் பணிந்தான்.

அவர் அவனை ஆழமாகப் பார்த்தார். அவர் விழிகளில் வியப்பு மேலிட்டது.

“மகனே, நீ பெரும் பாக்கியம் செய்தவன். இந்த இராச்சியத்தினை ஆளப்போகின்றவன் உனக்கு மகனாகப் பிறப்பான்.”

சதாசிவப் பெருமாள் ஒருகணம் வியப்பும் மறுகணம் அவநம்பிக்கையும் அடைந்தான். துறவி எழுந்து ஆச்சிரமத்தின் உள் சென்றார்.

மீண்டும் அந்த மயிலின் அகவல் அவனுக்குக் கேட்டது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சப்புமல் குமாரயா

# 4

கதம்ப நதிக் கரையோரமாக மாந்தையிலிருந்து அநுராதபுரம் வரை பிரதான பெருந்தெரு அமைந்திருந்தது. இப்பெருந்தெருவே வரலாற்றுக் காலத்தில் அதிமுக்கியமான பாதையாக விளங்கியது. இலங்கைக்கும் இந்தியாவிற்குமிடையிலான தொடர்புகள் இப்பெருந்தெரு வழியாகவே நிகழ்ந்து வந்தன.

இந்தியப் படையெடுப்புக்களும் குடியேற்றங்களும் மாந்தையூடாக நிகழ்ந்த போது இப் பெருந்தெருவின் ஊடாகவே உட்பிரதேசங்களுக்குப் பிரவேசிக்க முடிந்தது. எனவே இப்பெருந்தெரு பிரதான ராஜபாட்டையாக விளங்கியதால் வழியெங்கும் கிராமங்கள் அமைந்திருந்தன. பௌத்த வழிபாட்டுத் தலங்களோடு கூடிய பௌத்த கிராமங்களும் சைவக் கோயில்களோடு கூடிய தமிழ்க் கிராமங்களும் அப்பெருந்தெருவில் மாறிமாறி அமைந்திருந்தன.

அதிகாலை மாந்தையிலிருந்து புறப்பட்ட சதாசிவப்பெருமாள் அன்ற மாலைவரை கதம்பநதியின் கரையோரமாகத் தொடர்ந்து நடந்தான். பெருந்தெருவின் இருமருங்கும் நிழல் பரப்பி வளர்ந்திருந்த விருட்சங்கள் உடல் களைப்பினை போக்கின. கதம்ப நதியின் குளிர்ந்த நீர் தாகத்திற்கு இதமாகவிருந்தது. மடுவில் அமைந்திருந்த கண்ணகி அம்மன் கோயிலில் அன்றிரவு அவன் தங்கி இளைப்பாறினான்.

சோழநாட்டில் பிறந்து பாண்டிய நாட்டில் புகுந்து சேர நாட்டில் தெய்வமான கண்ணகியைப் பற்றி அவன் அறிந்திருந்தான். அவளுக்கு இந்தக் காட்டுக் கிராமத்தில் பெரியதொரு கோயில் அமைக்கப்பட்டிருப்பதைக் கண்டதும் ஈழநாட்டின் மீது மதிப்பு உயர்ந்தது. கண்ணகி அம்மன் ஆலய மடத்தில் அன்றிரவு படுத்திருந்த போது ஏனோ நித்திரை அவனைத் தழுவ மறுத்தது. மாதோட்டத்தில் அந்தத்துறவி கூறிய வார்த்தைகள் அவனை சுற்றிச்சுழன்றன. அவனால் அத்துறவியின்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வார்த்தைகளைப் புரிந்துகொள்ள முடியவில்லை. அவ்வார்த்தைகளில் நம்பிக்கை கொள்ள முடியவில்லை.

சாதாரண பணிக்கன் அவன். யானைகளைப் பழக்கி, அடக்கி வேலை வாங்கும் பணிக்கன் மகன், அவன் மகன் இந்த இராச்சியத்தின் தலைவிதியை மாற்றி அமைப்பானாம்.

அதிகாலை வேளையில் அவனைத் தூக்கம் தழுவியபோது ஆலய உதயகால மணி ஒலித்தது. அவன் எழுந்து காலைக் கடன்களை முடித்துக் கொண்டு தன் பயணத்தைத் தொடங்கினான்.

அன்று மத்தியானம் அவன் செட்டிக்குளத்தை அடைந்தான். செட்டிக்குளம் ஒரு சிறிய கிராமம். வெளவாலை என்ற கேணியுடன் அமைந்திருந்த சந்திரசேகர சிவாலயத்தில் இளைப்பாறிக் கொண்டான். மதுரையைச் சேர்ந்த வீரநாராயணன் செட்டி என்ற வணிகனின் மரக்கலம், உடைந்ததால் மாதோட்டத்தில் கரையேறி தன்னுடன் வந்தவர்களையும் செட்டிக்குளத்திற்கு அருகில் குடியமர்த்தினான். அவன் கட்டிய கோயில் தான் சந்திரசேகர சிவாலயமும் வெளவாலைக் கேணியும் என அங்கு அவனுக்குச் சிலர் தெரிவித்தனர். பெருந்தெருவின் போக்கில் சிவாலயங்கள் பல காணப்பட்டன.

செட்டிக்குளத்தில் புதியதொரு தகவல் சதாசிவப்பெருமாளுக்குக் கிடைத்தது.

ஜயவர்த்தனபுரத்திற்குச் செல்வதாயின் கதம்பநதியை இவ்விடத்தில் கடந்து அக்கரையில் பிரவேசித்து அப்படியே எதிர்ப்படும் காட்டுப் பாதையில் முப்பது கல் தொலைவு சென்றால் ஜயவர்த்தனபுரத்திற்குச் செல்லும் பெருந்தெரு எதிர்ப்படும். ஆனால் அப்பாதை யானைகள் நிறைந்தது பயங்கரமானது.

சதாசிவப்பெருமாள் கதம்பநதியைக் கடந்து காட்டுப்பாதையில் செல்வதென முடிவெடுத்துக் கொண்டான். யானைகள் அவனைக் கண்டுதான் பயப்பட வேண்டும்.

"உமக்கு அந்தப் பாதை தெரியுமா?.."

"தெரியும்... சிறு வயதில் நான் ஜயவர்த்தனபுரியில் என் மாமனுடன் இருந்திருக்கிறேன்..."

கதம்ப நதியைக் கடந்து காட்டுப்பாதையில் தன்னந்தனியாக அவன் நடந்தான். பாதையில் எதிர்ப்பட்ட யானைகள் எதற்கும் அவன் அஞ்சாது தங்களை நோக்கி நடந்துவரும் அவனைக் கண்டு மூசிவிட்டு வழியைவிட்டிறங்கிக் காட்டிற்குள் தம்மை மறைத்துக் கொண்டன.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அன்று மாலை அவன் மாலைக் காட்டுப் பாதையை விட்டுப் பெருந்தெருவில் பிரவேசிக்க விழைந்த போது அந்தச் சம்பவம் நடந்தது. அழகிய பல்லக்கு ஒன்றினை அறுவர் தூக்கிக் கொண்டு காட்டிற்குள் விரைவதையும், அதற்குள்ளிருந்து ஒரு பெண் அவலக் குரல் எழுப்பிக் காப்பாற்றும்படி வேண்டுவதையும் அவன் கண்டு கேட்டான்.

இயல்பாகவே அவனுள் உறங்கிக் கிடந்த வீர உணர்வும் பிறருக்கு ஆபத்தில் உதவும் எண்ணமும் வீறுகொண்டெழுந்தன. தன் கரத்திலிருந்த பொதியிலிருந்து வேகமாக அங்குசத்தை எடுத்துக் கொண்டான்.

''நில்லுங்கடா'' என்று கத்தியவாறு அவர்களை நோக்கிப் பாய்ந்தான். பல்லக்கைத் தூக்கிக்கொண்டு ஓடினார்கள். நிற்கவில்லை, அவன் அவர்களை நெருங்கியதும் அவர்களில் ஒருவன் வாளை உருவிக் கொண்டு அவனை எதிர்கொண்டான். மற்றவர்கள் பல்லக்கைக் காவிக் கொண்டு விரைந்தனர்.

ஓங்கியவாள் இறங்குவதற்கு முன்னரே சதாசிவப்பெருமாளின் கரத்திலிருந்து விடுபட்ட அங்குசம் அவன் மார்பில் பாய்ந்துவிட்டது. அவன் அலறிக்கொண்டு நிலத்தில் விழுவதைக் கண்ட ஐவரும் எதிரியின் பலத்தை புரிந்துகொண்டவர்களாக ஒருங்கே ஓடிவந்தனர். சதாசிவப்பெருமாள் மண்ணில் சரிந்தவனின் வாளை வலக்கரத்திலும் அங்குசத்தை இடக் கரத்திலும் பற்றிக் கொண்டான்.

எதிரிகள் பலம் வாய்ந்தவர்களாகக் காணப்பட்டனர். அவர்களைத் தனித்து நின்றெதிர்ப்பதில் சதாசிவப்பெருமாள் களைப்படையவில்லை. எனினும் அவர்கள் ஒருங்கே அவன் மீது வாட்களை வீசியதால் உடலில் காயங்கள் பட்டு இரத்தம் சிந்தத் தொடங்கியது.

எனவே சதாசிவப்பெருமாள் தன் யுத்த முறையை மாற்றிக் கொண்டான். வாளினால் எதிரிகளின் வாட்களை தடுத்துக் கொண்ட அதேவேளை இடக்கரத்தால் அங்குசத்தை வேகமாக எதிரிகளின் மார்புகளுக்கு குறிவைத்து வீசிவிட்டான். மூவர் அத்தாக்குதலிற்கு இலக்காகி விழுந்ததும் மற்ற இருவரும் பின்வாங்கத் தொடங்கினர். அவர்களின் மனதில் பதிந்துவிட்ட பயவுணர்வு சதாசிவப்பெருமாளுக்கு சாதகமாக அமைந்தது. வேகமாக வீசிய அவன் வாளிற்கு ஒருவன் பலியாக மற்றவன் காட்டிற்குள் ஓடி மறைந்தான்.

அறுவரைத் தன்னந் தனியாக எதிர்த்துநின்று மண்ணில் சரித்த சதாசிவப்பெருமாளை அடங்காவியப்புடன், பல்லக்கிலிருந்து இறங்கிய அழகிய பெண்ணொருத்தி பார்த்தாள். அவள் முகத்தில் தெரிந்த பயம் மறைந்து வியப்புப் படர்ந்தது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தன்னுடலில் படர்ந்த இரத்தத்தை துடைத்துவிட்டவாறு, அவன் அவளை நெருங்கி "பெண்ணே, நீ யார்?" என்று கேட்டான். அவன் பேசிய மொழி அவளுக்குப் புரியவில்லை. அவன் சிங்கள மொழியில் கேட்ட போது அவள் பதில் தந்தாள்.

"நந்ததேவி..." என்றாள் அவள்: "ஜயவர்த்தனபுரக் கோட்டையிலிருந்து அனுராதபுரத்திற்கு வந்தோம். திரும்பும் வழியில் திருடர்கள் கூடவந்த வீரர்களைக் கொன்றுவிட்டு என்னைக் கவர்ந்து வந்தனர். பகவானி கருணையால் தாங்கள் வந்து காப்பாற்றினீர்கள்..."

அவர்கள் காட்டுப் பாதையிலிருந்து பெருந்தெருவிற்கு ஏறியபோது ஐந்து வீரர்கள் வாள்வெட்டுக்கு இலக்காகி சரிந்து கிடந்தனர். பல்லக்குத் தூக்கிகள் பயத்தால் எங்கோ ஓடிவிட்டுத் திரும்பி வந்திருந்தனர்.

"என்னைக் காப்பாற்ற வந்த வீரர்கள் இவர்கள் தாம்.." என்றாள் நந்ததேவி: "வீரரே உம் பெயர் என்ன?"

"சதாசிவப்பெருமாள்... பணிக்கன்..."

"என்னுடன் கோட்டைக்கு வாருங்கள்... என் பெரியதந்தையாரிடம் கூறி தக்க வேலை வாங்கித் தருகிறேன்..."

"நன்றி, நந்ததேவி எனக்காக கோட்டையில் ஒரு வேலை காத்திருக்கிறது... அதற்காகத் தான் போய்க்கொண்டிருக்கிறேன்."

"அரண்மனைக்கா...?"

"ஆமாம்..."

"என்னுடன் வாருங்கள்.."

அவர்கள் பிரயாணம் குதிரைகளில் நிகழ்ந்தது. நந்ததேவி அங்கு நின்றிருந்த குதிரைகளில் ஒன்றில் அலட்சியமாக ஏறிக்கொண்டாள். மண்ணில் இறந்து கிடக்கும் வீரர்கள் வந்த புரவிகள். சதாசிவப்பெருமாள் கரிய குதிரையொன்றில் தாவி ஏறினான்.

"உங்கள் பெரிய தந்தை யார்?.." எனச் சதாசிவப்பெருமாள் கேட்டான்

"இந்த நாட்டின் மன்னர்.. பராக்கிரமபாகு.." என்று அவள் விடை கூறியபோது அவன் திகைப்படைந்து போனான்.

"நீங்கள் இளவரசி?"

அவள் நளினமாகச் சிரித்தாள். அன்று முழுவதும் அவளுடன் அவன் தன் நீண்ட பயணத்தை தொடர்ந்தான். நீண்ட பயணம். அழகிய ஒரு பெண்ணுடன் பயணம் செய்வது இனிமையாக இருந்தது. பாதை மருங்கில் வளர்ந்திருந்த நிழல் தரும் மரங்களும், இடையிடையே சலசலத்து ஓடும் நதிகளும் தராத குளிர்ச்சியை அவள் பேச்சு அவனுக்குத் தந்தது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

விதி என்பது வலிது போலும்.

கோட்டையை அடைந்த போது முதற்சாமம் தொடங்கியிருந்தது. செய்தி அறிந்த மன்னன் பதறிப் போய் ஓடி வந்தான். தம்பியின் மகள் மீது இருந்த மன்னனின் பாசத்தை சதாசிவப்பெருமாள் கண்டான்.

"வீரனே நீ செய்த பேருதவிக்கு நான் என்ன கைமாறு செய்யப் போகிறேன்..." என்றான் பராக்கிரமபாகு.

அவன் செய்த உதவிக்கு கைமாறாக நந்ததேவியை அவன் கரம் பிடித்தபோது மாதோட்ட துறவியை ஒருகணம் எண்ணிக்கொண்டான்.

நந்ததேவிக்கும் சதாசிவப்பெருமாளுக்கும் இடையில் மலர்ந்த காதலிற்கு பராக்கிரமபாகு தடைசொல்லவில்லை. அவர்கள் திருமணம் நடந்த தினத்தில் ஸ்ரீஜயவர்த்தனபுரக் கோட்டை மகிழ்ச்சிப் பிரவாகத்தில் மூழ்கியிருந்தது.

"நந்தா..." என்றான் சதாசிவப்பெருமாள்.

"என்ன"

"உன் அழகு எங்கே? நான் எங்கே?... செந்தாமரை போன்ற உன் மேனி நிறத்திற்கும் கரிய என் உடம்பிற்கும் எப்படிப் பொருந்தும்...?"

"ஆண்களுக்கு நிறம் அழகல்ல... உடல் வலிமை தான் அழகு..."

அவர்கள் வாழ்வு ஆனந்தமாகக் கழிந்தது.

அவர்கள் இல்லறத்தின் இனிய மலர்ச்சியாக முதலாண்டுக் கழிவில் ஆண்குழந்தையொன்றிற்கு நந்ததேவி தாயானாள்.

"நந்தா" என்றான் சதாசிவப்பெருமாள் வாஞ்சையுடன்.

"உங்களைப் போலவே உங்கள் மைந்தன் இருக்கிறான்... அவனுக்கு என்ன பெயர் வைக்கப் போகிறேன் தெரியுமா?..." என்று நந்ததேவி கேட்டாள்.

"சொல் நந்தா என்ன பெயர்?"

"சப்புமல் குமாரயா..." என்றாள் அவள். அவன் சிறிது நேரம் மௌனமாக இருந்தான்.

"பெயர் பிடிக்கவில்லையா...?" என அவள் கேட்டாள் கவலையோடு.

"உனக்குப் பிடித்தால் எனக்குந்தான்... நீ வைத்தது போல நானும் ஒரு பெயர் அவனுக்கு வைக்கட்டுமா?..."

மாதோட்டத்து மயிலின் அகவல் அவன் காதுகளில் திடீரென ஒலித்து நிறைந்தது.

"செல்லுங்கள்... எங்கள் புத்திரனுக்கு இரு பெயர் இருக்கட்டுமே"

அவன் சொன்னான்:

"செண்பகப்பெருமாள்..."



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 5 யுத்தம் வருமா?

அதிகாலையின் இனியபொழுது சின்னமனத்துளார் மன்னனைக் காண வந்தார். கனகசூரியசிங்கைஆரியன் முகம் மலர வரவேற்றான்.

"வாருங்கள் மனத்துளாரே வா மகளே.." மீனலோசினி மன்னனுக்கு வணக்கம் தெரிவித்தாள்.

"உமது மகள் மிக வளர்ந்துவிட்டாள். கடந்த தடவை பார்த்ததற்கும் இப்போது பார்ப்பதற்கும்... அழகாக இருக்கிறாய் பெண்ணே. உனக்கு சகல சௌபாக்கியங்களும் கிட்டட்டும்"

அவ்வேளை அந்த மண்டபத்திற்குப் பரராசசேகரன் நுழைந்தான். அவனைக் கண்டதும் சின்னமனத்துளாரும் மீனலோசினியும் எழுந்திருக்க முயன்றனர்.

"இருங்கள், பெரியவரே..." என்றான் இளவரசன். அவன்விழிகள் அவனை அறியாமல் மீனலோசினியில் நிலைத்துப் பிரியமுடியாமல் பிரிந்தன. அவன் பார்வையின் தாக்கத்திற்கு ஈடுகொடுக்க முடியாமல் அவள் தலையைக் குனிந்து கொண்டாள்.

"பரராசா, மனத்துளார் மகளை அழைத்துச் சென்று அரண்மனைப் பெண்டிருடன் இன்றைய பொழுதைக் கழிக்கச் செய்."

மீனலோசினி தந்தையைப் பார்த்தாள். அவர் விடைகொடுத்ததும் அவள் எழுந்து பரராசசேகரனைத் தொடர்ந்தாள்.

"யுத்த மேகங்கள் நமது அரசைச் சூழத்தொடங்கிவிட்டன சின்னமனத்துளாரே. மனிதர்களை அழிப்பதை வெறுப்பவன் நான். பராக்கிரமபாகுக்கு ஏன் இப்படி ஒரு பேராசை வந்தது? அதற்காக வருகின்ற அநியாய யுத்தத்தை எதிர்கொள்ளாதுவிட முடியாது."

"இன்றைய அரச சபையில் ஒற்றன் நீலகண்டன் கூறியதைக் கேட்டீர்களா, அரசே?"



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"பராக்கிரமபாகு யாழ்ப்பாண அரசின் மீது படையெடுப்பதற்கு ஓர் காரணம் தங்கள் முன்னோன் ஜயவீரசிங்கை ஆரியன் ஜயவர்த்தனபுரக் கோட்டையைத் தாக்கியமை என்பதோடு, இன்னொரு காரணமும் சொன்னார்."

கனகசூரியசிங்கை ஆரியன் சின்னமனத்துளாரை ஏறிட்டுப்பார்த்தான்.

"அது ஒரு காரணமாகுமா" என ஐயத்தோடு கேட்டான்.

"ஏன் ஆகாது, அரசே! நந்ததேவிக்கும் பணிக்கனுக்கும் பிறந்த இரு பிள்ளைகளான சப்புமல்குமாரயாவையும் அம்புலகுமாரயாவையும், பராக்கிரமபாகு தனக்குப் புத்திரர்கள் இல்லாமையால் இவர்களைத் தனது தத்துப் புத்திரர்களாக வைத்து வளர்த்தான். இன்று பராக்கிரமபாகுவின் சொந்த மகள் உலகுடையதேவிக்கு ஜெயவீரன் என்றொரு மகன் பிறந்துவிட்டதால், எங்கே வருங்காலத்தில் தன் சொந்தப் பேரனுக்கு அரசுரிமை கிடையாது போய்விடுமோ என்ற பயத்தில், சப்புமல்குமரய எங்கே அரசுக்கு உரிமை கேட்பானோ என்ற பயத்தில் பராக்கிரமபாகு அவ்விரு குமரர்களையும் அகற்ற வேண்டுமென எண்ணி இப்படியொரு படையெடுப்பை மேற்கொண்டிருக்கலாம்."

"அதை நான் நம்பவில்லை, மனத்துளார். இது காரணமாகாது போகட்டும்... நாட்டின் வருங்காலம் எப்படி இருக்கும்?"

சின்னமனத்துளார் சிறிது நேரம் மௌனம் சாதித்தார். சிறிது சிந்திப்பவர் போலக் காணப்பட்டார்.

"கோள்களின் நிலைகளை அவதானிக்கும் போது இராச்சியத்திற்கு எந்த ஒரு விக்கினமும் வருவதற்கில்லை... அரசே."

இவற்றினைச் சொல்லும் போது அடிமனதில் ஏதோ வலி ஏற்படுவதை சின்னமனத்துளார் உணர்ந்தார். கனகசூரியசிங்கைஆரியன் சிறிது நேரக்கழிவில் அவரை ஏறிட்டுப் பார்த்தான்.

"பராக்கிரமபாகு சரியான நேரம் பார்த்துப் படையெடுத்திருக்கிறான்."

"புரியவில்லை, மன்னவா..." என்றார் சின்னமனத்துளார் வியப்புடன்.

"தமது அரசிற்கு எப்போதும் துணையாக இருக்கும் விஜயநகர இராச்சியத்தில் இன்று உண்ணாட்டுக் குழப்பங்கள் தலைதூக்கியுள்ளன. தென்னிலங்கை மன்னரின் ஆதிக்கம் வடபிரதேசத்தில் நிலைக்காது பாதுகாத்துவந்தது, விஜயநகர அரசின் ஆதரவு நமக்கு இருந்தமையே. நமது முன்னோன் ஜயவீரசிங்கை ஆரியன் கோட்டைமீது படையெடுத்த போது கூட விஜயநகர மன்னன் விருபாக்கனன் படைதந்து உதவியுள்ளார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இன்று விஜயநகரத்தில் ஏற்பட்டிருக்கும் குழப்பங்களைத் தனக்குச் சாதகமாகப் பராக்கிரமபாகு பயன்படுத்தப்போகிறான். இந்திய - ஈழ வர்த்தகம் சிங்கை நகரான் கரங்களில் இருப்பதும், மன்னார் முத்துக் குளித்தல் சிங்கைநகரான் ஆதிக்கத்தில் இருப்பதும் பராக்கிரமபாகுவால் பொறுக்க முடியாதவை மனத்துளாரே. நமது இராச்சியம் வன்னிப் பிரதேசங்களை உள்ளடக்கி மேற்கே சிலாபத் துறையிலிருந்து கிழக்கே கோணேஸ்வரம் வரை பரந்திருக்கிறது. பதினெட்டு வன்னியர்களும் நமக்குத் திறை செலுத்துபவர்கள். கோட்டை இராச்சியம் திறை செலுத்தாது விட்டும் நாம் அதை பெரிதுபடுத்தாது விட்டது நமது பலவீனத்தை நிரூபித்துவிட்டது. நமது இராச்சியத்தின் பொருள்வளத்தை பெருக்குவதில் நான் கவனம் செலுத்திவிட்டேன். பாதுகாப்புவலிமையைப் பெருக்கத் தவறிவிட்டேன் போலப்படுகிறது''

மன்னனின் குரலில் கவலை தொனித்தது.

சின்னமனத்துளார் மன்னனுக்கு ஆறுதல் வார்த்தைகளை கூறினார்.

அன்று இரவு சிங்கை நகரில் தங்கிவிட்டு மறுநாள் காலை மாவிட்டபுரத்திற்கு பயணமானார்கள். பயண வண்டியில் தந்தையும் மகளும் வெகுநேரம் எதுவும் பேசாது சிந்தனை வயப்பட்டிருந்தனர். வீரராயன் வேகமாகக் காளைகளை விரட்டியபடி மெதுவாகப் பாடல் ஒன்றினை முணுமுணுத்தான்.

சின்னமனத்துளாரின் சிந்தனையில் கனகசூரியசிங்கை ஆரியனின் கவலைதேய்ந்த முகம் அடிக்கடி தோன்றியது. மன்னன் நெருக்கடியைக் கண்டு பயப்படாதுவிட்டாலும் நிகழக்கூடிய அனர்த்தங்களுக்காக கவலைப்பட்டான்.

மீனலோசினியின் சிந்தனையில் இளவரசன் பரராசசேகரனுடன் கழித்த இனிய வேளை வட்டமிட்டது. அந்தப்புரத்து அரண்மனைப் பெண்டிரிடம் அவளை அழைத்துப் போகும் போது அவன் குறும்பாகப் பேசினான்.

''சின்னமனத்துளார் மகளே'' என்றான். அவள் அவனை ஏறிட்டுப் பார்த்தாள். இதழ்கிடையில் புன்னகை மலர்ந்தது.

''என் பெயர் மீனலோசினி...''

''அப்படியா?'' என்றான் இளவரசன்: ''உன் விழிகள் அப்படித் தான் இருக்கின்றன.''

அவள் எதுவும் கூறாமல் தலையைக் குனிந்துவிட்டாள். அன்று மாலைவரை அரண்மனை அந்தப்புரத்து மகளிருடன் இருந்தாள். இளவரசன்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நான்கு தடவைக்கு மேல் ஏதாவது காரணத்துடன் அவள் இருக்குமிடத்திற்கு வந்து சென்றான்.

அவள் இதயத்தில் இனந்தெரியாத குதூகலம் ஆட்கொண்டது.

வீரராயன் வண்டில் காளைகளை மெதுவாக நடக்கவிட்டான். கிழக்கு ஆதவனின் கதிர்கள் எழுந்து பரவியபோது அவர்கள் வண்டில் தொண்டமானாற்றினைத் தாண்டியிருந்தது.

"என்னம்மா கடும் யோசனை?" என மகளை சின்னமனத்துளார் கேட்டார். அவள் திடுக்கிட்டுத் தகப்பனைப் பார்த்தாள்.

"ஒன்றுமில்லை அப்பா. நீங்கள் தான் கடுமையாக யோசித்துக் கொண்டு வந்தீர்கள். அப்பா, இவர்கள் எங்களைப் போல பிராமணர்களா?"

"எவர்கள்?.."

"நமது மன்னரையும் அவர் குடும்பத்தினரையும் சிங்கை ஆரியர் என்கிறோமே?"

"ஓ அதுவா?.." எனச் சின்னமனத்துளார் சிரித்தார். "இவர்களின் முன்னோர்கள் பிறப்பால் ஆரியர்களா என்பது நன்றாகத் தெரியாது. ஆனால் இராமேஸ்வரத்துப் பிராமணர் அரச குடியில் சம்பந்தம் செய்தார்கள். அதன் பின் உபவீதம் அணிந்து ஆரியவரசர் என நாம் புனைந்து, இராமேஸ்வரத்தை தம் தேயத்தினாளுகைக்குட்படுத்தி, அதனால் சேதுகாவலன் எனப் புதுப்பெயரும் புனைந்து, விடைக்கொடியும் சேதுலாஞ்சினையும் பொறித்து சிங்கை நகரிலிருந்து அரசாண்டு வருகிறார்கள். சேது என்பது சிங்கை ஆரிய அரசர்களைக் குறிப்பதாக இருக்கின்றது. அவர்கள் இராமேஸ்வரத்துப் பிராமண அரச குடியில் பெண் எடுத்ததால் ஆரியராகக் கருதப்படுகிறார்கள். ஏறக்குறைய இருபது தசாப்தங்கள் கடந்த விடயம்..."

1450 ஆம் ஆண்டு ஒரு காலை வேளையில் அலங்காரமான பயண வண்டில் ஒன்றில் சிங்கை நகரிலிருந்து மாவிட்டபுரத்திற்குப் பயணம் செய்துகொண்டிருந்த சின்னமனத்துளாரும் அவரின் மகள் மீனலோசினியும் வெவ்வேறு சிந்தனைவயப்பட்டிருந்தனர்.

"அப்பா... இந்த யுத்தம் வராமல் தடுக்க மார்க்கமில்லையா?" என மீனலோசினி இருந்தாற்போலக் கேட்டாள்.

"நான் என்ற கர்வமும் அகங்காரமும், பழிவாங்கும் உணர்வும் ஆசையும் மனிதரிடமிருந்து அற்றுப்போனால் உலகில் யுத்தங்கள் வரா."



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"எனக்கு இக்காரணம் சரியாகப்படவில்லை அப்பா. நான் நினைக்கிறேன், தென்னிலங்கையில் ஏற்பட்டிருக்கும் பொருளாதாரப் பஞ்சத்தினை திசை திருப்ப மன்னன் பராக்கிரமபாகு யாழ்ப்பாணத்தின் மீது படையெடுக்கிறானோ?"

மகளை வியப்புடன் பார்த்தார்.

அவள் தொடர்ந்தாள்: "அப்பா உலகில் சமாதானத்தை நிலை நாட்ட ஆயுதப் பலம் வேண்டும்."

"ஏன்?... ஏன் பெண்ணே?"

"இன்று இன்று யாழ்ப்பாண இராச்சியத்தின் படைப் பலமின்மை தான் பராக்கிரமபாகுவை படையெடுக்கத் தூண்டியிருக்கின்றது, அப்பா"

"உன் சிந்தனைகள் போகிற போக்கு..." என்று சிரித்தார் சின்னமனத்துளார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஆரியவேட்டை 6

மாலை கவியத் தொடங்கிய வேளையில், பாலாவியாற்றின் இடது கரையில் சப்புமல்குமாரய என்ற செண்பகப்பெருமாளின் கரிய குதிரை பலமாகக் கால்களைப் பதித்து ஏறியது. திடகாத்திரமான கருங்குதிரை மீது செண்பகப்பெருமாள் ஆரோகணித்து அமர்ந்திருந்தான்.

அவன் தன்னருகில் குதிரையொன்றில் அமர்ந்திருந்த சேனாதிபதி விஜயபாகுவைத் திரும்பிப் பார்த்துவிட்டு, வலக்கரத்தை குதிரையின் பின்பக்கத்தில் இருந்தவாறே ஊன்றித் திரும்பிப் பார்த்தான்.

பாலாவியாற்றைக் கடந்தும் சேனாவீரர்கள் அந்தக் காட்டுப் பாதையில் கண்ணுக் கெட்டாத்தூரம் வரையில் பரந்து காணப்பட்டனர். குதிரை வீரர்களும், அவர்களைத் தொடர்ந்து உணவுப் பொருட்களையும் ஆயுதங்களையும் காவிவரும் இழுவை வண்டில்களும் வந்தகொண்டிருந்தன. கடல் போன்ற இச்சேனாவீரர் ஊர்வலத்தின் இறுதியில் பன்னிரண்டு கொம்பன் யானைகள் யுத்த ஆவேசம் கொண்டனவாக நின்றிருந்தன.

நீண்டதூரம் பயணம் செய்துவந்த களைப்பு வீரர்களிடம் காணப்பட்டது.

"இவ்விடத்தில் இன்றிரவு தங்குவோம் பிரபு." என்று கூறியவாறு செண்பகப்பெருமாளை விஜயபாகு ஏறெடுத்துப் பார்த்தான்.

"அப்படியே ஆகுக...." என்றான் செண்பகப்பெருமாள். "இப்பிரதேசம் பனங்காமத்து வன்னிமைக்குரியது. காவல் பலமாக இருக்கட்டும்."

தனது புரவியை முன்னோக்கி நடக்கவிட்டவன் ஏதோ நினைவுக்கு வந்தவனாக புரவியை இழுத்து நிறுத்திவிட்டு, விஜயபாகுவை அழைத்தான். விஜயபாகு அவனருகே தனது புரவியை விரைந்து செலுத்தினான்.

"பனங்காமத்து வன்னியரிடம் தூதுவரை அனுப்புக. இந்த யுத்தத்தில் நமக்கு உதவுவானா என்றறிக. இல்லாவிடில் நமக்கு உபத்திரவம் தராதிருப்பானா என்றறிக."



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

செண்பகப்பெருமாளின் குரலும் அவன் உடல் வாகும் கம்பீரமும், கேட்போர் நெஞ்சினைக் கலக்கமடையவும் வைக்கும் இயல்புடையது. கருங்குதிரை மீது அவன் அமர்ந்திருக்கும் போது கரியபெருமாளின் உடல் கருங்குன்றம் போன்று வைரம் பாரித்திருக்கும், மார்பினை மறைக்கும் கவசத்தினை கழற்றி வைத்துவிட்டு அவன் நிற்கும் போது, ஒட்டிய அவன் வயிறும் விரிந்து திரண்ட அவன் மார்பும் பார்ப்போரை ஒரு கணம் பயம் கொள்ள வைக்கும்.

தென்னிலங்கையில் அவனை எதிர்நின்று எதிர்க்கக்கூடியவரசர்கள் எவருமில்லை எனப்புகழப்படுபவன். வாள்வீச்சில் நிகரற்றவன். பராக்கிரமபாகுவின் தந்த புத்திரனாக இருந்ததால் இளவரசன் என்ற அந்தஸ்தும், படைவீரர்களின் தலைவன் என்றிருந்ததால் தண்டநாயக்கன் என்ற அந்தஸ்தும் அரசியலில் அவனை வலிமை படைத்தவனாக்கி யிருந்தன.

விஜயபாகு, தண்டநாயக்கனை வினயத்துடன் பார்த்தான்.

"பனங்காமத்து வன்னியன் அவற்றிற்கு ஒத்துக் கொள்ளாவிடில்...."

செண்பகப்பெருமாள் இடைமறித்தான்: "ஒப்புக்கொள்வான். நம் பலத்தினை பனங்காமத்து வன்னிமை அறியும். பின்னில வன்னிமைகள் பதினெட்டுக்கும் நிகழ்ந்த கதி, முன்னில வன்னிமைகளுக்கு நிகழாதிருக்க அவன் முயல்வான்...."

செண்பகப் பெருமாள் எதனைக் குறிப்பிடுகிறான் என்பதை விஜயபாகு அறிவான். பராக்கிரமபாகுவின் படைத்தலைவனாகச் செண்பகப்பெருமாள் பதவியேற்றதும், முதல் நிகழ்த்திய யுத்தங்கள் வன்னிக்குறுநில மன்னர்களுக்கு எதிரானதாகவே இருந்தது. யாழ்ப்பாண இராச்சியத்திற்கும் தென்னிலங்கைக் கோட்டை இராச்சியத்திற்கும் இடையில் வன்னி அரசுகள் பல காணப்பட்டன. இவற்றில் யாழ்ப்பாண அரசினை அடுத்து அமைந்திருந்த கரைச்சி, புதுக்குடியிருப்பு, முள்ளியவளை, கரிக்கட்டுமூலை, துணுக்காய், பனங்காமம், மேல்பத்து என்பன காணப்பட்டன. சின்னச் செட்டிக்குளத்திற்கும் கரிக்கட்டு மூலைக்கும் தெற்கே பரந்திருந்த மகாவன்னி முதலான வன்னிமைகள் பின்னில வன்னிகள் எனப்பட்டன. முன்னில வன்னிமைகள் யாழ்ப்பாண இராச்சியத்திற்கும், பின்னில வன்னிமைகள் தென்னிலங்கை மன்னனுக்கும் திறை செலுத்தி வந்தன.

பின்னில வன்னிமைகள் பதினெட்டையும் பராக்கிரமபாகு அடக்கி தன்வலிமையை நிலைநாட்டிக் கொண்டான். மகாவன்னிமைகள்,



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

திருகோணமலை வன்னிமைகள், மட்டக்களப்பு வன்னிமைகள், புத்தள வன்னிமைகள் இவற்றில் அடங்கின.

பறங்கியாற்றின் இடது கரையில் பரந்து காணப்பட்ட வெட்டையில் படைவீரர்கள் பாடியமைந்தனர். தலைவனுக்கென அமைக்கப்பட்ட பாசறையில் செண்பகப்பெருமாள் ஓய்வாக அமர்ந்திருந்தான். அவன் முன் விஜயபாகு நின்றிருந்தான்.

இருந்தாற்போல செண்பகப்பெருமாள் புன்னகைத்தான்.

"கிராசந்தேஸய படித்திருக்கிறாயா, விஜயபாகு?"என செண்பகப்பெருமாள் கேட்டான். அவன் அறியவில்லை எனபதற்கு அறிகுறியாகத் தலையை அசைத்தான்.

"அது ஒரு அற்புதமான காவியம், விஜயபாகு, என்தந்தை பராக்கிரமபாகு அரசனாகிய பின், முன் எந்த அரசனும் அடக்கியிராத பதினெட்டு வன்னிமைகளையும் தண்டெடுத்து அடக்கியமையை அந்த நூல் விபரிக்கின்றது. எம்மன்னன் மீது சிங்களக் கவிஞர்கள் அடங்காக் காதல் கொண்டிருக்கிறார்கள். புத்தளத்து வன்னிமைக்கும் பராக்கிரமபாகுவிற்கும் நடைபெற்ற யுத்தத்தை முக்கரகட்டன என்ற நூல் பாடுகின்றது. புத்தளத்து முக்குவருடன் கடும்போர் நிகழ்த்தி முக்கர அரசனை நிர்மூலமாக்கியதை பரக்கும்ப சிரித என்ற நூல் பாடுகின்றது, விஜயபாகு."

"உங்களுடைய அரிய வெற்றியையும் பாட ஒரு புலவன் வருவான் பிரபு."

செண்பகப்பெருமாள், தளபதியை நிமிர்ந்து பார்த்தான். அவன் விழிகளில் புகழ் மயக்கம் கவ்வியது.

மறுநாள் அதிகாலை சேனாவீரர்கள் வடக்கு நோக்கிப் புறப்பட்டார்கள். பூநகரியை நோக்கிக் காட்டுப் பாதையில் படை மெல்ல மெல்ல நகர்ந்தது. பகற்பொழுதிலும் நிழல் நிறைந்து மாலைநேரக் குளிர்மையைத் தரும் பாதை.

படைவீரர்களில் பெரும்பான்மையினர் காலாட்படையினர். அதனால் வேகமாக அவர்களால் முன்னேற முடியவில்லை.

குதிரை வீரர்களும் தம் பயண வேகத்தை மட்டுப்படுத்தி மெல்லெனத் தம் புரவிகளை நடத்தினர்.

செண்பகப்பெருமாள் தன்னருகில் வந்து கொண்டிருக்கும் விஜயபாகுவைத் திரும்பிப் பார்த்தான்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"சிங்கை ஆரியனை வெற்றிகொண்டு, அவ்வெற்றியின் சான்றாக சிலாசாசனம் பொறிக்க வேண்டும். அதன் மூலந்தான் நமக்கு ஏற்பட்டிருக்கும் கலங்கத்தைத் துடைக்க முடியும். அளகேஸ்வர யுத்தத்தில், கம்பளையில் சிங்கை ஆரியன் வெற்றியடைந்தான். அவ்வெற்றியை அவன் கல்லில் பொறித்து மீண்டான்."

"அது கனகசூரியசிங்கை ஆரியனின் பாட்டனார் ஜயவீரசிங்கை ஆரியன்..."

"உண்மை" என்றான் சப்புமல் குமாரயா: அச்சிலாசாசனத்தில் சேது என தம் அரச இலச்சினையைப் பொறித்து, அதன்கீழ் கங்கணம் வேற்கண்ணினையாற் காட்டினார். காமார்வளைப் பங்கயக்கை மேற்றிலதம் பாரித்தார். பொங்கொலிநீர்ச் சிங்கைநகராரியனைச் சேரா வனுரேசர் தங்கள் மடமாதர் தாம். இந்தச் சிலாசாசனத்தின் பொருள் யாழ்ப்பாணத்தில் அர்த்தப்படுத்திக் காட்ட வேண்டும். பங்கயக்கை கொண்டு கனகசூரியசிங்கை ஆரியனின் பெண்கள் தம் திலகங்களை அழிப்பதைக் காணவேண்டும்."

"நிச்சயம் நடக்கும்..." என்றான் விஜயபாகு.

ஸ்ரீஜயவர்த்தனபுரக் கோட்டையிலிருந்து புறப்பட்டதிலிருந்து எதுவிதமான எதிர்ப்பும் வழியில் ஏற்படவில்லை. இரண்டு காதம் நீளமான சேனாவீரர்களின் வன்னிக் குறுநில அரசர்களின் கலக்கத்திற்கு காரணமாகி, சப்புமல்லின் படைக்கு எதிராக வாள் எடுக்கத் துணிவைத் தரவில்லை.

கோட்டையிலிருந்து புறப்பட்ட படைவீரர்கள் நான்காம் நாள் மகாவன்னியில் பாசறை அமைத்துத் தங்கினர். பின்னர் செட்டிக்குளத்திலும் பனங்காமத்திலும் தங்கிநிற்க நேர்ந்தது. பாலாவியாற்றினைக் கடந்ததும் யாப்பாப்பட்டினத்தை நெருங்குகின்றோம் என்ற எண்ணம் உத்வேகத்தையும் கலக்கத்தையும் ஒருங்கே கொடுத்தது.

இருபத்திரண்டாம் நாள் செண்பகப்பெருமாள் பூநகரித்துறையை அடைந்தான். நாகதேவன் துறையிலிருந்து எதிரே களப்புக்கடலிற்கு அப்பால் பரந்து கிடக்கும் யாழ்ப்பாண இராச்சியத்தை ஆவலோடு பார்த்தான். இச்சிறிய அரசிலிருந்து தென்னிலங்கை மன்னரிடம் திறைபெற்ற அரசர்கள் இங்குதான் இருந்தார்கள். தொண்டமானாற்றின் கரையில் வல்லிபுர வெளியில் கம்பீரமாக எழுந்து நிற்கும் சிங்கைநகரின் எழிலினைப் பலர் சொல்லக் கேட்டிருக்கிறான்.

"இன்றே இந்தக் கடலைத் தாண்டுவோமா?" என விஜயபாகு கேட்டான்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"வேண்டாம்... நாளை அதிகாலை கடப்போம், விஜயபாகு. நாம் யுத்த விளிம்பில் கால் வைக்கிறோம். கனகசூரியசிங்கை ஆரியனின் படையில் நால்வகைப் படைவீரர் இருக்கின்றனர். கொண்டைக்காரத் தமிழர், பணிக்கர், வடக்கர், வலமுனிவரிசையோர் என அவர்களை அழைப்பர். கொண்டைக்காரத் தமிழர் வேல் ஏந்திய கையினர். அவர்கள் முன் ஈட்டி வீச்சில் எதிர்நிற்பது கடினம். வலிய அவர்களின் கரங்களில் இருந்து விடுபடும் வேல்கள், இலக்கினை வீழ்த்தாது விழா. பணிக்கர்கள் யானைப்படை வீரர்கள்...."

சப்புமல் குமாரயா பணிக்கர்கள் என்று உச்சரித்துவிட்டு சிறிது தயங்கி நின்றான். அவன் தயக்கத்திற்கான காரணத்தை புரிந்த கொண்ட விஜயபாகுவின் இதழ்க்கோடியில் அவன் அறியாமலேயே ஏளனப் புன்னகையை விரியவிட்டான். பணிக்கன் சதாசிவப்பெருமாளுக்கும் நந்ததேவிக்கும் பிறந்த சப்புமல்குமாரய இன்று தென்னிலங்கைப் படையின் தண்டநாயக்கன்.

செண்பகப்பெருமாள் தொடர்ந்தான். "வடக்கர்கள் தஞ்சைநாயக்க மன்னனின் உதவி வீரர்கள். வலமுனிவரிசையோர் மிகச் சிறந்த வாள்வீரர்கள், வேளக்காரப் படை போன்றவர்கள் மன்னனையும் அவன் குடும்பத்தினரையும் தம் உயிரையும் கொடுத்தும் காப்பதாகச் சத்தியம் செய்தவர்கள். வலமுனிவரிசையின் தலைவன் கூபகேந்திரன் மாபெரும் வீரன். இந்த நால்வகைப் படைக்கும் தண்டநாயக்கனாக இருப்பவன் கனகமழவன்... அவனே சேனாதிபதி."

இந்த விபரங்கள் விஜயபாகுவிற்கும் தெரிந்தவையாம்.

மறுநாள் அதிகாலை உதயம், யாழ்ப்பாண சுதந்திர இராச்சியத்தின் அஸ்தமனத்திற்குரிய ஆரம்பமாக அமைந்தது.

பூநகரியை கடந்து, சிங்களப்படை வீரர்கள் சரிநேர் வடக்கே சிங்கைநகரை நோக்கி முன்னேறத் தொடங்கினர். கச்சாயின் எல்லையில் தமிழர் படை அவர்களை எதிர்கொண்டது. திரண்டு கடலலையெனப் பொங்கிப் பிரவகித்து எதிர்த்த சிங்களப் படையின் முன் தமிழர் படை முதன் முதலாக வீழ்ச்சியடையத் தொடங்கியது.

செண்பகப்பெருமாளோ கண்டோர் நடுங்கும் கருங்குதிரை மேலமர்ந்து தன் சேனாவீரர்களுக்கு உற்சாக வார்த்தைகள் கூறிக்கொண்டே எதிரி படையுட் புகுந்து இடதுசாரி வலசாரி சுழன்று, நூற்றுக்கணக்கான வீரர்களைத் தலை துணித்துத் தமிழ்ச் சேனையைப் புறங்கொடுத்தோடச் செய்தான்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இரு தரப்பிலும் பெரும் அழிவுகள் ஏற்பட்டன. கொண்டைக்கார தமிழரின் வேல்கள் மார்புகளில் தாக்கி சிங்கள வீரர்களை நிலத்தில் சரித்தன. வடக்கர் வீரர்கள் ஆவேசமாக வாள்சுழற்றிப் போராடினர். பணிக்கர்கள் தரையில் நின்று போர் புரிய நேர்ந்தது. தமிழர் படை பெரும் அழிவிற்குள்ளாகியது.

செண்பகப்பெருமாளின் படை தொண்டமானாற்றைக் கடந்து சிங்கை நகரில் இரண்டாம் நாள் மாலை பிரவேசித்தது. போர்வெறி கொண்ட சப்புமல்குமாரய பெருங்குரலில் உத்தரவிட்டான்.

"இந்த நகரின் மாடமாளிகைகளை அழியுங்கள். ஆயுதம் ஏந்திய எவரையும் இரக்கமின்றிக் கத்திக்கு இரையாக்குங்கள். வழிபாட்டிடங்கள் தவிர்ந்த அனைத்துக் கட்டிடங்களும் தரைமட்டமாக வேண்டும்."

அவன் வார்த்தைகள் நிதர்சனமாகின. சிங்களப் படைவீரர்கள் நகரினை சுட்டெரித்தார்கள். கட்டிடங்களை யானைகளை ஏவித் தரைமட்டமாக்கினார்கள். சிங்கை நகரின் வீதிகளில் இரத்த ஆறு பாய்ந்தது. எங்கும் மரண ஓலம். பயத்தின் குரல் ஒலிகள். நகரினை விட்டு மக்கள் நாலாபக்கங்களிலும் பரவி ஓடினார்கள். நகரின் மத்தியில் கொடிக் கம்பத்தில் பறந்து கொண்டிருந்த இடபக்கொடி ஸ்தம்பத்தோடு மண்ணிற் சரிந்தது.

அரண்மனையை நோக்கி செண்பகப்பெருமாள் படையை நகர்த்தினான். வலமுனிவரிசை வீரர்கள் அவன் படையை எதிர்கொண்டு மடிந்தனர். வெற்றி எக்காளமிட்டபடி சிங்களப் படை சிங்கைநகர் ஆரியனின் அரண்மனைக்குள் புகுந்தது.

செண்பகப்பெருமாளின் விழிகள் வெறியுடன் அரண்மனையெங்கும் கனகசூரியசிங்கை ஆரியனையும் அவன் குடும்பத்தினரையும் தேடின. இரத்தம் தோய்ந்த வாளிற்கு அவர்களை இரையாக்கி தன் ஆதிக்க வெறியைத் தீர்த்துக் கொள்ள அவாப்பட்டான்.

"எங்கிருந்தாலும் அவனைக் கண்டுபிடியுங்கள்...." என அவன் கூச்சலிட்டான்

அதேவேளை தொண்டைமானாற்றுத் துறையிலிருந்து மரக்கலம் ஒன்று புறப்பட்டது. அதன் தளத்தில் நின்றிருந்த கனகசூரியசிங்கை ஆரியனும் அவன் குடும்பத்தினரும் ஏக்கத்தோடு சிங்கை நகரைப் பார்த்தனர்.

வானளாவித் தீ நாக்குகள் எழுவது தெரிந்தது. அவன் விழிகள் கலங்கின.

"ஆரிய வேட்டையாடும் பெருமாள் வாழ்க" என்ற விஜயபாகுவின் வெற்றி முழக்கம் அங்கு கேட்க நியாயமில்லை.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பாவிகள் செயல் 7

சிங்கைநகர் அரண்மனைக்குள் வெகு அட்டகாசமாகச் செண்பகப்பெருமாளின் படை புகுந்து நகர் முழுவதும் கொள்ளையிடப்பட்டு தீ நாக்குகளின் கோரப்பிடியில் கருகிக் கொண்டிருந்த வேளையில், போர் வெறியோடு மாளிகை எங்கும் கனகசூரியசிங்கை ஆரியனையும் அவனது குடும்பத்தினரையும் சிங்களப்போர் வீரர்கள் தேடினார்கள்.

படைத்தளபதி விஜயபாகு, வீரர்களுக்கு கட்டளையிட்டான்.

சல்லடைபோட்டுத் தேடியும் அரச குடும்பத்தினரை மாளிகையில் காணவில்லை. அவர்கள் வலமுனிவரிசையினரால் ஏற்கனவே மரக்கலம் ஏறி திருக்கோவிலூர் நோக்கி பயணப்பட்டிருக்கும் செய்தி அவர்களுக்கு தெரிந்திருக்கவில்லை.

சப்புமல் குமாரயாவின் முகம் கறுத்தது, மழை வானமாக.

''தந்தையே யாழ்பாப்பட்டுணவின் மன்னனையும் அவன் குடும்பத்தினரையும் முக்கிய பிரமுகர்களையும் விலங்குமாட்டி ஜயவர்த்தனபுரக் கோட்டைக்கு இழுத்து வருவேன்...'' எனத் தனது வளர்ப்புத் தந்தை பராக்கிரமபாகுவிற்கு அவன் அளித்து வந்த வாக்குறுதி என்னாவது? அவன் ஆத்திரத்தோடு விஜயபாகுவைப் பார்த்தான். கண்களில் தீப்பொறி பறக்கக் கர்ச்சித்தான்:

''ஒரு பகுதிப் படையுடன் நீ உடன் நல்லூருக்குப் புறப்படு. மந்திரி நகரில் சிங்கை ஆரியன் கரந்துறைந்திருக்கக் கூடும். எப்படியும் அவன் கைப்பற்றப்பட வேண்டும்.''

''நல்லது மன்னா...'' எனப் படைத்தளபதி புறப்பட்டான். அவன் சற்றுத் தூரம் முன் செல்வதற்குள் சப்புமல்குமாரயாவின் குரல் தடுத்து நிறுத்தியது.

''இந்த இராச்சியம் இப்போது எங்களுடையது. நினைவிருக்கட்டும். நல்லூருக்குச் செல்லும் வழியில் எதிர்ப்படும் கிராமங்கள் பாதிக்கப்படக் கூடாது.''



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

விஜயபாகு தயங்கி நின்றான். பின்னர் மெதுவாகக் கேட்டான். "செல்லும் வழியில் எதிர்ப்புக்கள் கிளம்பினால்..."

"ஆயுதம் ஏந்தியவர்களை தூக்கிலிடு...." என சப்புமல்குமாரயா கோபத்தோடு கத்தினான். " காலத்தைத் தாமதப்படுத்தாதே. உடன் வேகமாகப் புறப்படு. சிங்கை நகரில் கனகசூரியனைத் தேடிப்பார்த்துவிட்டு மிகுதிப் படையுடன் நாளை நானும் நல்லூருக்கு வருகிறேன்..."

விஜயபாகு ஒரு பகுதிப் படையுடன் சிங்கைநகரிலிருந்து நல்லூரிற்கு புறப்பட்டான். காலாட்படையும் குதிரை வீரர்களில் ஒரு பகுதியினரையும் சிங்கைநகரில் இருத்திவிட்டு நல்லூர் நோக்கி புரவியில் அமர்ந்த வீரர்கள் நானூறு பேர் வேகமாக விரைந்தார்கள்.

நமது கதை நிகழும் காலத்தில் யாழ்ப்பாணக் குடாநாட்டில் அழகும் அமைதியும் செங்கோலோச்சும் கிராமங்கள் பரவலாகப் பரந்து காணப்பட்டன. யாழ்ப்பாணக் குடாநாட்டின் கிழக்குக் கோடியில் இராச்சியத்தின் தலைநகர் அமைந்திருந்தது. கந்தரோடை, மாவிட்டபுரம், புத்தூர், தொல்புரம், கோயிலாக்கண்டி, நல்லூர், நெடுந்தீவு, ஊர்காவற்றுறை, திருநெல்வேலி முதலியன குறிப்பிடத்தக்க கிராமங்களாக விளங்கின. அவற்றில் நல்லூர் மந்திரியின் வதிவிடக் கிராமமாக விளங்கி யாழ்ப்பாண இராச்சியத்தின் இரண்டாம் தலைநகராகவும் கருதப்பட்டது.

நல்லூர் எழில்மிகுந்தவொரு கிராமமாக விளங்கியது. சோலைகளும் வயல்களும் ஆலயங்களும் நிறைந்த அமைதியான ஊர். இந்த ஊரினை உருவாக்கிய பெருமை சோழப் பிரதிநிதியாக இங்கிருந்து நிர்வகித்த மந்திரி புவனேகவாகு என்பவரையே சாரும்.

மந்திரி மாளிகைக்கு அருகில், தென்கிழக்கே அமைந்திருந்த குருக்கள் வளவு என்ற இடத்தில் (இன்றைய நல்லூர்க் கந்தன் ஆலயம் அமைந்துள்ள இடம்.) கந்தவேளுக்கு பெரியதொரு ஆலயம் அமைப்பித்திருந்தார். குமாரதந்திர விதிப்படி அந்த ஆலயம் அமைந்திருந்தது. கர்ப்பக்கிரகமும், உட்பிராரமும், வெளிமண்டபமும் கொண்ட அழகிய கோயில். தூலலிங்கமாக தூபியும், சூக்குமலிங்கமாக கந்தனின் சிலாவிக்கிரகமும், பத்திரலிங்கமாகப் பலிபீடமும் அக்கோயிலில் இருந்தன. கர்ப்பக்கிரகத்தினுள் மூலவிக்கிரகமாக கந்தவேளின் சிலாவிக்கிரகம் இருந்தது.

சப்புமல் குமாரயவின் படைத் தலைவன் விஜயபாகு, ஆவேசத்துடன் புரவிவீரர்கள் தொடர்ந்துவர வேகமாக முன்னேறினான். வழியில் அவன் படையை எதிர்த்துநிற்பார் எவருமில்லை. தென்னிலங்கைப் படை விரைந்து வருகின்ற செய்தி கேட்டு ஓடி ஒளித்தவர்கள் பலர்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அன்று மாலை கழியும் வேளையில் விஜயபாகு தன் படையுடன் நல்லூரில் பிரவேசித்தான். சிங்கை நகர் பற்றியெரிகின்ற செய்தி ஏற்கனவே நல்லூரில் பரவி இருந்ததால் மக்கள் தம் இல்லங்களை விட்டு அகன்றிருந்தனர். நல்லூரினுள் புகுந்த படைவீரர்கள் முதலில் மந்திரியின் மாளிகையினுள் நுழைந்தனர். அம்மாளிகையினுள் எவரும் இல்லை. அம்மாளிகையில் திரண்டு கிடந்த செல்வங்கள் அவர்களை கால்பெயர விடவில்லை. அந்த மாளிகையில் சல்லடை போட்டுத் தேடினார்கள். எவரும் அகப்படவில்லை.

ஆத்திரம் எல்லை கடந்தது. மந்திரி மாளிகையை கொள்ளையிட்டதுடன் எரியூட்டிவிட்டனர்.

விஜபாகு இவற்றினைக் கண்டான். எனினும் படைவீரர்களைத் தடுக்க அவன் முயலவில்லை. சிங்கைநகரில் கொள்ளையிட அனுமதிக்காது இங்கு அழைத்து வந்திருக்கிறான். தடுத்தால் கலவரம் மூளலாம் என எண்ணமிட்டான். படைத்தலைவன் தடுக்காவிட்டதும் படைவீரர்கள் உற்சாகம் கொண்டனர். கரத்துறைந்த மன்னன் கனகசூரியசிங்கை ஆரியனையும் அவனது குடும்பத்தையும் தேடிப்பிடிப்பதை மறந்து வீடுகளுக்குள் புகுந்து கொள்ளையிடுவதிலும் பின்னர் அவற்றிற்கு எரியூட்டுவதிலும் ஈடுபடத் தொடங்கினார்கள்.

நல்லூர் முதன் முறையாகக் கலங்கியது. மக்கள் நாலாதிக்குகளிலும் பயந்து ஓடினார்கள். எங்கும் மரண பீதி, அவலக்குரல்கள் எழுந்தன. பயந்து ஓடும்போது வீரர்களுக்கு எதிர்ப்பட்டோர் பலியாகினர்.

நல்ல நிலவுக்காலம், இரவு உறக்கமின்றி அந்த அழகிய ஊரைப் படைவீரர்கள் பாழ்படுத்தினர். அதிகாலை அழுதபடி பிறந்துகொண்டிருந்த வேளையில் போர் வீரர்கள் குருக்கள் வளவில் கந்தவேளின் ஆலய முன்றலில் கூடினர்.

இனிக் கொள்ளையிடுவதற்கு எதுவுமில்லை.

"ஏன் இல்லை?" என்றான் ஒரு வீரன்: "இந்தக் கோயிலில் ஆபரணங்கள் இருக்கும்."

அவர்கள் சிறிதும் தயங்காது ஆலயத்தை உடைத்துத் திறந்தனர். எதிர்ப்பட்டவற்றினை அடித்துச் சிதைத்துத் தள்ளினர். காப்பக்கிரகத்தின் கதவுகளை பிளந்து உட்சென்று, சிலாவிக்கிரகத்தை பெயர்த்தெறிந்தனர். அவர்கள் எதிர்பார்த்த தங்க நகைகள் அங்கு கிடைக்கவில்லை. ஏமாற்றம் ஆத்திரமாக மாறியது. புனிதமான அந்த ஆலயத்தை இடித்துத் தரைமட்டமாக்கினர்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இருநூற்றாண்டுகள் நிலைத்திருந்த கந்தவேள் கோயில் சிதைந்து கிடந்தது. அதிகாலை மெல்ல விழித்து கிழக்கில் சூரிய கதிர்கள் பரவப்பரவத்தான் விஜயபாகு தன் வீரர்கள் புரிந்த அட்டூழியங்களைத் தெரிந்து கொண்டவன் போல வியப்படைந்தான். கண்முன்னால் சிதைந்து கிடக்கும் கோயிலைப் பார்த்தான்.

நிச்சயமாக சப்புமல்குமாரய இதனை விரும்ப மாட்டான். வழிபாட்டிடங்களை அழிப்பதை அவன் நிச்சயமாக தாங்கிக் கொள்ளமாட்டான். தண்டநாயக்கன் வருவதற்கு முன்னர் படைவீரர்களுடன் நல்லூரைவிட்டு நகர்ந்துவிட அவன் முடிவு செய்தான்.

உடனடியாக அவ்விடத்தை விட்டு புறப்படுமாறு வீரர்களுக்கு கட்டளை பிறப்பித்துவிட்டுத் தன் குதிரையில் தாவி ஏறியபோது அருகில் புரவிகள் விரைந்துவரும் சப்தம் எழுந்தது. நிலமதிர விரைந்து வரும் புரவியின் சத்தத்திலிருந்து தண்டநாயக்கனின் கருங்குதிரை காற்றிலும் கடுகி வருவதைப் புரிந்து கொண்டான்.

அவன் முகம் வெளிறியது.

சாலையில் புழுதிக் காற்றினைக் கிளப்பியவாறு புரவிகள் விரைந்து வந்தன. முன்னணியில் சப்புமல் குமாரயவின் கருங்குதிரை வாயில் நுரை சிந்த விரைந்து வந்தது.

ஆலயவீதியில் செண்பகப்பெருமாள் பாய்ந்து இறங்கினான். அவன் முன் நிலத்தில் சரிந்து கிடக்கும் கோயிலின் இடிபாடுகள் பயங்கரமாகத் தெரிந்தன. அவன் உடல் மெதுவாக நடுங்கியது. தளர்ந்து போய்ச் சிலகணங்கள் அப்படியே நிலைபெயராது நின்றிருந்தான்.

எதுவும் பேசவில்லை. இடிபாடுகளிடையே மெதுவாக நடந்து சென்றான். செங்கட்டியினால் கட்டப்பட்டிருந்த ஆலயம், சிதைந்து கிடந்தது.

ஓரிடத்தில் அவன் விழிகள் நிலைத்து நின்றன. அவ்விடத்திற்கு பாய்ந்து ஓடிச் சென்றான். அவன் உதடுகள் "ஸ்கந்த..." என்று பிரிந்தன.

மூலச்சிலாவிக்கிரகம் மண்ணில் சரிந்து கிடந்தது. கந்தவேள் விக்கிரகத்தை அவன் மிக்க பயத்துடன் தன் கரங்களில் தூக்கிக் கொண்டான். சிலை கந்தவேளின் வேல் ஏந்திய கரம் ஊறுபட்டிருந்தது.

"ஸ்கந்த... கந்தவேளே..." எனச் செண்பகப்பெருமாள் வீரிட்டான்.

தண்டநாயக்கனின் குரல் வீரிட்டதைக் கேட்ட படைவீரர்கள் திடுக்கிட்டு நின்றனர். விஜயபாகுவின் உடல் மெதுவாகப் பயத்தினால் நடுங்கத் தொடங்கியது.

"பாவிகளே, ஏன் இப்படிச் செய்தீர்கள்?" என்று செண்பகப்பெருமாள் கத்தினான்.

கந்தவேள் கோயில் மயில் தூரத்தில் அவலமாக அகவியது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தீவினைக்குக் கழுவாய் 8

**1455**ஆம் ஆண்டு மாரி கால நண்பகல் கருக்கலில் மாவிட்டபுரக் கந்தனாலயத்தின் வெளிமண்டபத்தில் சின்னமனத்துளார் ஓய்வாக அமர்ந்திருந்தார். முதல் நாளிலிருந்து தொடர்ந்து பெய்த மழை அப்பொழுது தான் சற்று விட்டிருந்தது. நண்பகல் உச்சிக்காலப் பூசையை முடித்துவிட்டு அவர் அமர்ந்திருந்த போது மீனலோசினி அங்கு வந்தாள்.

அவள் நாம் முன்னர் பார்த்ததிலும் அழகு பெற்றிருந்தாள். உயர்ந்து மெலிந்த உடலில் சற்றுச்சதை விழுந்திருந்தது. தாவணியோடு காணப்பட்ட அவள, இப்போது அழகாகச் சேலை அணிந்திருந்தாள்.

"அப்பா...." என்றபடி அவரின் அருகில் அமர்ந்து கொண்டாள்.

"என்னம்மா?..." என்று தந்தை ஆதரவோடு கேட்டார்.

"தொண்டை நாட்டிலிருந்து வல்லியத்தேவன் வந்திருந்தாரே?"

உப்பதிகாரியாக இருந்த வல்லியத்தேவன், கனகசூரியசிங்கை ஆரியன் தன் குடும்பத்துடன் தொண்டைமண்டலத்திலுள்ள திருக்கோவிலூரில் இடைக்கலம் புகுந்திருந்தார். அவருடன் திருக்கோவிலூருக்குச் சென்றிருக்கும் வல்லியத்தேவன், அங்கிருந்து அடிக்கடி ஈழத்திற்கு வருவான், இங்குள்ள நிலமைகளை அறிந்து செல்ல வருபவன், சின்னமனத்துளாரிடமும் தவறாது வந்து செல்வான்.

"மன்னர் எப்படியாம், அப்பா?..." என்று மீனலோசினி கேட்டாள். அவள் குரலில் ஆவல் தொனித்தது.

"எந்த மன்னரைக் கேட்கிறாய், அம்மா? இங்குள்ள இன்றைய மன்னர் ஸ்ரீசங்கபோதி புவனேகபாகுவைக் கேட்கிறாயா? அல்லது திருக்கோயிலூரில் கரந்துறையும் பழைய மன்னர் கனகசூரியசிங்கை ஆரியரைக் கேட்கிறாயா?"



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சப்புமல்குமாரயா என்ற செண்பகப்பெருமாள், யாழ்ப்பாண அரசினைக் கைப்பற்றி வெற்றி கொண்டதும், ஜயவர்த்தனபுரக் கோட்டைக்கு மீண்டு சென்றான். சென்றவிடமெங்கும் வெற்றிக்கொடி நாட்டிய பெருமாளை பராக்கிரமபாகு, "ஆரியவேட்டையாடும் பெருமாள்" எனப் புகழ்ந்து, யாழ்ப்பாணத்தையே அரசு புரியுமாறு திருப்பி அனுப்பி வைத்தான். யாழ்ப்பாண அரசிற்கு மீண்ட சப்புமல்குமாரயா, பழைய தலை நகரம் பாழடைந்து போனமையால், நல்லூரில் புதியதொரு நகரமெடுப்பித்து, ஸ்ரீசங்கபோதி புவனேகபாகு என்ற சிங்களப் பெயரோடு, முடிசூடிக் கொண்டான்.

மீனலோசினி தகப்பனைக் கோபத்தோடு பார்த்தாள்.

"அப்பா என்னைப் பொறுத்தவரையில் நான் மன்னராகக் கருதுவது, கனகசூரியசிங்கை ஆரியரைத் தான். வேறு ஒருவரையுமல்ல. மதங்கொண்ட களிறெனக் கண்டாரைக் கொன்று சிங்கை நகரின் வீதிகளில் இரத்த வெள்ளம் பாய்ந்தோடும் ஆறுகளாக்கி, நகரில் விளங்கிய மாடமாளிகைகளையெல்லாம் இடிப்பித்து எரியூட்டி எல்லாவற்றிற்கும் உச்சமாக நல்லூரில் எம்பெருமான் கந்தவேளின் ஆலயத்தையே மூலஸ்தானத்துடன் தகர்த்தெறிந்த வெறிபிடித்த ஸ்ரீசங்கபோதி புவனேகபாகுவை ஒருபோதும் எம்மன்னராக ஏற்றுக்கொள்ள என்மனம் இடந்தரவில்லை." உணர்ச்சிவசப்பட்டு மீனலோசினி கூறியவற்றை சின்னமனத்துளார் வியப்போடு அவதானித்தார்.

"நீ சொல்வதைப் பார்த்தால், இளவரசர் படையோடு இங்கு வரும் போது நீயும் அவர்களுடன் சேர்ந்துவிடுவாய் போலிருக்கிறதே?..." எனச் சிரித்தார்.

"இளவரசர் படையோடு வருவாரா? இழந்த இராச்சியத்தை மீண்டும் பெறுவாரா?" என அவள் அடங்கா ஆர்வத்துடன் கேட்டாள்: "அப்பா, கூறுங்கள்...... விளக்கமாகச் சொல்லுங்களேன்..."

அவர் மகளை அன்புடனும் கவலையுடனும் பார்த்தார்.

"அப்படித்தான் வல்லியத்தேவன் சொல்கிறான். திருக்கோவிலூரில் இளவரசர்கள் போர்ப் பயிற்சி பெற்று வருகிறார்களாம். தஞ்சை மன்னன் தருணம் வரும்போது படைதந்து உதவுவதாகக் கூறியிருக்கிறாராம். அவர்களை மட்டும் நம்பியிருப்பதில் பயனில்லை. அதனால் வல்லியத்தேவன் போன்ற நம்பிக்கைக்குரியவர்கள் யாழ்ப்பாண அரசில்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இரகசியமாகப் படை திரட்டுவதில் ஈடுபட்டிருக்கிறார்கள். திருமலை வன்னிமை தக்க தருணத்தில் படைதந்து உதவுவதாகக் கூறியிருக்கிறார். ஆக இன்னும் ஐந்தோ ஆறு ஆண்டுகளில் யாழ்ப்பாண இராச்சியம் மீண்டும் சிங்கை ஆரியர் வசமாகும்..."

"அவ்வளவு காலம் செல்லுமா?..."

"உனக்கு யாழ்ப்பாணத் தமிழ்மக்களைப் பற்றித் தெரியாது, மகளே. ஐந்தாண்டுகளுள் கனகசூரியசிங்கை ஆரியரை மறக்கத் தொடங்கிவிட்டனர். யார் ஆண்டால் என்ன என்ற மனநிலையில், புதிய மன்னர் ஸ்ரீசங்கபோதி புவனேகபாகுவை படிப்படியாக ஏற்றுக் கொள்ளத் தொடங்கிவிட்டார்கள்..."

மீனலோசினி சற்று நேரம் மௌனமாகவிருந்தாள். அவள் சிந்தையில் இளவரசன் சிங்கைப் பரராசசேகரன் ஒருகணம் தோன்றிச் சிரித்தான்.

"பெண்ணே நீ அழகாக இருக்கிறாய்..." என்று அவன் கூறிய வார்த்தைகள் காதுகளில் மீண்டும் ஒரு தடவை ஒலித்தன.

இந்த நாட்டின் வருங்கால மன்னன் திருக்கோவிலூரில் என்ன கஷ்டப்படுகிறானோ?

அவள் கண்களில் கனவுகள் மலர்வதை அவதானியாது சின்னமனத்துளார் தொடர்ந்தார்: "இப்போது நல்லூரை நீ பார்க்க வேண்டும், அம்மா. அப்படியே அசந்துவிடுவாய். சிங்கை நகருக்கு இணையாக அதனை மன்னன் கட்டியெழுப்பியிருக்கிறான். மாடமாளிகைகள் குளங்கள் அழகான பூந்தோட்டங்கள் பாதுகாப்பு அரண்கள் என நல்லூர் புதுத் தோற்றம் பெற்றிருக்கிறது."

"என்றாலும் அப்பா, நீங்கள் கனகசூரியசிங்கை ஆரியருக்கு கொஞ்சம் கூட விசுவாசம் இல்லாதவர். அதனால் தான் உங்களை புவனேகபாகு அழைத்த போதெல்லாம் நல்லூருக்கு ஓடுகிறீர்கள்...."

"அப்படியில்லை அம்மா... நான் பிராமணன். இருவருக்குத்தான் விசுவாசமாக இருக்கமுடியும். ஒருவர் நாம் பூசை வழிபாடு செய்யும் ஆண்டவன். மற்றவன் நம்மை ஆளும் மன்னவன். ஆண்டவரிடம் எல்லாரின் சேமத்துக்காகவும் தாம் நான் வேண்டுகிறேன்"

"நீங்கள் எப்போதும் மன்னர்களுக்கும் மந்திரிகளுக்கும் விசுவாசமானவர் தாம்..."

"உண்மை தான், அம்மா. இன்றைக்கு இருநூறு ஆண்டுகளுக்கு முன், எனது மூதாதையர் ஒருவர் அவர் பெயரும் சின்னமனத்துளார் தான். அப்போது யாழ்ப்பாண அரசின் மன்னனாக காலிங்கசிங்கை ஆரியன்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இருந்தார். அவர் மந்திரியாக புவனேகவாகு என்றும், புவனேசவாசர் என்றும் அழைக்கப்படும் பிராமணோத்தமர் ஒருவர் இருந்தார்...''

''இந்தப் புவனேசவாசர் தானா நல்லூரில் குருக்கள் வளவில் கந்தவேள் ஆலயம் அமைத்தவர்?..''

''ஆமாம்... இந்த மந்திரியும் என் மூதாதை சின்னமனத்துளாரும் நெருங்கிய நண்பர்கள். மந்திரி அடிக்கடி இங்கு வருவார். மாவிட்டபுரக் கந்தனை வழிபட்டுவிட்டு சின்னமனத்துளார் வீட்டில் விருந்துண்டு செல்வார். ஒருநாள் விருந்துண்டு களித்த பின் அவ்விருந்தைப் புகழ்ந்து ஒரு வெண்பா பாடினார்...''

''யார்?... மந்திரியா..?''

''ஆமாம்..''

''அப்ப பாட்டில் கூட உங்கள் மூதாதையர் இடம்பிடித்திருக்கிறார்கள், அப்பா..''

''என்ன மகளே, கேலியா?''

''இல்லை அப்பா, சொல்லுங்கள் அது என்ன வெண்பா?''

சின்னமனத்துளார் சொன்னார்:

''சின்னமனத்தான் செய்யும் விருந்திற் சாற்றுருசி
அன்னதனை விண்ணோர் அறிந்திருந்தால் முன்னலைவாய்
வேற்பதனை காவியுய்த்து வேலைக்கடைத்தேயுலைதல்
அற்பமெனத்தள்ளுவரே யாம்.''

மீனலோசினி பெரிதாக நகைத்தாள்.

''பாற்கடலைக் கடைந்து பெறப்படும் அமிழ்தத்திலும் எங்கள் வீட்டு விருந்து அவ்வளவு ருசியா, அப்பா?...''

வானம் வெளிராகி பளீரென வெயில் படர்ந்தது.

''வா பசிக்கிறது. உன் அம்மா சமைத்து வைத்திருப்பது அமிழ்திலும் ருசியா எனப் பார்ப்போம்....'' அவர்கள் எழுந்து வெளிமண்டபத்திற்கு வந்தபோது, குதிரைகளின் குளம்பொலி வீதியில் எழுந்தது. சின்னமனத்துளார் தயங்கி நிற்க, கோயிலின் வாசலில் கருங்குதிரையொன்று கம்பீரமாக முன் வந்து நின்றது. அதனைத் தொடர்ந்து நான்கு புரவிகளில் வீரர்கள் அமர்ந்திருந்தனர். கருங்குதிரையில் அமர்ந்திருந்த வீரன் நிலத்தில் குதித்தான்.

சின்னமனத்துளாரின் விழிகளில் அச்சம் கலந்த வியப்புத் தோன்றியது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"அம்மா, அவர் தான் நம் மன்னர்... புவனேகபாகு..." என மெதுவாகச் சொன்னார்.

"இவரா?... நான் கிழவராக இருப்பார் என நினைத்தேன்... நான் போகிறேன் அப்பா"

"நில் அம்மா, மன்னரைக் கண்டு வணக்கந் தெரிவிக்காமல் செல்வது ஏற்றதன்று.."

ஸ்ரீசங்கபோதி புவனேகபாகு என்ற செண்பகப்பெருமாள் பாதணிகளை கழற்றிவிட்டு மார்பு உத்திரியத்தை இடுப்பில் பவ்வியமாக கட்டிக்கொண்டு வணக்கம் செலுத்திவிட்டு அவரை நோக்கி வந்தான்.

"வரவேண்டும் மன்னா... தாங்கள் இங்கு வருவீர்களென்று நான் எதிர்பார்க்கவில்லை...."

புவனேகபாகு அவரை நோக்கிச் சிரித்தான். ஆஜானுபாகுவான அவன் உருவமும் கரியநிறமும் மீனலோசினிக்கு அச்சத்தை தந்தன. அவள் தந்தையின் பின் ஒதுங்கிக் கொண்டாள்.

"உம்மிடமே வந்தோம் சின்னமனத்துளாரே, உம்மிடம் சிறிது பேச வேண்டும்..."

"பாக்கியம்.. வரவேண்டும்.... இவள் என் மகள்..."

"அப்படியா? நலமாக இருப்பாய் பெண்ணே.." என்றான் மன்னன்.

அவள் மன்னனுக்கு வணக்கம் செலுத்திவிட்டு விரைவாகச் சென்றாள். புவனேகபாகு உட்பிரகார மண்டபத்தில் ஒரு தூணுடன் அப்படியே அமர்ந்தான். அவன் முன் சின்னமனத்துளார் அடக்க ஒடுக்கமாக நின்றிருந்தார்.

புவனேகபாகுவின் விழிகள் கோயில் உட்பிரகாரத்தையும் சுற்றிப் பார்த்தன. விழிகள் பனித்தன.

"சின்னமனத்துளாரே என் மனதில் அமைதியில்லை. என்று என் வீரர்கள் நல்லூரில் அமைந்திருந்த கந்வேளின் கோயிலைத் தகர்த்து எறிந்தார்களோ அன்றிலிருந்து நான் நிம்மதியை இழந்துவிட்டேன். என் அரண்மனையில் இன்றும் கந்தவேளின் சிலாவிக்கிரகம் இருக்கின்றது. ஊறுபட்ட அந்த விக்கிரகத்தின் விழிகள் என்னை வெறுப்புடன் பார்க்கின்றன, சின்னமனத்துளாரே.

சின்னமனத்துளார் சில கணங்கள் எதுவும் பேசாது மன்னனைப் பார்த்தார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"ஆண்டவன் சித்தத்தை யார் அறிவார், மன்னா. அக்கோயில் அழிவுற்றதும் அவன் சித்தமாக இருக்கலாம். அதற்குப் பதிலாக உங்கள் மூலம் கந்தவேள் எதை எதிர்பார்க்கிறானோ? முன்னரிலும் பார்க்க பெரிதாக... அருள் விளக்கம் நிறைந்த ஆலயத்தை...."

புவனேகபாகுவின் விழிகள் மலர்ச்சியால் விரிந்தன. அவன் அவசரமாகக் குறுக்கிட்டான்.

"நான் எதைப் பரிகாரமாக நினைத்தேனோ, அதையே நீர் சொன்னீர். ஆம்... நான் கந்தவேளுக்குப் பெரியதொரு ஆலயம் அமைக்கப் போகிறேன். அது தான் நான் செய்த தீவினைக்குக் கழுவாய். சின்னமனத்துளாரே நீர் எனக்குச் சில காரியங்கள் செய்து தரவேண்டும்.."

"கட்டளையிடுங்கள்.."

"திருச்செந்தூருக்கு உடன் நீங்கள் செல்ல வேண்டும். அங்குள்ள பிராமணோத்தமர்களுடன் கலந்து பேசி, சிவாகமங்களுக்கும் குமாரதந்திரவிதிகளுக்கும் அமையத்தக்கதான கந்தவேள் ஆலயத்தை செப்புத்தகடுகளில் வரைந்து வர வேண்டும். அத்துடன் அந்த ஆலயத்தில் பிரதிஸ்டை செய்வதற்கான மூலவிக்கிரகங்களையும் பரிவார விக்கிரகங்களையும் சிற்ப சாஸ்திர விற்பன்னர்களிடமிருந்து சிலாவிக்கிரகங்களாகக் கொண்டுவர வேண்டும்...." மன்னன் சொல்லிக் கொண்டு போனான்.

சின்னமனத்துளார் வியப்புடன் கேட்டுக் கொண்டிருந்தார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மகாகும்பாபிஷேகம் 9

நல்லூர் விழாக்கோலம் பூண்டிருந்தது. சாலைகள் தோறும் தோரணங்களும் வீட்டுவாசல்கள் தோறும் பூரண கும்பங்களும் அந்தத் தலைநகரில் நிகழப்போகின்ற புண்ணிய கருமத்திற்கு சான்று கூறிக் கொண்டிருந்தன. சாலைகளில் இடையிடையே பந்தர்கள் போடப்பட்டு, நீர்த்தாகம் தீர்ப்பதற்குரிய மோர், தண்ணீர் என்பன பயணிகளுக்கு வழங்கப்பட்டன. யாழ்ப்பாண இராச்சியத்தின் பல பகுதிகளிலும் இருந்தும் பிரமுகர்களும் மக்களும் நல்லூரில் குழுமியிருந்தனர்.

ஆம். நாளை சூரிய உதயத்தில் கந்தவேளுக்கு ஆலயம் அமைக்கும் வைபவம் ஆரம்பமாகப் போகின்றது. மன்னனின் அரண்மனை விருந்தினர் மண்டபத்தில் பிரமுகர்கள் கூடியிருந்தனர். இன்னோர் மண்டபத்தில் பிராமணர்கள் குழுமியிருந்தனர்.

கந்தவேளுக்கு கோயில் அமைக்கும் திருப்பணியை சரிவர நிறைவேற்றுவதற்காக சின்னமனத்துளார் காசியிலிருந்து பிராம ணோத்தமர்களை அழைத்து வந்திருந்தார். அவர்களில் வேத ஆகமங்களை பிழையின்றித் தெரிந்த கங்காதரக்குருக்கள் பிரதம குருவாக இருந்தார்.

புதிதாக அமையவிருக்கும் ஆலயம் மன்னனின் அரண்மனைக்கு முன் அமைய இருந்தது. அந்த இடத்தில் சில நூற்றாண்டுகளின் பின்னர் கிறிஸ்தவ தேவாலயம் ஒன்று அமையும் என்பதை அவ்வேளை யார் அறிந்திருந்தார்கள்?. ஆங்கிலேயர் காலத்தில் செய்த சேவைகளுக்கு முத்திரைகுத்தும் சந்தி, அவ்விடத்தில் அமையும் என்பது எவருக்குத் தெரியும்? அவ்விடத்தில் யாழ்ப்பாண இராச்சியத்தின் கடைசிச் சுதந்திர மன்னன் சங்கிலிக்கு சிற்பாச்சாரி சிவப்பிரகாசம் கம்பீரமான சிலை ஒன்று அமைப்பார் என்பதும், குதிரை மீது வலக்கரத்தில் வாளேந்தி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

யுத்த சன்னத்தனாக வீற்றிருக்கும் அம்மன்னன் சுதந்திர உதயத்தின் சின்னமாக நிற்பான் என்பதும் யாருக்குத் தெரியும்?

ஸ்ரீசங்கபோதி புவனேகபாகுவின் முகத்தில் என்றுமில்லாத மலர்ச்சி காணப்பட்டது. நீண்ட காலமாக அவனை வருத்திய துயர் நீங்கியவன் போன்று காணப்பட்டான்.

சின்னமனத்துளார் மண்டபத்தை விட்டு வெளியில் வந்தபோது மன்னன் வருவதைக் கண்டார். மன்னன் மண்டபத்திற்குள் வந்து பிராமணோத்தமர் மத்தியில் இருந்த இருக்கை மீது அமர்ந்து கொண்டான்.

"சின்னமனத்துளாரே, நீங்கள் எனக்குச் செய்த கைமாறை என்றும் மறவேன்."

"இல்லை மன்னா, இந்த நல்ல கைங்கரியத்தை செய்வதற்கான வாய்ப்பு அடியேனுக்கு கிடைத்தது நான் செய்த தவப்பயனாக இருக்கும். கன்மத்துக்கு ஈடாக பிறவியெடுக்கும் ஆன்மாக்களுக்குள்ளே ஆறறிவு படைத்தவன் மனிதன். அவன் தன் வாழ்நாளில் ஆற்றவேண்டிய கடன்கள் நான்கென வேதாகமங்கள் கூறுகின்றன..."

புவனேகபாகு சின்னமனத்துளாரை ஏறிட்டுப் பார்த்தான்.

"கூறுங்கள்... நானும் தெரிந்து கொள்கிறேன்..."

"மனிதனின் நான்கு கடன்கள்... ஒன்று தேவர் கடன், மற்றது முனிவர் கடன், மூன்றாவது பிதிரர் கடன், நான்காவது மனிதர் கடன்..."

"தேவர் கடன் என்பது?.."

"தேவர் கடன் என்பது ஆலயங்கள் அமைத்தல், திருக்கோயில் வழிபாடு, திருத்தொண்டுகள் என்பவற்றையும் குறிக்கும். முனிவர் கடன் என்பது தர்ப்பணங்கள், ஜபம் தியானம் என்பனவற்றையும், பிதிரர் கடன் என்பது இறந்தோருக்கு செய்யும் மகாளயம், சிரார்த்தம், நீர்க்கடன் எனபவற்றைக் குறிக்கும். விருந்தோம்பல், சுற்றம் பேணல் என்பன மனிதர் கடனாகும்...."

"ஆலயங்களில் செய்யப்பட வேண்டிய கிரியைகள் என்ன?" என்று மன்னன் கேட்டான்.

சின்னமனத்துளார் கங்காதரக்குருக்களைப் பார்த்தார். கங்காதரக்குருக்கள் தயங்குவதாகப்பட்டது.

"கூறுங்கள்..." என்று சின்னமனத்துளார் வேண்டிக் கொண்டார்.

கங்காதரக்குருக்கள் மீண்டும் தயக்கம் காட்டினார்.

"கூறுங்கள் குருக்களே, நான் புரிந்து கொள்வேன்..." என்றான் மன்னன்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"மன்னா, நாளை ஆலயம் அமைத்தலாகிய புண்ணிய காரியத்தை நீங்கள் செய்யும் போது தேவர் கடன் செய்தவனாவீர்கள். ஆலயங்களில் மூன்று வகையான கிரியைகள் செய்தல் வேண்டும். முதலாவது கர்சனாதி பிரதிட்டாந்தம்... அதாவது ஆலயமில்லாதவிடத்துப் புதிதாக ஆலயம் அமைக்கத் தொடங்கும் போது, அந்த இடத்தை கர்ஷனம் செய்து (உழுதல்) திருக்கோயிலை எழுப்பி மூர்த்தியை பிரதிஷ்டை செய்யும் வரையிலான கிரியையைக் குறிக்கும். அது தான் கர்ஷனாதி பிரதிட்டாந்தம்..."

மறுநாள் உதயத்தில், இந்தக் கிரியையின் முதல் செயற்பாட்டை ஸ்ரீசங்கபோதி புவனேகபாகு செய்தான். கந்தவேள் கோயில் அமையவிருந்த இடத்தில் பிரதானிகளும் மக்களும் புடைசூழ, தோய்ந்து விரதம் காத்து புனிதனாக அவன் வந்தான்.

கங்காதரக்குருக்களிடம் அவன் சங்கற்பம் செய்து கொண்டான்.

"சங்கற்பம் என்பது எடுத்துக் கொண்ட காரியத்தைக் குருவின் உதவியுடன் செய்து முடிப்பதாக உறுதி பூணல், அரசே. உறுதிபூணும் இத்தினத்தில் சகலருக்கும் இகபர நல் வாழ்வு கிடைத்தற் பொருட்டும், அறம் பொருள் இன்பம் வீடு ஆகிய நான்கு புருடார்த்தங்களையும் எய்தற்பொருட்டும், நவக்கிரகங்களால் வரக்கூடிய ஊறுகளை நீக்கற் பொருட்டும், அட்ட ஐஸ்வரியங்களைப் பெறுவதற்காகவும் பிரார்த்திக்கப்படுகிறது...." என்றார் சின்னமனத்துளார்.

கங்காதரக் குருக்கள் புண்ணிய யாகத்தை தொடங்கினார்.

"இதன் அர்த்தம் என்ன?" என்றான் மன்னன்.

"புதிய ஆலயம் அமையப்போகும் இடத்தைச் சுத்தி செய்வதற்காகச் செய்யப்படும் கிரியை. சல தேவதையாகிய வருணனைப் பூசித்து பஞ்ச கௌவியத்துடன் சேர்த்துத் தெளிப்பதே புண்ணிய யாகம் எனப்படும்...."

"பஞ்ச கௌவியம் என்றால்..."

"பால், தயிர், நெய், கோமயம், கோசலம் எனப்படும் பசுவிலிருந்து பெறப்படும் ஐந்து பொருட்கள்..."

"இதனைத் தொடர்ந்து யாது நிகழும்?.."

"பிரவேச பலி நடக்கும்... .இவ்விடத்திலுள்ள பூத பிசாச பிரம்ம இராட்சகர்களை அவ்விடத்திலிருந்து தூரத்துவதிற்குச் செய்யப்படும் கிரியை, மகாதேவனுடைய ஆணையினால் இவ்விடத்தில் ஆலயம் அமைக்கப்போகின்றோம். இப்பலிகளை ஏற்று வேறிடம் செல்வீர்களாக என வேண்டி அவற்றினை அகற்றுதலாகும்..."



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஸ்ரீசங்கபோதி புவனேகபாகு, கோயில் அமையவிருந்த வளவில் இறங்கி அங்கு ஏற்கனவே தயாராக வைத்திருந்த கலப்பையை பற்றிக் கொண்டான். வெண்ணிற எருதுகள் இரண்டு, கழுத்துச் சலங்கைகள் சப்திக்க, கலப்பையை இழுத்து உழுவதற்கு தயாராக நின்றிருந்தன.

கங்காதரக் குருக்கள் நிலத்தை உழுமாறு மன்னனிடம் கூறினார். மன்னன் கந்தவேள் ஆலயம் அமையவிருந்த நிலத்தை உழுதான். ஏரினால் புரட்டப்பட்ட மண் ஒருபுறமாக சரிந்தபோது, எங்கிருந்தோ மயில் ஒன்றின் அகவல் எழுந்தது. புரட்டிய மண்ணில் நெளிந்த சிறு சர்ப்பம் ஒன்றினை , மேற்கிலிருந்து வந்து விர்ரென அம்பாகத் தாழப் பறந்து கால்களின் விரல்களினால் பற்றி, விண்ணில் வேகமாக எழுந்த தோகை மயில் ஒன்றினை அனைவரும் கண்டனர்.

மன்னனின் விழிகளில் நீர் பிரவாகமாகச் சரிந்தது.

"ஸ்கந்த....... கந்தவேளே........"

கந்தனின் ஆலயம் அவ்விடத்தில் எழிலுறக் கட்டிமுடிப்பதற்கு மேலும் பத்து ஆண்டுகள் எடுத்தன. விமானத்தோடு கூடிய மூலஸ்தானம், அர்த்தமண்டபம், மகாமண்டபம், நிருத்தமண்டபம், ஸ்தம்ப மண்டபம், பரிவார மூர்த்திகள் மண்டபம், வசந்த மண்டபம், இராச கோபுரம் என்பன சைவாகம விதிப்படி அமைக்கப்பட்டன. சின்னமனத்துளார் செப்பேடுகளில் வரைந்துகொண்டு வந்தவாறே ஆலயம் சிறிதும் பிசகின்றி அமைக்கப்பட்டது. எல்லாவற்றிற்கும் மேலாக ஆலயத்தினைச் சுற்றி நான்கு பக்க வாயில்களோடு பெருமதிற்சுவர் எழுப்பப்பட்டது.

கோயில் கும்பாபிஷேக நாள் வந்தது. கங்காதரக் குருக்கள் அதனையும் நிறைவு செய்து வைத்தார். வேதகோஷங்களும் மங்கள வாத்தியங்களும் முழங்க, யாழ்ப்பாண அரசின் அனைத்து மக்களும் குழுமி நிற்க, மகாகும்பாபிஷேகம் நடந்தது. திருச்செந்தூரிலிருந்து வருவிக்கப்பட்ட கந்தவேளின் சிலாவிக்கிரகமும் வள்ளியம்மை, தெய்வானையம்மை விக்கிரகங்களும் கர்ப்பக்கிரகத்தில் பிரதிஷ்டை செய்யப்பட்டன.

"ஓம் சரவணபவ..." என்று எங்கும் குரல் நிறைந்தது.

கங்காதரக்குருக்கள் மகா ஆசீர்வாதம் செய்து கும்பாபிஷேகப்பலனை ஒப்புவித்தார்.

"மன்னா, உங்களுக்கும் இந்நாட்டு மக்களுக்கும் இகபர நல்வாழ்வும் அட்ட ஐஸ்வரியங்களும் கிட்டுவதாக."



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அவ்வேளை கந்தவேள் ஆலயத்தின் சுற்றாடலை நிறைக்கத் தக்கதாக பிராமணோத்தமர்கள் ஆலயக் கட்டியத்தினை முதன் முதலாக முழங்கினார்கள்.

"ஸ்ரீமான் மகாராஜ அகண்ட பூமண்டலப்ர
திலகதிகந்தர விச்றாந்த கீர்த்தி
ஸ்ரீகஜவல்லி மகாவல்லி சமேத சுப்பிரமண்ய
பாதவிரந்த ஜநாதிருட சோடச
மகாதான சூர்யகுல வம்சோத்பவ ஸ்ரீசங்க
போதி புவனேகபாகு...."

ஸ்ரீசங்கபோதி புவனேகபாகு, புளங்காகிதமடைந்து அப்படியே சில நாழிகைகள் உறைந்து போய் அவன் விழிகளில் நீர் வடிந்து கரிய அவன் மார்பில் சரிந்தது.

அன்று மாலை கோயில் பூசையின் போது மன்னன் கங்காதரக் குருக்களிடம் கேட்டான்.

"ஆலயங்களில் செய்யப்படும் கிரியைகள் மூன்று என்றீர்களே? முதலாவது கிரியையான கர்ஷனாதி பிரதிட்டாந்தம் பற்றிக் கூறினீர்கள். மற்றவை யாவை?"

"கோயிலின் கும்பாபிசேகம் முடிந்ததும், கோயிலில் நடக்கும் நைமித்திக கிரியைகளும், நாட்டிற்கு நன்மை வேண்டிச் செய்யப்படும் காமிகக் கிரியைகளும் இரண்டாம் வகை. அதனை பிரட்டாதி உற்சவாந்தம் என்பர். மூன்றாவது ஆண்டுதோறும் கோயிலில் இறைவனின் பஞ்சகிருத்தியங்களைக் குறிக்கும் கொடியேற்றம், தேர், தீர்த்தம் போன்ற மகோற்சவக் கிரியைகள். இதனை உற்சவாதி பிராயச்சித்தம் என்பர்..."

"இக்கிரியைகள் மூன்றும் குறைவின்றி இந்த ஆலயத்தில் நடக்க வேண்டும். அதற்காக எது வேண்டுமானாலும் செய்வேன் பெரியவரே..."

மன்னன் எழுந்திருந்த போது, அவனை நோக்கி விஜயபாகு வேகமாக வந்தான். அவன் வந்த வேகத்திலிருந்து ஏதோ புதியதொரு செய்தியை சொல்ல வருகிறான் என்பது தெரிந்தது.

"அரசே... ஒரு துயரமான செய்தி ஜயவர்த்தனபுரக் கோட்டையிலிருந்து வந்திருக்கிறது."

"என்ன செய்தி?..." என புவனேகபாகு பதற்றத்துடன் கேட்டான்.

"தங்களின் தந்தை, மாமன்னர் பராக்கிரமபாகு காலமாகிவிட்டார்... தூதுவன் செய்தியுடன் வந்திருக்கிறான். தங்களின் தாயார் நந்ததேவிப்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பிராட்டி அறிவித்திருக்கிறார்."

புவனேகபாகு நிலைகுலைந்து போய் அப்படியே கோயில் தூணுடன் சரிந்து கொண்டான்.

"அரசே..." என்றான் விஜயபாகு: "இன்னொரு செய்தி இருக்கிறது..."

'என்ன' என்குமாப்போல மன்னன் ஏறிட்டுப்பார்த்தான்.

"தங்களுக்குக் கிடைக்க வேண்டிய மகுடத்தை, மாமன்னர் தன் பேரன் ஜயவீரனுக்கு வழங்கிவிட்டு இறந்தாராம். ஜயவர்த்தனபுரக் கோட்டையின் சக்கரவர்த்தியாக ஜயவீரன் பட்டாபிசேகம் செய்துகொண்டாராம்...."

ஸ்ரீசங்கபோதி புவனேகபாகு விருட்டென நிமிர்ந்து நின்றான். அவன் முகத்தில் சற்று முன் நிறைந்திருந்த சாந்தம், அமைதி, கவலை என்பன அழிந்தன. அவன் கரிய முகத்தில் சிவப்பேறியது. கண்கள் விழித்து எரிந்தன.

"அப்படி நடந்திருக்காது. சாம்ராச்சியத்திற்கு உரியவன் நான். அப்படி நடந்திருக்காது....நடந்திருந்தால்..." மன்னன் பற்களை நறநறவெனக் கடித்தான்: "விஜயபாகு நமது படைதயாராகட்டும்... இன்றே நான் புறப்படுகிறேன்."

"இங்குள்ள படைப்பலம்..." விஜயபாகு ஏதோ சொல்ல முயன்றான்.

"நமது படையில் ஒரு சிறு பகுதி இங்கு உன்னுடன் இருக்கட்டும். விஜயபாகு, உன்னை இன்றிலிருந்து இந்த யாழ்ப்பாண அரசின் அரச பிரதிநிதியாக நியமிக்கிறேன். என் பிரதிநிதியாக நீ இங்கிரு.... எனக்குரிமையான மகுடத்தை எடுக்காது விடமாட்டேன்..."

யாழ்ப்பாண அரசிலிருந்து பெரும் படையுடன் புவனேகபாகு, தென்னிலங்கை நோக்கிப் புறப்பட்ட அன்றே வல்லியத்தேவன் வடக்கு நோக்கி மரக்கலம் ஏறினான்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சுதந்திர உதயம் 10

பனிப்புகார் நீங்காத ஓர் அதிகாலை வேளையில் யுத்த மரக்கலங்கள், ஊர்காவற்றுறையிலும், தொண்டைமானாற்றுத் துறையிலும் வந்து சேர்ந்தன. பாரிய கலங்கள் தஞ்சை நாயக்க மன்னனின் படைவீரர்களோடு, மதுரைச் சிற்றரசர்களின் படை வீரர்களும் அம்மரக்கலங்களில் காணப்பட்டனர். இருபது மரக்கலங்களில் ஆயிரம் வீரர்கள், கனகசூரியசிங்கை ஆரியனின் தலைமையில் ஊர்காவற்றுறையில் தண்டிறங்கினர்.

பதினேழு ஆண்டுகளின் பின்னர் தன் சொந்த மண்ணில் கால்களைப் பதித்தபோது, கனகசூரியசிங்கைஆரியனின் விழிகள் ஆனந்தத்தால் கலங்கின. அக்கிழச்சிங்கத்தின் உள்ளம் பூரிப்பால் பொங்கியது.

தொண்டைமானாற்றுத் துறையில் பட்டத்து இளவரசன் சிங்கைப் பரராசசேகரன் தலமையில் ஐநூறு வீரர்கள் பத்து மரக்கலங்களில் வந்திருந்தனர். வல்லியத்தேவன் துறையில் நின்று வரவேற்றான். கண்ணுக்கெட்டிய தூரம் வரை, மக்களின் தலைகளையும், அவர்களுக்கு முன்னணியில் ஆயுதமேந்திய வீரர்கள் கூட்டத்தையும் இளவரசன் கண்டான். பதினேழு ஆண்டுகளாக யாழ்ப்பாண அரசில் இரகசியமாக வல்லியத்தேவனால் சேகரிக்கப்பட்டு பயிற்றப்பட்ட வீரர்கள் அவர்கள். தாய்நாட்டின் விடுதலைக்காக ஆயுதம் ஏந்தியிருந்தனர்.

நன்றிப்பெருக்கோடு, வல்லியத்தேவன் தோளில் பரராசசேகரன் தன் வலக்கரத்தைப் பதித்தான்.

"ஒன்பது மாதங்கள் கடந்துவிட்டன. இளவரசே..." என்றான் வல்லியத்தேவன்.

"நீ எதைச் சொல்கிறாய், வல்லி?" என்று வியப்புடன் பரராசசேகரன் கேட்டான்: பதினேழு கொடிய ஆண்டுகள் நாங்கள்..."

"நான் அதைச் சொல்லவில்லை. இளவரசன் சங்கபோதி புவனேகபாகு தென்னிலங்கைக்குச் சென்றுவிட்டான். படையுடன் வருக என நான்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தங்களுக்கு தகவல் தந்து ஒன்பது மாதங்கள் கடந்துவிட்டன. ஒவ்வொரு நாளும் நாங்கள் ஆவலுடன் கடலைப் பார்த்தபடி காத்திருந்தோம்."

"திடீரென நீ வந்தறிவித்தாய்... மன்னர்களின் உதவிகளை பெறுவதில் காலதாமதமாகிவிட்டது..."

"அதுவும் நல்லதற்கே, இளவரசே. ஒன்பது மாத விஜயபாகுவின் ஆட்சியில் மக்கள் பெருந் தொல்லையை அனுபவித்துவிட்டார்கள். வரிகள் ஒருபுறம் சிங்கள வீரர்களின் அட்டகாசங்கள் மறுபுறம்.... ஆட்சிமாற்றம் அவசியம் என்பதை மறந்திருந்த மக்களுக்கு விஜயபாகுவின் ஆட்சி அதனை மக்களுக்கு உணர்த்திவிட்டது...." என்றான் வல்லியத்தேவன்.

நல்லூரிலும் ஏனைய சில சிற்றூர்களிலும் நிலைபெற்றிருந்த சிங்களச்சேனை மூன்று பக்கங்களிலிருந்து வந்த தமிழர் படைகளைச் சமாளிக்க நேர்ந்தது. செண்பகப்பெருமாள் ஜயவர்த்தனபுரக்கோட்டைக்குத் திரும்பிச் சென்ற போது இங்கிருந்த சேனையில் பெரும்பகுதியை அழைத்துச் சென்றிருந்தான். அதனால்தான் கோட்டை இராசதானியில் அரச கட்டிலில் இருந்த ஜயவீரனைக் கொன்றுவிட்டு முடிசூடிக்கொள்ள முடிந்தது. யாழ்ப்பாண அரசில் தரித்து நின்ற சிங்ளச்சேனையால் திரண்டெழுந்த தமிழர் படையை எதிர்கொள்ள முடியவில்லை.

மேலைப்பக்கமிருந்து கனகசூரியசிங்கை ஆரியரின் படையும், வடக்கிலிருந்து பரராசசேகரனின் படையும், தெற்கிலிருந்து திருமலைவன்னியரின் படையும் நல்லூரை நோக்கி ஒரே சமயத்தில் நெருங்கி வந்தன. யாழ்ப்பாண மன்னர்கள் திருகோணமலை மன்னர்களோடு திருமணத் தொடர்பு கொண்டிருந்தனர். அதனால் கனகசூரியசிங்கை ஆரியன் யாழ்ப்பாணத்தில் தன்னாட்சியை மீண்டும் ஏற்படுத்துவதற்குத் தன்னுறவினராகிய திருமலை வன்னியரிடம் படைத்துணை பெற்றான். விஜயபாகு பரராசசேகரனின் வாளிற்கு இரையாகினான்.

யாழ்ப்பாண அரசு, வெகு இலகுவில் கனகசூரியசிங்கை ஆரியனின் கைவசப்பட்டது. பதினேழு ஆண்டுகளின் பின்னர், சுதந்திர அரசு உதயமாகியது. யாழ்ப்பாணத் தமிழ் மக்கள் மகிழ்ச்சி ஆரவாரம் செய்தனர்.

சங்கபோதி புவனேகபாகு நல்லூரை அற்புதமான நகரமாக்கி வைத்திருந்தான். கனகசூரியனுக்கு அதன் காரணமாக அவன்மீது மதிப்பு ஏற்பட்டது.

"மன்னவா, நமது பழைய தலைநகரமான சிங்கைநகரையே நாம் தலைநகரமாகக் கொள்வோமா? இடிந்து சிதிலமாகிக் கிடக்கும் அந்நகரத்தை நாம் முன்பிருந்தது போன்று கட்டியெழுப்ப வேண்டும்..."



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எனப் பிரதானிகள் கூறிய போது கனகசூரியசிங்கை ஆரியன் உடன் மறுப்புத் தெரிவித்தான்.

"இல்லை.... நல்லூரையே தலைநகரமாகக் கொள்வோம். இராச்சியத்தின் மத்தியில் தலைநகரம் அமைவது சிறப்பானது. முன்னில வன்னியர்களை நம் ஆதிக்கத்தின் கீழ் வைத்திருப்பதற்கும் சிங்களப் படையெடுப்புக்களை எதிர்கொள்ளவும் இந்த நகரே வாய்ப்பானது.

கனகசூரியசிங்கை ஆரியன், நல்லூருக்குள் புகுந்து வெற்றி கொண்ட அன்று மாலை கந்தவேள் ஆலயத்திற்கு இளவரசன் பரராசசேகரனுடன் சென்றான். குருக்கள் வளவில் மிகச் சிறிதாக இருந்த கந்தவேள் ஆலயம் அழிக்கப்பட்டு பிறிதொரு இடத்தில் பிரமாண்டமான இராசகோபுரத்துடன் உயர்ந்து நிற்பதை மன்னன் வியப்புடன் பார்த்தான்.

'இந்தக் கைங்கரியம் ஒன்றிற்காவது யாழ்ப்பாணமக்கள் ஸ்ரீ சங்கபோதி புவனேகபாகுவை நினைவு கூர வேண்டுமென' எண்ணிக் கொண்டான். தேரோடும் வீதி, விமானங்கள், சிலாவிக்கிரகங்கள், அனைத்தும் மன்னனை வசீகரித்தன.

"அப்பா நாமும் இது போன்ற ஆலயங்களை நிறுவ வேண்டும்..."

இளவரசன் பரராசசேகரனை மன்னன் ஏறிட்டுப் பார்த்தான். அவன் குரலில் ஆற்றாமையும் ஒரு விதத்தில் பொறாமையும் நிலவுவதை உணர்ந்து கொண்டான். செண்பகப்பெருமாள் பெருங்கோயிலொன்றினைக் கட்டி முடித்துள்ளமை இளவரசனின் மனதில் ஏக்கத்தைத் தோற்றுவித்திருக்கிறது.

"இந்தக்கோயில் உள்ளவரை அச்சிங்கள மன்னனின் பெயர் இங்கு நிலைத்திருக்கப் போகிறது..."

"அதிலென்ன பரராசா... உன் காலத்தில் நீயும் இது போன்ற அற்புதங்களைச் செய்..."

"செய்யத்தான் போகிறேன். அப்பா. நமது தலைநகரை ஒரு பெருங் கோட்டைக்குள் அடக்கப்போகிறேன். எதிரிகளின் படைவந்ததும் சிறிது கூட எதிர்த்து நிற்கப் பாதுகாப்பான கோட்டையை நாம் சிங்கை நகரில் கட்டிக் கொள்ளவில்லை. அந்தத் தவற்றினை இங்கு விடக்கூடாது. அக்கோட்டையின் நான்கு வாயில்களிலும் நான்கு பெருங்கோயில்கள் அமைக்கப்போகிறேன். குளங்களும் கேணிகளும் இந்நகரை அலங்கரிக்கப் போகின்றன..."

மன்னன் மகனை வியப்புடன் பார்த்தான்.

"உன் எண்ணங்கள் நிறைவேறட்டும். எனக்கு வயதாகிவிட்டது, பரராசா."



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"உங்களுக்கா அப்பா... இளஞ்சிங்கம் போல நீங்கள் போரிட்டதை நான் பார்த்தேன். உங்கள் வாள்வீச்சின் முன் நான் எம்மட்டு..." என்று பரராசசேகரன் நகைத்தான்.

"இல்லை புதல்வா, நான் விரைவில் இந்தப் பாரத்தை உன்னிடம் இறக்கிவிடப் போகிறேன்."

ஆலயத்திலிருந்து திரும்பி அரண்மனைக்கு வரும் போது மன்னன் சொன்னான். "நாட்டின் சுதந்திரத்தை மீட்கும் வரை திருமணம் செய்துகொள்ள மாட்டாய் என்று நீ சூளுரைத்தாய், பரராசா. இப்போது உனக்கு முப்பத்தைந்து பராயம்... நீ இந்த இராச்சியத்தின் எதிர்கால மன்னன். உனக்கு எற்ற ஒருத்தியை தேர்ந்தெடுக்காதிருப்பதைப் பார்த்துக்கொண்டிருப்பது ஒரு தந்தைக்கு அழகல்ல."

இளவரசன் சிறிது நாழிகை மௌனம் சாதித்தான். எதையோ சிந்திப்பவனாகக் காணப்பட்டான். இதே கேள்வியை சில நாட்களின் முன் அவனிடம் வல்லியத்தேவன் கேட்டான். அதற்கு அவன் சொன்ன பதில் நினைவில் நர்த்தனமிட்டது.

"வல்லியத்தேவா, கலியாணம் செய்யக்கூடாது என்ற எண்ணமில்லை. செய்யத்தான் போகிறேன். என் ஆழ்மனதில் ஒரு பெண்ணின் சௌந்தர்யமான முகம் என்றும் தாமரையாக மலர்ந்திருக்கிறது. பதினேழு ஆண்டுகளுக்கு முன் ஒரு நாள் அவளை நான் அரண்மனையில் பார்த்தேன். அவள் எனக்காக காத்திருப்பது போலவும் நான் அவளுக்காக காத்திருப்பது போலவும் ஒரு உணர்வு...."

"யார் இளவரசே?..."

"இப்போது சொல்லமாட்டேன்... காலம் வரும் போது நீயே அறிவாய்..."

அவர்கள் அரண்மனைக்குள் வரும் போது அவன் மௌனத்தை மன்னன் களைந்தான். "என்ன புதல்வா, கடும் சிந்தனை?..."

"அப்பா.. எனக்கு மனைவியாக வருபவள் எப்படிப்பட்டவளாக இருக்க வேண்டும்?.."

மன்னன் வியப்புடன் மகனை ஏறிட்டுப் பார்த்தான்.

"அரச பரம்பரையைச் சேர்ந்தவளாக இருக்க வேண்டும்...."

"இல்லாவிட்டால்..."

"ஆரிய குலத்தைச் சேர்ந்தவளாக இருக்க வேண்டும்."

பரராசசேகரனின் முகம் பூரணமாக மலர்ந்து சிவந்தது.

"வருகிறேன், அப்பா..." என்றவாறு விரைந்து மாளிகையை விட்டு வெளியே வந்தான். சில நாழிகைப் பொழுதில் உயர்ந்த அரபிக்குதிரையில் தாவி வேகமாக வடக்கு நோக்கி தட்டிவிட்டான்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அவன் மனதில் கொந்தளிக்கும் ஆவலின் வேகத்திற்குக் குதிரையின் வேகம் போதாது போலப்பட்டது.

"மீனலோசினி..." அவன் உதடுகள் காதலோடு சின்னமனத்துளார் மகளின் பெயரை உச்சரித்தன. அவன் மனக் கண்களில் பதினாறு வயது நிரம்பிய மீனலோசினியின் வடிவம் நிறைந்து கிடந்தது. இடையில் பதினேழு ஆண்டுகளைக் காலம் உருட்டிவிட்டதை அவனால் சிந்திக்க முடியவில்லை. விரைந்து வந்து மாவிட்டபுரத்தை அடைந்தான். கண்களில் ஆவலும் உடலில் உணர்ச்சியும் பொங்கிப் பிரவகிக்க, இளவரசன் மாவிட்டபுரம் கந்தவேள் ஆலய அக்கிரகாரத்தை அடைந்தான். சின்னமனத்துளாரின் வீட்டைத் தெரிந்து கொள்வதில் சிரமம் இருக்கவில்லை.

குதிரை ஒன்று விரைந்து வந்ததையும் அது வாசலில் வந்து தரித்து நின்றதையும் ஒருவன் குதிரையில் இருந்து குதித்ததையும் கண்ட ஒரு பெண் மாளிகையின் கதவைத் திறந்து கொண்டு வெளியில் வந்தாள். அவள் இடுப்பில் அழகிய மதலை ஒன்று சிரித்துக் கொண்டிருந்தது. கழுத்தில் மஞ்சள் கயிறும் நெற்றியிலும் உச்சியிலும் இடப்பட்டிருந்த குங்குமமும் அவள் மணமானவள் எனப் பறைசாற்றின.

அவள் மீனலோசினி தான்.

பரராசசேகரன் திக்பிரமை பிடித்தவன் போல் எதுவும் கூறமுடியாது அப்படியே உறைந்து நின்றான். அவள் அவனை அடையாளம் கண்டு கொண்டாள்.

"வாருங்கள், இளவரசே..." என அன்போடு அழைத்தாள்.

பரராசசேகரன் நின்றவிடத்திலிருந்து அசையவில்லை. அவன் இதயம் ஏமாற்றத்தால் உடைந்தது. உடலில் மெதுவான நடுக்கம், விழிகள் கலங்கிவிடுவன போலத் தத்தளித்தன. அப்படியே கால்களை பின்னெடுத்து வைத்தான்.

"இளவரசே..." அவள் கலக்கத்தோடு அழைத்தாள்.

பரராசசேகரன் குதிரையில் வேகமாகத் தாவி ஏறினான்.

"இளவரசே.." என மீனலோசினி கவலையோடு குரல் தந்தாள்.

"சின்னமனத்துளார் மகளே, எனக்காக உன்னால் சில காலம் காத்திருக்க முடியவில்லையே?."

அம்பிலிருந்து விடுபட்ட வேகத்தில் குதிரை விரைந்து திரும்பிச் சென்றது.

சின்னமனத்துளார் மகள் அழத்தொடங்கினாள்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பின்னிகழ்வு: 1

# புண்ணியபூமி

# 1

## வேத சாட்சிகளின் சம்மாரம்

1591 ஆம் ஆண்டு மாரி கால ஆரம்பம்.

அஸ்தமனத்திற்கு இன்னமும் ஏழரை நாழிகைப் பொழுதிருந்தது. உயர்ந்து வளர்ந்திருக்கும் மலர்ச்செடிகளின் கிளைகளை பக்குவமாக வளைத்து மலர்களை பறிக்க உதவும் கொழுக்கித்தடியில், பூக்கூடையை கோர்த்து, தோளில் மாட்டிக் கொண்டு அரசப் பெருந்தெருவில் சிவசங்கிலி என்ற சைவப் பண்டாரம் நடந்து வந்து கொண்டிருந்தான். இருபது வயது மதிக்கத்தக்க இளைஞன்.

தூரத்தில் நல்லூர்க் கந்தனின் இராசகோபுரம் வானளாவிக் கம்பீரமாகத் தெரிந்தது. அதனைத் தூரத்தில் காணும் போதே, அவன் உதடுகள் சரவணபவ என்று உச்சரித்தன. நெற்றியில் திருநீறும் சந்தனப் பொட்டும், இடுப்பில் தோய்த்து உலர்த்திய பளுப்பேறிய வேட்டியும் அதனை அரையோடு இறுக்கிக் கட்டிய துண்டும் அவன் உளத்தூய்மைக்குச் சான்றுகளாக விளங்கின.

சங்கபோதி புவனேகபாகு கந்தவேள் ஆலயம் அமைத்து நூற்றியிருபத்தினான்கு ஆண்டுகள் ஓடிவிட்டன. அதற்குள் பல பல மாற்றங்கள் யாழ்ப்பாண இராச்சியத்தில் நிகழ்ந்துவிட்டன. சிங்கள ஆதிக்கத்தை யாழ்ப்பாண அரசிலிருந்து ஒழித்து 1467 இல் கனகசூரியசிங்கை ஆரியன் மீண்டும் யாழ்ப்பாணத்தின் சிம்மாசனத்தில் அமர்ந்தான். பதினொரு ஆண்டுகளின் பின்னர் அவன் இறக்க அவன் மகன் பரராசசேகரன் யாழ்ப்பாண இராச்சியத்தின் மன்னனாக முடிசூடிக்கொண்டான்.

சிங்கைப்பரராசசேகரன் காலத்தில் யாழ்ப்பாண இராச்சியம் முக்கியமாக நல்லூர் புதுப்பரிமாணம் பெற்றது. அவனது தந்தை கனகசூரியசிங்கை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆரியன் நல்லூரை எழில் கொஞ்சும் தலைநகராக்கப் புரிந்த செயல்களை பரராசசேகரன் தொடர்ந்து இயற்றினான்.

சங்கிலி என்ற சைவப்பண்டாரம் நல்லூர்க் கந்தசுவாமி கோயிலை அடைந்த போது, மகாசந்தி எனப்படும் சாயரட்சைப் பூசைக்கான மணி ஒலித்தது. அவன் அவசர அவசரமாகத் தான் பறித்து வந்த மலர்களை, கைலாசநாதக்குருக்களிடம் கொடுத்துவிட்டு, சுவாமி தரிசனத்திற்காக மண்டபத்தில் ஒதுங்கி நின்றிருந்தான். மாலைப்பூசைத் தரிசனத்திற்காக அரச மகளிர் வந்திருந்தனர்.

பூசை முடிந்து அவர்கள் சென்றதன் பின்னர் கைலாசநாதக்குருக்கள், வெளிமண்டபத்திற்கு வந்தார். அங்கு சங்கிலி அவரை எதிர்பார்த்துக் காத்திருப்பவன் போல நின்றிருந்தான். வழக்கமாக மாலைவேளைகளில் மண்டபத்தில் அமர்ந்திருந்து சில பொழுது உரையாடுவது அவர்களின் வழக்கம்.

"ஊரில் என்ன புதினம் கேள்விப்பட்டாய் சங்கிலி" என்று குருக்கள் அவனைக் கேட்டார். அவன் அவர் முன் சற்று விலகித் தூணோடு சாய்ந்து அமர்ந்து கொண்டான்.

"மீண்டும் யுத்தம் வரப்போகுதாம். பறங்கிகள் மீண்டும் யாழ்ப்பாணத்தின் மீது படையெடுக்கப் போகின்றார்களாம். எங்கள் இராச்சியத்தில் அமைதியே ஏற்படாது போல இருக்கு ஐயா..." என்றான் சங்கிலி கவலையுடன்.

"எல்லாம் அந்த மன்னன் செகராசசேகரனால் வந்த வினை..."

அவன் வேகமாகக் குறுக்கிட்டான்.

"அப்படிச் சொல்லாதீர்கள். ஐயா... இறந்து போன மன்னர் பெருமானைப் பற்றி அப்படிச் சொல்லாதீர்கள். இலங்கை முழுவதும் போர்த்துக்கேயப் பறங்கிகள் இன்று ஆதிக்கம் செலுத்துகிறார்கள். யாழ்ப்பாண இராச்சியத்தில் மட்டும் அவர்களால் ஆதிக்கம் செலுத்த முடியவில்லை. அதற்குக் காரணம் இறந்து போன அந்த இராசா சங்கிலி செகராசசேகரன் தான் ஐயா..."

"உனக்கு அவரைப் பற்றிச் சொன்னால் பிடிக்காது..."

"அவர் ஒரு வீரசைவர்... அதனால் தான் என் தாயார் அவர் பெயரை எனக்கு வைத்தாள்.... அவர் ஒரு மாவீரன். எதற்கும் அஞ்சாதவர். அந்நியர்களை எங்கள் இராச்சியத்தில் கால் வைக்க அவர் விடவில்லை.... அவர் ஒரு வீரசைவர்... அதனால் தான் இந்த அரசில் வேறு மதங்கள் பரவுவதை அவர் வெறுத்தார்..."



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"அதனால் தான் இவ்வளவும் வந்தது, சங்கிலி. கடந்த நாற்பத்தொன்பது வருடங்களாக இந்த இராச்சியத்தின் அமைதியான வாழ்க்கை அழிந்து விட்டது. செகராசசேகர் மன்னாரில் மதம் மாறிய அறுநூறு பேரை சம்மாரம் செய்தார். அப்படி ஒரு செயலை செய்திருக்கத் தேவையில்லை. அதனால் தான் அதற்குப் பழிவாங்குவது போல பறங்கிகள் அடிக்கடி படையெடுத்து வருகிறார்கள்...அல்பொன்சோதே சௌதா என்ற பறங்கித்தளபதி படையோடு வந்து அழித்தான். அதன்பின்னர் கொன்ஸ்ந்தாக்தினுதே பிறகன்சா என்பவன் படையோடு வந்தான். இப்போது மீண்டும். இந்த எழுபத்தைந்து வருடங்களில் நான்கு மன்னர்கள் மாறிவிட்டார்கள். அமைதி ஏற்படவில்லை. சாபம் செய்த பூமியாகிவிட்டது...." என்றார் குருக்கள்.

"நீங்கள் என்ன வேண்டுமானாலும் சொல்லுங்கள், ஐயா சங்கிலிசெகராசசேகரர் மாதிரி ஒரு மன்னன் இல்லாததால் தான் நமது இராச்சியம் பரசமய பூமியாகிவிட்டது. இப்போதுள்ள மன்னர் புவிராசபண்டாரம் வீரர்தான். ஆனால் அந்த மன்னரைப் போல இல்லை. இல்லாவிட்டால் நல்லூரில் அதுவும் தலைநகரில் மகம்மது மார்க்கத்தவர்கள் வந்து குடியேறுவார்களா?"

"அவர்கள் வியாபாரிகள்... தலைநகரில் தான் குடியேறுவார்கள்... உசனில் இருந்து கொண்டு சாவகச்சேரி, கொடிகாமம், மீசாவில் எனும் இடங்களிலுள்ள சந்தைகளில் வியாபாரம் செய்து கொண்டிருந்தார்கள். நல்லூர் பெருநகராக விருத்தியடைந்ததும் இங்குவந்து குடியேறிவிட்டார்கள்...."

"முதலில் கந்தச்சாய்பு என்பவரும் இரு குடும்பங்களும் தான் வந்தனர். இன்று இருபது குடும்பங்கள் அங்குள்ளன..."

"அவர்கள் இருந்துவிட்டுப் போகட்டும்... ஆனால் அவர்கள் ஆதி நல்லூர்க் கந்தசுவாமி கோயிலிருந்த இடத்தில் குடியேறியிருப்பது தான் கவலைக்குரியதாக இருக்கிறது..."

"ஆமாம் ஐயா... குருக்கள் வளவு என்றவிடத்தைச் சுற்றித்தான் அவர்கள் குடியேறியிருக்கிறார்கள். அந்தவிடத்தில் கொஞ்ச நாட்களாக ஒரு துறவி காணப்படுகிறாராம். பெரிய யோகியாம்.. கண்டீர்களா?..."

கந்தசுவாமி கோயில் குருக்கள் நிமிர்ந்தமர்ந்தார்.

"ஆமாம்... ஆமாம்.. அருள் விளக்கமுள்ள யோகி என்று தான் கூறுகிறார்கள். தூரத்தில் கண்டிருக்கிறேன். பலர் அவரிடம் வருகிறார்கள்..."



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"அவர் எந்தச் சமயத்தவர் என்று ஒருவருக்கும் தெரியவில்லை. சைவர்கள் சென்று வணங்கினால் சிவனைப் பற்றிக் கூறுகிறாராம். முகம்மது மார்க்கத்தவர்கள் சென்று வணங்கினால் அல்லாவைப் பற்றிச் சொல்கிறாராம். அவரைச் சென்று ஒரு தடவை நானும் தரிசிக்க இருக்கிறேன் ஐயா.."

"அது புண்ணிய பூமி, அப்பா. இப்படி எத்தனை யோகிகளையும் சித்தர்களையும் காணப்போகின்றதோ? யாருக்குத் தெரியும்?"

கிழக்கு வானில் நிலவின் அரை வடிவம் தெரிந்தது. அவர்கள் எழுந்தார்கள். குருக்கள் ஆலயத்துக்குள் நுழைய முன் கேட்டார்.

"அந்த யோகியின் பெயர் என்ன?.."

"சிக்கந்தர் என்கிறார்கள்..." என்றான் சிவசங்கிலி.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 2 குருக்களின் ஆவேசம்

கொன்றை மர நிழலில் சாந்தமே வடிவமாக யோகியார் அமர்ந்திருந்தார். மாலைக் கதிர்களின் தழுவலில் அவர் அமர்ந்திருக்க சூழல் வெளி அருள் வெள்ளமாக பிரகாசிப்பதாகச் சிவசங்கிலிக்குப்பட்டது. அமைச்சர் புவனேகவாகுவால் கட்டப்பட்ட முதலாவது கந்தசுவாமி கோயில் இருந்தவிடத்திற்கு அருகில் தான் யோகியார் நிஷ்டையில் அமர்ந்திருக்கும் கொன்றைமரம் வானோங்கி வளர்ந்திருந்தது.

அவர் முன் சிலர் நிலத்தில் பயபக்தியுடன் அமர்ந்திருந்தர்கள். பலர் அவர் முன் கைகட்டி வாய் புதைத்து நின்றிருந்தார்கள். சிவசங்கிலி சற்றுத்தூரத்தில் நின்றவாறே அவரைக் கவனித்தான்.

அவருக்கு எத்தனை வயதிருக்கும் என்பதை அவனால் அனுமானிக்க முடியவில்லை. அவர் தலையில் முன்பக்கத்தில் வழுக்கல் விழுந்திருந்தது. அடர்த்தியாக வெண்பஞ்சினைப் பழிக்குமாப் போல தாடி வளர்ந்திருந்தது. அரையில் பழுப்பேறிய கசாயத் துண்டும் அணிந்திருந்தார்.

அவர் முன் அமர்ந்தும் விலகியும் காணப்பட்ட மக்கள் கூட்டத்தில் இருமத மக்களை அவன் கண்டான். மனதில் வியப்புத்தோன்றியது. சைவப்பெரியார் சுப்பிரமணியபிள்ளையும் அங்கிருந்தார். குருக்கள் வளவில் அண்மைக் காலத்தில் குடியேறிய முகம்மது சாய்புவும் அங்கு நின்றிருந்தார்.

யார் இந்த யோகியார் என்ற எண்ணம் அவன் மனதில் முளையிட்டது.

அவன் பல சந்நியாசிகளைக் கண்டிருக்கிறான். பருத்தித்துறையில் மரக் கலங்களிலிருந்து இறங்கி சிவனொளிபாதமலைக்கும் கதிர்காமத்திற்கும் தெற்கு நோக்கிக் கல்நடையாக யாத்திரை போகும் யோகிகள் கூட்டத்தை அவன் கண்டிருக்கிறான். இந்தியாவிலிருந்து அவர்கள் அடிக்கடி யாழ்ப்பாணக்கரையில் இறங்கி தென்புலம் செல்வார்கள்.

அவர்களில் பலர் யோகி வடிவம் தாங்கியவர்களெனவும் ஒரு கதை யாழ்ப்பாணத்தில் நிலவுகின்றது. கண்டி அரசனின் படையில் சேர்வதற்காக இவ்வேடத்தில் அவர்கள் செல்வதாகப் பேசிக் கொண்டார்கள்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அவன் அதை நம்பத் தயாராகவில்லை.

யோகியார் எதையோ கூறுவதையும் அவர் முன் இருந்தவர்கள் அவதானமாக அவற்றை அவதானிப்பதையும் அவன் கண்டான். யோகியாரை நெருங்கிச் செல்ல அவனுக்குத் தயக்கமாக இருந்தது.

பல நாழிகைப் பொழுதின் கழிவில், சுப்பிரமணியபிள்ளை அவ்விடத்திலிருந்து வந்தார். வேட்டியும் உத்தரியமும் அணிந்திருந்த அச்சைவர் சிவசங்கிலியைக் கண்டதும் சற்றுத் தரித்து நின்றார்.

"என்னப்பா இங்கு நிற்கிறாய்?" என்று அவனைக் கேட்டார்.

"யோகியைப் பார்க்க வந்தேன்.." என்றான் அவன்.

"பார்க்கவா வந்தாய்? தரிசிக்க வரவில்லையா." அவனுக்கு பதில் அவனுக்குத் தெரியவில்லை. திகைத்துப் போய் நின்றான். பின்னர் அவசரமாக் கேட்டான: "அவர் யார் ஐயா?"

"யாருக்குத் தெரியும்? நதிமூலத்தையும் ரிஷிமூலத்தையும் எவராலும் அறியமுடியாதப்பா."

"அவரைச் சிக்கந்தர் என்கிறார்களே?"

"அவர் பெரிய மகான் அப்பா. வேத ஆகமங்களின் உட்பொருட்களை நன்கு அறிந்திருக்கிறார். மனிதவாழ்வின் நெறிகளைத் தெளிவாகத் தெரிந்திருக்கிறார். நடந்தது, நடக்கப்போவது யாவற்றையும் தெரிந்த திரிஞானி..."

"நடக்கப் போவது தெரிந்த ஞானி என்றீர்களே? யாழ்ப்பாண இராச்சியத்திற்கு என்ன நடக்கப் போகுதாம்..?" என்று சிவசங்கிலி மீண்டும் கேட்டான்.

"நீ விடமாட்டாய் என்னைப் போக. என்ன நடக்கப்போகுதா? பெரிய யுத்தம் நடக்கப்போகுதாம். பறங்கிகள் படையெடுத்து வரப் போகிறார்களாம்."

சிவசங்கிலி சிரித்தான்.

"எல்லோருக்கும் தெரிந்த விசயம் தான், ஐயா. யுத்தம் வரப்போவது ஊரெல்லாம் தெரியும். பறங்கிகள் படையெடுக்கப்போவது யாருக்குத் தெரியாது?."

சுப்பிரமணியபிள்ளை அவனைக் கோபத்துடன் பார்த்தார்.

"யுத்தத்தின் முடிவு உனக்குத் தெரியுமா? அவருக்குத் தெரிந்திருக்கிறது... யாழ்ப்பாண அரசின் பெரும் தலைகள் இதில் அழியப்போகின்றன. இப்போது நாம் நின்று பேசிக் கொண்டிருக்கிறோமே... வீரமாகாளியம்மன் கோயிலுக்கும் பெரிய ஆலயத்திற்கும் இடைப்பட்ட இந்த வெளியில்... பெரும் போர் நிகழுமாம்,.. அதில் தான் சமாதியாவாராம் என யோகியார் கூறுகின்றார், சங்கிலி..."



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"யுத்தத்தில் நாம் தோற்றுப்போவோமா?"

"பெரும் அழிவின் பின்னர் சமாதானம் ஏற்படுமாம்.."

சுப்பிரமணியபிள்ளை அவ்விடத்தினைவிட்டு நகர்ந்ததன் பின்னரும் சிவசங்கிலி அவ்விடத்தில் நின்றிருந்தான். அவ்விடத்தில் நின்று பார்க்கும் போது யோகியாரின் வடிவம் நன்கு தெரிந்தது. தன்னையறியாமல் கரங்கூப்பி வணங்கினான்.

"என்ன சங்கிலி, தூர நின்றே கும்பிடுகிறாய்?" என்றபடி முகம்மது சாய்பு வந்தார்.

"நீங்களும் இங்கு?....."

"நீ என்ன சொல்கிறாய் என்பது புரிகிறது, தம்பி. அவர் பெரிய பாவா... அவருக்குத் தெரியாதது எதுவுமில்லை. அவர் தன் மார்க்கத்தைத் தான் போதிக்கிறார்."

"பாவாவா?..."

"ஆமாம்... அல்லா கூ அக்பர், அல்லாவே பெரியவன் என்பதை அவர் தெரிந்திருக்கிறார். அல்குர்ரானின் தத்துவ போதனைகளை அவர் எவ்வளவு தெளிவாகத் தெரிந்திருக்கிறார். தெரியுமா?..."

சிவசங்கிலி சிந்தனையில் ஆழ்ந்தான். அவனைக் குழப்பம் ஆட்கொண்டது.

பெரிய ஆலயத்திற்குச் சென்று கைலாசநாதக்குருக்களுடன் பேசும் வரை அவனது குழப்பம் தீரவில்லை.

"நதிகள் பலவாகவிருந்தாலும் பலவழிகளில் சென்றாலும் இறுதியில் கடலைத்தான் அடைகின்றன. சங்கிலி அப்படித்தான்... சமய மார்க்கங்களும் என்கிறது பகவத் கீதை.."

"வரப்போகின்ற யுத்தத்தில் பெரும் அழிவு ஏற்படப்போகுதாம்."

"யுத்தம் என்றால் அழிவு தான், நான் என் வாழ்வில் ஒரு பெரும்போரைச் சந்தித்திருக்கிறேன். முப்பத்தொரு வருடங்களுக்கு முன் 1560ஆம் ஆண்டு மாரிகாலம் தொடங்குவதற்குச் சற்று முன்னர் பிறகன்சா என்ற பறங்கித் தளபதி பெரும் படையுடன் யாழ்ப்பாணத்திற்கு வந்தான். அப்போது எனக்கு பதினெட்டு வயது... நீ பிறந்திருக்கவும் மாட்டாய். எழுபத்தேழு போர்க் கப்பல்களுடன் கரையூரில் அவன் இறங்கினான். நமது மன்னன் சங்கிலி செகராசசேகரனோ பிறகன்சாவின் படை கொழும்புத்துறையில் இறங்குமெனத் தப்புக்கணக்குப்போட்டு அங்கு பெரும் படையுடன் காத்திருந்தார். பண்ணைத்துறையில் காத்திருந்த பட்டத்து இளவரசன் தான் பறங்கிகளின் படையை எதிர்த்தான். இரண்டாயிரம் வீரர்களுடன்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எதிர்த்தும் பறங்கிகள் பொழிந்த குண்டுமாரிக்கு எதிர்நிற்க முடியவில்லை. எனக்கு இன்றும் நினைவிருக்கிறது. வெடித்த பீரங்கிகளின் சத்தம் காதுகளில் கேட்கிறது. தமிழர் படை பின் வாங்கியது.''

''தோற்றுவிட்டார்களா?''

''அப்படித்தான்.... பிறகன்சாவின் படை அணி வகுத்து நல்லூரை நோக்கி வந்தது. சந்தியாகூ.... என்று முழக்கமிட்டவாறு பறங்கிப் படை தமிழர் படையைத் தாக்கியது. நகரின் மதிலை உடைத்துக்கொண்டு பறங்கிப் படை உட்புகுந்தது. நகரினுள் நடந்த யுத்தத்தை நான் கண்ணால் பார்த்தேன். தெருவில் பனையோலைகளால் மூடப்பட்டிருந்த பீரங்கிகள் வெடித்துச் சில பறங்கிகள் இறந்தனர். தமிழர் படை வீடுகளின் மேல் ஏறிநின்று சரமாரி பொழிந்தது. பிறகன்சா ஏறிவந்த குதிரையைக்கூட ஒருவன் வெட்டி வீழ்தினான். அப்படியிருந்தும் தோல்வியே கிட்டியது. மன்னன் சங்கிலி செகராசசேகரன் பிறகன்சாவுடன் இறுதியில் சமாதான ஒப்பந்தம் ஒன்றினை செய்துகொள்ள நேர்ந்தது....''

''நீங்கள் அந்த யுத்தத்தில் என்ன செய்தீர்கள்?''

கைலாசநாதக் குருக்கள் தயங்கினார். பின்னர் மெதுவாகச் சொன்னார்.

''பயந்து ஓடிக் கோயிலினுள் புகுந்து கொண்டேன். சங்கிலி உண்மையில் இப்போது நினைத்தாலும் வெட்கமாக இருக்கிறது. எனக்கே காரணம் தெரியவில்லை...''

''நீங்கள் பிராமணர்... சைத்திரியரல்லர்..'' என்றான் சிவசங்கிலி. அவரைச் சமாதானப்படுத்துவது போல.

குருக்கள் சற்று நாழிகை மௌனமாகவிருந்தார்.

''அது காரணமாகாது... பிறந்த நாட்டைக் காப்பதற்கு யாராக இருந்தாலும் என்ன? அன்னியர்கள் இங்கு காலடி எடுத்து வைக்கும் போது, நாட்டின் சுதந்திரத்தை காப்பதற்கு யாராக இருந்தால் தான் என்ன? இன்னுமொரு தடவை யுத்தம் வந்தால், நான் முடிவு செய்துவிட்டேன் சங்கிலி...''

''என்ன செய்வீர்கள்?...''

''நானும் யுத்த சன்னத்தனாவேன். ஆயுதம் ஏந்திப் பறங்கிகளுக்கு எதிராகப் போர் செய்வேன்...''

பெரியஆலயக் குருக்களின் உடலில் ஒருவிதமான உத்வேகம் கொந்தளிப்பதை சிவசங்கிலி கண்டான். அவரது ஆவேசம் உண்மையில் நிஜமானது என்பதில் அவனுக்குச் சந்தேகமில்லை.

விழிகளில் வியப்புக் குடிகொள்ள. அவரைப் பெருமிதத்துடன் பார்த்தான்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"உயிர்க் கொலை பாவம் என்றீர்கள்.."

"முட்டவந்த பசுவை வதை செய்யலாம்..."

இருவரும் இருந்தாற் போல வாய்விட்டுச் சிரித்தனர்.

"இந்த நல்லூர்க் கந்தசுவாமி கோயிலும் பெருங்கோட்டை போலத்தான் இருக்கிறது. பலமான உயர்ந்த மதில்கள் அரண்களாக நிற்கின்றன. இங்கிருந்தே நீங்கள் சண்டை செய்யலாம்..." என்று சங்கிலி சிரித்தான்.

"உனக்கு நான் சொன்னவை வேடிக்கையாக இருக்கிறது. இருந்துதான் பாரேன்..."

அவர்கள் அவ்வாறு பேசிக்கொண்டிருந்த வேளையில் மன்னாரிலிருந்து போர்த்துக்கேயப் பறங்கிகளின் யுத்தக் கப்பல்கள், யாழ்ப்பாணம் நோக்கிப் புறப்பட்டன. நாற்பத்திமூன்று மரக்கலங்களிலும் இருநூற்றி ஐம்பது வள்ளங்களிலும் போர் வீரர்கள் நிறைந்திருந்தனர். அப்படைக்கு ஆந்திரே பூர்த்தாடு டி மென்சா என்பவன் தளபதியாக இருந்தான். உண்மையில் அது ஒரு பெருங்கடற்படையாகும். 1200 பறங்கி வீரர்கள் அதில் இருந்தார்கள். அவர்களை விட 3000 லாஸ்கொறின் எனும் சிங்கள வீரர்கள் இருந்தார்கள். சிங்கள வீரர்களுக்கு விக்கிரமசிங்க முதலி என்பான் தளபதியாக இருந்தான்.

குருமார்களின் ஆசியுடன் அப்பெரும்படை புறப்பட்டது. "சந்தியா கூ..." என வீரர்கள் முழக்கமிட்டனர். முன்னணியில் மிதந்த பெரும் மரக்கலத்தில் பூர்த்தாடு நின்றிருந்தான்.

"வேத சாட்சிகளின் படுகொலைக்கு பரிகாரம் காண்.." என மன்னார் பிரதம குருவானவர் கூறியவை அவன் காதுகளில் ஒலித்தன. "அஞ்ஞானிகளாக இருக்கின்ற யாழ்ப்பாண இராச்சியத்து மக்களை அந்த இருளிலிருந்து காப்பாற்ற வேண்டும். பசாசு வணக்கத்தை கைக்கொண்டிருக்கின்ற அம்மக்களைச் சாத்தானின் பிடியிலிருந்து காக்கவேண்டும்."

பூர்த்தாடு வடதிசையை ஆவலுடன் பார்த்தான்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# யுத்தக் கொடுமை

# 3

நல்லூர் அரண்மனையின் ஆலோசனை மண்டபத்தில் பிரதானிகள் பலர் குழுமியிருந்தார்கள். யாழ்ப்பாண இராச்சியத்தின் மன்னன் புவிராசபண்டாரம் பரராசசேகரன் சிம்மாசனத்தில் கம்பீரமாக அமர்ந்திருந்தான். ஆலோசனை மண்டபத்தில் அமர்ந்திருந்த பிரதானிகளின் முகங்களில் கவலைக்கான குறிகள் காணப்பட்ட போதிலும் மன்னனின் முகத்தில் அவை தென்படவில்லை.

"என் முன் இந்த இராச்சியத்தைப் பரிபாலித்தவர்கள் இருவர். பறங்கிகளுக்குத் திறை செலுத்தி வந்தனர் என்பதற்காக நானும் செலுத்த வேண்டும் என்று பறங்கிகள் எதிர்பார்ப்பது தவறு. இந்த இராச்சியம் சுதந்திரமானது. ஆரியச்சக்கரவர்த்திகளால் சுதந்திரமாக ஆளப்பட்டது. என் முன்னோன் பரராசசேகரன் பொருளாதாரத்திலும் கலை வளத்திலும் இந்த நாட்டை செழிக்கச் செய்தார். ஆகவே எம்மீது படையெடுத்துவரும் பறங்கிகளின் ஆதிக்க வெறிக்கு நம் நாட்டின் சுதந்திரத்தை பறிகொடுக்கக் கூடாது. அவர்களை இந்த இராச்சியத்தின் மண்ணில் காலடி பதிக்க விடக்கூடாது..." மன்னனின் சொற்கள் மண்டபத்தில் திடமாகச் செறிந்தன. எவரும் எதுவும் பேசவில்லை.

பிறந்த நாட்டின் சுதந்திரத்தை இழக்க எவரும் தயாராகவில்லை. யுத்த நடவடிக்கைகளை அவர்கள் கலந்தாலோசித்து முடிவு செய்தனர்.

"கொழும்புத்துறையில் தான் பறங்கிகள் இறங்குவார்கள். அத்துறைதான் அவர்களின் மரக்கலங்கள் தங்குவதற்கு வாய்ப்பானது. ஆகவே அவர்களை முதலில் அங்கு நமது படைகள் தாக்கி அழிக்க வேண்டும்..." என்றார் மந்திரி அழகாண்மைவல்ல முதலி.

"அவ்வாறாயின் நமது தளபதி தம்பிரான்முதலி இருநூற்றைம்பது போர் வீரர்களுடன் கொழும்புத்துறைக்குச் செல்லட்டும். இரண்டு பீரங்கிகளையும் 300 துப்பாக்கிகளையும் தன்னுடன் எடுத்துச் செல்லட்டும்..."



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

“எங்களையும் மீறி பறங்கிகளின் படை முன்னேறில்...” என்று தளபதி தம்பிரான் முதலி கேட்டான்.

மன்னன் புவிராச பண்டாரம் தளபதியை ஏறிட்டுப் பார்த்துவிட்டுச் சொன்னார்:

“உங்களையும் மீறி பறங்கிகள் நல்லூரை நோக்கி முன்னேறில் கொழும்புத்துறைக்கும் நல்லூருக்கும் இடையிலுள்ள சிங்கைநகர் அரணில் அவர்கள் தமிழ்ப்படையின் எதிர்ப்பை எதிர் கொள்ள நேரிடும். அவ்விடத்தில் இளவரசன் எதிர்மன்னசிங்ககுமாரன் பெரும்படையுடன் காத்திருப்பான்....”

தளபதி தம்பிரான் முதலி மேலும் ஏதோ சொல்ல வாயெடுத்தபோது மன்னன் குறுக்கிட்டான்.

“சிங்கைநகர் அரணையும் பறங்கிகள் அழித்து, நல்லூர்க் கோட்டைக்குள் நுழைந்தால் வீரமாகாளியம்மன் வெளியில் பறங்கிகள் படையை என் தலைமையில் நான் எதிர் கொள்வேன்... வெற்றி அல்லது வீரமரணம்....” என்று மன்னன் முழக்கமிட்டான்.

மன்னனின் திட்டப்படி படைகள் நிறுத்தப்பட்டன.

கி.பி 1591, ஒக்டோபர் மாதம், 28ஆம் திகதி.

பறங்கிகளின் மரக்கலங்கள் கொழும்புத்துறையில் வந்து தரித்தன. இவ்வளவு பெருந்தொகையான மரக்கலங்களையும் வள்ளங்களையும் காட்டரணுள் மறைந்திருந்து பார்த்துக் கொண்டிருந்த தம்பிரான்முதலி, எதிர்பார்க்கவில்லை என்பது அவன் முகத்தில் படிந்த கவலையிலிருந்து தெரிந்தது.

பறங்கித் தளபதி பூர்த்தாடு கொழும்புத்துறையில் சைனியத்தை இறக்க முயற்சித்த போது தம்பிரான்முதலி தாக்குமாறு கட்டளையிட்டான். அவர்கள் வகுத்திருந்த அரணுக்குப் பின்னிருந்து பறங்கிப் படை இறங்காதவாறு தடுத்தனர். எனினும் பறங்கிகளின் பீரங்கிக் குண்டுமாரியின் முன் தமிழர் படை பின்வாங்க நேரிட்டது. அதனைப் பயன்படுத்தி கரையிறங்கிய பறங்கிகளை எதிர்த்துத் தாக்கியழிக்க தம்பிரான்முதலியும் வீரர்களும் ஆவேசமாகப் போரிட்டனர். தளபதியும் அனைத்துத் தமிழ்வீரர்களும் கொல்லப்பட்டனர்.

“சந்தியா கூ...” எனப் பறங்கிகள் முழக்கமிட்டனர்.

சிங்கைநகர் அரணிலும் பறங்கிகளே வென்றனர். சிங்கைநகர் அரணை அழித்து, பறங்கிகள் படை நல்லூரிட் புகுந்தது. வீரமாகாளியம்மன் கோயிலுக்கும் நல்லூர் ஆலயத்துக்கும் இடையிலுள்ள குருக்கள் வளவு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

என்ற வெளியில் மன்னன் பெரும் படையுடன் காத்திருந்தான். கொன்றை மர நிழலில் அமர்ந்திருந்த யோகியாரை மன்னன் தரிசித்தான்.

"சுவாமி, இவ்விடத்தில் பெரும் யுத்தம் நடக்கவிருக்கிறது. தாங்கள் இவ்விடத்தைவிட்டு அகன்றுவிடுதல் நன்று..." என்ற மன்னனை யோகியார் நிமிர்ந்து பார்த்தார்.

"அறிவோம்... இவ்விடத்தில் சமாதியாகுக என்று நிர்ணயிக்கப்பட்ட விதியாயின் அதனை யாரால் மாற்ற முடியும். மன்னனே என்னைப் பற்றி கவலையை ஒழித்து உன் கடமையை எதிர் கொள்வாயாக...."

மன்னனின் மெய்க்காப்பாளன் சம்பகமாப்பாணன் அரசன் அருகில் வந்தான்.

"அரசே, சிங்கைநகர் அரணையும் தாண்டி பறங்கிகள் படை வந்து கொண்டிருக்கிறது...."

மன்னனின் முகத்தில் கவலை குடிகொள்ளவில்லை. தன் புரவியில் தாவி ஏறிக் கொண்டான்.

நல்லூருள் பறங்கிப் படைகள் அட்டகாசமாகப் பிரவேசித்தன. தமிழ்ப்படை குண்டு அம்பு தீக்குண்டு, கவன்கல் முதலியவற்றால் பறங்கிப்படையைத் தாக்கியது. பறங்கிப்படை துப்பாக்கிச் சன்னங்களை வர்ஷித்துக் கொண்டு முன்வந்தது. தமிழ்ப்படை வாள் வேல் ஏந்தி அவர்களை எதிர்கொண்டது. பயங்கரப்போர் அவ்விடத்தில் நிகழ்ந்தது. மன்னன் புவிராசபண்டாரம் குதிரையில் இருந்தவாறு வாளை சக்கிராயுதமாக வீசிப் பறங்கிகள் தலைகளைக் கொய்தான்.

நீண்டபொழுது யுத்தம் நிகழ்ந்தது. தமிழ்ப்படையில் பெருஞ்சேதம் ஏற்பட்டதைச் சண்பகமாதாக்கன் கண்டான். தோல்வி தங்களை நெருங்கிக் கொண்டிருப்பதைக் கவலையுடன் அவதானித்தான். தனது படைவீரர்களை முன்னணிக்கு அனுப்பிவிட்டு மன்னனிடம் விரைந்து வந்தான்.

"அரசே தாங்கள் இவ்விடத்தை விட்டு தப்பிச் சென்றுவிடுக...."

மன்னன் அவனைக் கனல் பறக்கப் பார்த்தான்

"நானா?... இவ்வளவு பேரை இங்கே விட்டுவிட்டுத் தப்பிச் செல்வதா?"

"அது கேவலமல்ல மன்னா... நீங்கள் உயிர் வாழவேண்டும். இப்போரில் நாங்கள் தோல்வி கண்டால் பின்னர் படைதிரட்டி இந்த நாட்டைக் காப்பாற்ற வேண்டும்..."

மெய்க்காப்பாளனின் ஆலோசனையை மன்னன் ஏற்க நேர்ந்தது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மன்னனின் மெய்க்காப்பாளர் வீரர்கள் முன்னனியினின்றும் போராட மன்னன் புவிராசசிங்கமும் வேறிருவரும் பின்வாங்கிச் செல்லத் தலைப்படுவதை பறங்கிகளின் தளபதி பூர்த்தாடு கண்டான். மன்னனை எப்படியாவது பிடித்தாக வேண்டும், என்ற எண்ணம் எழ ஒருசில புரவி வீரர்களை அழைத்துக் கொண்டு சண்டையிட்டுக் கொண்டிருந்த வீரர்களிடையே வேகமாகப் புகுந்து மன்னனைத் தொடர்ந்தான்.

கொன்றைமர நிழலில் நிஷ்டையில் அமர்ந்திருந்த யோகியார், நிகழ்வதைத் தெரிந்து கொண்டவர் போல சலனமின்றி ஆழ்ந்திருந்தார். பூர்த்தாடுவைத் தொடர்ந்து வந்த குதிரைவீரன் ஒருவன் கரத்திலிருந்த துப்பாக்கியின் விசை, இடறிய குதிரையின் அலைச்சலால் தட்டுப்பட்டு வெடித்தது. கொன்றை மரத்தின் கீழ் ஆழ்ந்த அமைதியின் வசப்பட்டு வீற்றிருந்த யோகியாரின் மார்பில் துப்பாக்கியினின்றும் விடுபட்ட சன்னங்கள் பாய்ந்தன.

நிஷ்டையில் இருந்த நிலையில், நிஷ்டை கலையாமல் அந்த யோகியார் ஒரு பக்கம் சரிந்ததைப் பலர் கண்டனர். கால்களில் பிணைப்பு, மடியில் கோர்த்த படி சேர்த்திருந்த கரங்கள் மோன நிலையில் மூடிய விழிகள் என்பனவற்றில் எதுவிதமான மாற்றமும் நிகழவில்லை. அவர் இருந்த நிலையில் சரிந்து கிடந்தார். மார்பிலிருந்து இரத்தம் குமிழிட்டது.

"பாவா..." என்றலறியவாறு முகம்மது சாய்பு மறைவிலிருந்து ஓடி வந்தான்.

யுத்த களத்தில் தமிழ் வீரர்கள் சரிந்து விழுந்தார்கள். பறங்கிகளின் உடல்களும் இரத்தத்தில் மூழ்கிச் சரிந்தன. எனினும் பறங்கிகளின் துப்பாக்கிகளின் முன் தமிழரின் ஆயுதங்கள் எதிர்நிற்க முடியவில்லை. பறங்கிகள் வெற்றி முழக்கமிட்டார்கள்.

பூர்த்தாடுவின் காதுகளில் வெற்றிமுழக்கம் கேட்டது. அவன் வெற்றிப் பெருமிதத்தோடு மன்னனைப் பிடித்துவிடும் வெறியுடன் விரைந்தான். தன்னைத் தொடர்ந்து எதிரிகள் வருவதைக் கண்ட புவிராசபண்டாரம் உடனடியான மார்க்கமெதுவும் அறியாது எதிர்ப்பட்ட நல்லூர்க் கந்தசுவாமி கோயிலினுள் நுழைந்து கொண்டான்.

கைலாசநாதக் குருக்கள் மன்னன் தப்பித்து வருவதைக் கண்டார். ஓடிவந்தார்.

"அரசே.. ஆபத்திற்குப் பாவமில்லை. கர்ப்பக்கிரகத்தினுள் நுழைந்து உங்களைக் காப்பாற்றிக் கொள்ளுங்கள்..."



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கோயிலின் வெளிக்கதவினை அவசர அவசரமாகத் தாழிட முயன்றபோது வேகமாக வந்த பூர்த்தாடு புரவியோடு கோயிலினுள் புகுந்தான். அவனைத் தொடர்ந்து துப்பாக்கி ஏந்திய வீரர்கள் புகுந்தார்கள்.

கைலாசநாதக் குருக்களின் விழிகளில் அனல்பறந்தது.

முன்னால் விரைந்து வந்த வீரன் ஒருவனின் இடைவாளினை எதிர்பாராமல் உருவி எடுத்துக் கொண்டார். எடுத்த வேகத்தில் வீரன் ஒருவனின் கரம் வாள் வீச்சுக்குள்ளானது.

பறங்கிகள் அவரை மொய்த்துக் கொண்டார்கள். இரத்த வெள்ளத்தில் கோயிலின் வெளிமண்டபத்தில் அவர் சரிந்து கிடந்தார்.

பூர்த்தாடு அடங்காச் சினத்துடன் காணப்பட்டான்.

கோயிலினுள் பறங்கிகள் நுழைந்தவிட்ட செய்தி கேட்டு ஓடி ஒழிந்திருந்த மக்கள் கோயிலை நோக்கி ஓடிவந்தார்கள். அதற்குள் பறங்கிகள் படை கோயிலைச் சுற்றி முற்றுகையிட்டுவிட்டது.

"ஆயுதம் ஏந்தாத மக்களை எதுவும் செய்ய வேண்டாம்...." பூர்த்தாடு அவசரமாகக் கட்டளை பிறப்பித்தான். மன்னன் புவிராசபண்டாரம் கைது செய்யப்பட்டான். அவனைக் கோயிலுக்கு வெளியில் இழுத்து வந்தனர்.

"அவன் தலையை உடனே கொய்து விடுக. அதை ஓர் ஈட்டியில் குத்தி பிரசித்தமான ஓர் இடத்தில் நாட்டிவிடுக..." என்று பூர்த்தாடு கட்டளையிட்டான்

கணப் பொழுதில் என்ன நடந்தது என்று அறிவதற்கு முன்னரே மன்னனின் தலை துண்டிக்கப்பட்டது. அந்தக் கொடூரக் காட்சியை தூரத்தில் நின்றபடியே சிவசங்கிலி கண்டான். விழிகளில் முட்டிமோதிக் கொண்டு கண்ணீர் சரிந்தது. அழுத்தித் துடைத்துக் கொண்டான்.

கோயிலினுள் குருக்களின் குடும்பத்தினர் ஓலமிடுவது கேட்டது.

அங்கு மட்டும் தாமா? அன்று அந்த மண்ணில் சரிந்த வீரர்கள் அனைவரதும் குடும்பங்கள் கண்ணீர் விட்டன. யாழ்ப்பாண இராச்சியமே அழுதது.

"முருகா, ஏன் இந்தக் கொடுமை? இப்படிபொரு யுத்தம் தேவைதானா?" என்று சிவசங்கிலி அலறினான்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 4 பிலிப் தே ஒலிவேறா

1620, வைகாசி மாதம், 10 ஆம் திகதி கோட்டையின் அனல் வெப்பம், யாழ்ப்பாணத்தை வியாபித்திருந்த ஒரு நண்பகல் வேளையில் பூநகரியில் பறங்கிகளின் படை காலடி வைத்தது. சோழக்காற்று முழுப்பலத்துடன் வீசத் தொடங்கியிருக்கவில்லை. காட்டுவெப்பம் தீயாகப் பறங்கிகளின் சிவந்த தோலை எரித்துக் கறுக்கவைத்தது.

போர்த்துக்கேயப் பறங்கிகள் படைக்குத் தலைமை வகித்து நடத்தி வந்த பிலிப்தே ஒலிவேறா, களைப்புடன் குதிரையில் அமர்ந்தபடி கண்முன் விரிந்துகிடக்கும் களப்புக் கடலைப் பார்த்தான். அவன் அருகில் பிறிதொரு புரவியில் அவனது உபதளபதி தெயிக்சேறா, கவலையுடன் அமர்ந்திருந்தான். அவர்களின் பின்னால் அணிவகுத்து வந்திருந்த மூன்று போர்த்துக்கேய பட்டாள வீரர்களும், ஐந்நூறு சிங்களவரைக் கொண்ட லாஸ்கொறின் படைவீரர்களும் தளபதிகளின் ஆணையை எதிர்பார்க்காமலேயே நாகதேவன் துறையில் காணப்பட்ட பொதுக் கிணற்றினைச் சூழ்ந்து கொண்டார்கள். பலர் காட்டு மரங்களின் நிழல்களில் ஒதுங்கிக் கொண்டார்கள்.

“கப்பித்தான் மேஜர் அவர்களே எனக்கு எங்களது படையெடுப்புக்களில் நம்பிக்கை குறைந்து வருகின்றது...” என்றான், தெயிக்சேறா. அவன் குரலில் கவலையும் அதேவேளை ஆவேசமும் தொனித்ததை ஒலிவேறா உணர்ந்தான். நீண்டதூரம் கொழும்பிலிருந்து கரையோரமாகப் பல நாட்கள் கடந்து வந்த களைப்பும் தெரிந்தது.

“ஏன்...” என்று வினாவியபடி, குதிரையிலிருந்து குதித்து நிழல் விருட்சமொன்றை நாடிச் சென்றான். ஒலிவேறா கம்பீரமான உருவம் உபதளபதி தெயிக்சேறாவும் குதிரையிலிருந்து இறங்கி அவனைத் தொடர்ந்தான்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"இலங்கையில் பெரும் பகுதியில் போர்த்துக்கேயரின் ஆட்சி நிலைநாட்டப்பட்டுள்ளது. கண்டி இராச்சியத்திலும் யாழ்ப்பாண இராச்சியத்திலும் மாத்திரம், இவ்வளவு படை வலிமை கொண்ட நம்மால் நமது ஆதிக்கத்தை இன்னமும் ஸ்திரப்படுத்த முடியவில்லை..."

தொப்பியைக் கழற்றி எடுத்தபடி நிழல் மர அடியில் ஒலிவேறா சாய்ந்து கொண்டான்.

"நீ சொல்வது தவறு தெயிக்சேறா, யாழ்ப்பாண இராச்சியத்தில் நடப்பது நமது ஆட்சிதான்..."

தெயிக்சேறாவின் இதழ்கோடியில் ஏளனமான புன்னகை விரிந்தது.

"அப்படித்தான் எல்லாரும் கருதுகிறார்கள். யாழ்ப்பாண இராச்சியத்தை கைப்பற்ற மூன்று தடவைகள் படையெடுத்தோம், வென்றோம், நடந்ததென்ன? அங்குள்ள ஒருவனை மன்னனாக்கிவிட்டுத் திறைபெற்று மீண்டோம். மேயர் பூர்த்தாடு 1591ஆம் ஆண்டு இற்றைக்கு இருபத்தொன்பது வருடங்களுக்கு முன் யாழ்ப்பாணத்தைக் கைப்பற்றி மன்னனைச் சிரச்சேதம் செய்தார். ஆனால் அவரும் தவறு செய்தார். யாரோ இளவரசன் எதிர்மன்னசிங்கனை அரசனாக்கிவிட்டுத் திரும்பி வந்தார். நீங்கள் சொன்னீர்கள்... யாழ்ப்பாண இராச்சியத்தில் நமது கொடி பறக்கிறது என, இது ஏற்கக்கூடியது தானா? அவ்வாறாயின் இன்று இப்பெரும் படையுடன் மீண்டும் யாழ்ப்பாணத்தின் மீது நாங்களேன் படையெடுத்து வர வேண்டும்?."

"நம்மால் நியமிக்கப்பட்ட மன்னனை நீக்கிவிட்டு சங்கிலிகுமாரன் என்றொரு அரசகுமாரன் ஆட்சியைக் கைப்பற்றிக் கொண்டான். அத்தோடு அவன் நமக்குத் திறை செலுத்தவும் மறுத்து விட்டான். ஆதலால் அவன் தண்டிக்கப்பட வேண்டியவன்..."

"அதை நான் ஏற்றுக் கொள்ளப் போவதில்லை. இம்முறை யாழ்ப்பாண இராச்சியத்தின் அரச பரம்பரையை முற்றாக அழித்துவிட்டு நானே யாழ்ப்பாண இராச்சியத்தின் நிர்வாகப்பொறுப்பை ஏற்கப்போகின்றேன். இம்முறை போர்த்துக்கேயரின் நேரடி ஆட்சி யாழ்ப்பாணத்தில் நிலைநாட்டப்படும். நமது குருவானவர்கள் சபிக்கப்பட்ட யாழ்ப்பாண மக்களை, தேவனின் நற்கருணைக்குரியவர்களாக மாற்றுவார்கள்....அதற்கு முதற்கட்டமாக இம்முறை யாழ்ப்பாணத்திலுள்ள பசாசு வழிபாட்டிடங்கள் அனைத்தையும் தகர்த்தெறியப் போகிறேன்..." என்றான் பிலிப்தே ஒலிவேறா. அவன் விழிகளில் தொனித்த ஆவேசத்தைக் கண்ட உபதளபதி மௌனமானான்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பிலிப்தே ஒலிவேறா கூறியவாறு செய்தான். பூநகரியிலிருந்து யாழ்ப்பாணக் கரைக்குத் தோணிகள் மூலம் போர்த்துக்கேயரின் படை சென்றது. தோணிகள் குறைவாக இருந்தன. அதனால் முழுவீரர்களும் அக்கரையை அடைய எட்டு நாட்கள் பிடித்தன. வண்ணார்பண்ணையில் தமிழர் படைக்கும் பறங்கிகள் படைக்கும் பெரும் யுத்தம் நிகழ்ந்தது. தமிழர் படை தோல்வி கண்டது. மன்னன் சங்கிலிகுமாரனும் அவன் குடும்பத்தினரும் சிறைப்பிடிக்கப்பட்டுக் கோவைக்கு அனுப்பப்பட்டனர். சிங்கை ஆரிய மன்னனின் இறுதிச் சந்ததிகள் யாழ்ப்பாண இராச்சியத்தின் மண்ணிலிருந்து நாடு கடத்தப்பட்டனர்.

பிலிப்தே ஒலிவேறாவின் பறங்கிப்படை யாழ்ப்பாணத்தில் எதிர்ப்பட்ட சைவ ஆலயங்களைத் தகர்த்துத் தரைமட்டமாக்கத் தொடங்கியது. ஆலயங்கள் தகர்க்கப்பட்டு தரைமட்டமாக்கப்படும் செய்தி விரைவாக நல்லூருக்குப் பரவியது.

சிவசங்கிலி பிரமை பிடித்தவன் போலானான். அவன் கண்களின் முன் இருபத்தொன்பது ஆண்டுகளுக்கு முன் நிகழ்ந்த யுத்தத்தின் கொடூர நிகழ்வுகள் தோன்றின. குருக்கள் வளவில் சமாதியான யோகியாரும் நல்லூர்க் கந்தசுவாமி கோயில் உட்பிரகாரத்தில் மன்னனைக் காப்பாற்ற வாளேந்தி மரணமடைந்த கைலாசநாதக்குருக்களையும் ஒருகணம் எண்ணிக் கொண்டான். அவன் உடல் தளர்ந்தது.

அந்த நிகழ்வுகளுக்கு பின் அவன் உடலளவிலும் தளர்ச்சியடைந்திருந்தான். வயோதிபத்தின் சுவடுகள் உடலில் ஆக்கிரமிக்கத் தொடங்கியிருந்தன. கோயில் தொண்டினைத் தவிர வேறொன்றையுமறியாத அந்தச் சுத்தப்பிரமச்சாரியின் மனதில் நல்லூர்க் கந்தசுவாமி கோயிலை அழியாது காப்பாற்ற வேண்டும் என்ற ஆவேசம் தலை தூக்கியது.

யாரை யார் காப்பது?

அவன் நல்லூர்க் கந்தசுவாமி கோயிலுக்கு விரைந்து வந்தபோது கோயிலின் முன் பெருந்திரளான மக்கள் குழுமியிருந்தார்கள். பெரிய ஆலயத்துக் குருக்களும் சுப்பிரமணியபிள்ளையும் வேறு முக்கிய பிரமுகர்களும் அங்கு நின்றிருந்தனர். எல்லார் முகங்களிலும் கவலையின் கோடுகள். முகங்கள் இருண்டு ஏக்கவசப்பட்டிருந்தன.

“சங்கிலி உன்னிடம் ஒரு பெரிய பொறுப்பைத் தரப்போகிறோம். பெரிய ஆலயத்திற்கு யாது நிகழுமோ தெரியாது. இந்த ஆலயத்து ஆபரணங்களையும் கோயில் விதானங்கள் வரையப்பட்டிருக்கும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

செப்பேடுகளையும் நீ பாதுகாப்பாக எடுத்துக் கொண்டு யாழ்ப்பாணத்தைவிட்டு வெளியேறவேண்டும். இங்கு வைத்து இவற்றை பாதுகாக்க முடியாது....” என்றார் சுப்பிரமணியபிள்ளை.

“கந்தன் மீது உன்னை விடப் பக்தி கொண்டவர்கள் யார் இருக்கிறார்கள்? பந்தபாச ஆசைகளுக்கு அப்பாற்பட்டவன் நீ... உன்னை நாங்கள் நம்புகிறோம். இவற்றை எடுத்துக் கொண்டு மட்டக்களப்புக்கு செல். இங்கு நிலைமை சீரானதும் மீண்டும் வா...”

“அப்ப இங்குள்ள சிலாவிக்கிரகங்கள்?...”

“அவற்றையும் எடுத்து பூதராயர் குளத்தில் மறைவாகப் புதைக்கப்போகிறோம், அப்பா...” ஷண்முகநாதக் குருக்களின் விழிகள் நீரைச் சொரிந்தன. “ஆண்டவன் எங்களைச் சோதிக்கின்றான்...”

இவ்வளவும் நடந்த மூன்றாம் நாள் பிலிப்தே ஒலிவேறா பெரும்படையுடன் பெரிய ஆலய வீதியில் அட்டகாசமாகப் பிரவேசித்தான். வானளாவி உயர்ந்த கோபுரங்களுடன் நிமிர்ந்து நின்றிருந்த ஆலயத்தின் கம்பீரம் அவனை ஒருகணம் வியப்படைய வைத்தது.

“பைசாச வணக்கத்தின் பெரிய ஆலயம் இது தான்” என அவன் எண்ணிக் கொண்டான். ஆலயத்தின் முன் குழுமி நின்றிருந்த மக்கள் கவலையுடன் காணப்பட்டனர். சுப்பிரமணியபிள்ளை முன்வந்தார்: “துரை அவர்களே இந்த ஆலயத்தையாவது அழியாது விடுங்கள். எங்கள் சொத்துக்கள் அனைத்தையும் வழங்குகின்றோம்...” என்று இரந்தார்.

ஒலிவேறா அவரை ஏளனமாகப் பார்த்தான்.

“பாவிகளே உங்களை இரட்சிப்பதற்காகவே நாங்கள் வந்திருக்கிறோம்....” என்று ஒலிவேறா முழக்கமிட்டான். அவர்கள் இரந்து இரந்து கேட்க கோயிலை அழித்தற்கான அவனது கொடும் எண்ணமும் இன்னமும் அதிகரித்தது.

“இந்த ஆலயத்தைத் தகர்த்தெறியுங்கள்... இருந்தவிடம் தெரியாமல் அத்திபாரத்தையும் கிளறித்தூர்த்து விடுங்கள்....” என அந்த வஞ்நெஞ்சன் கட்டளையிட்டான்.

அவனது கட்டளை நிறைவேற்றப்படும் போது இரவு படரத் தொடங்கியது. விழிகளில் நீர்வடிய, முல்லைத்தீவைக் கடந்து கரையோர மார்க்கமாக மட்டக்களப்பை நோக்கி ஒரு பரதேசியாகச் சிவசங்கிலி நடந்துகொண்டிருந்தான்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 1

# பின்னிகழ்வு: 2

## கிருஷ்ணையர் சுப்பையர்

## பூமிதானம்

1720 ஆம் ஆண்டு ஒரு பனிக்குளிர்க் காலை.

சைவ மக்களின் பெரிய ஆலயமாக விளங்கிய நல்லூர்க் கந்தசுவாமி கோயிலை போர்த்துக்கேயப் பறங்கிகள் அழித்துத் தரைமட்டமாக்கி ஒரு நூற்றாண்டு காலம் கடந்துவிட்டது. ஸ்ரீசங்கபோதிபுவனேகபாகு கந்தவேள் கோட்டம் அமைந்திருந்த அப்புனித இடத்தில் வானளாவி உயர்ந்து கிறிஸ்தவ தேவாலயம் ஒன்று காணப்பட்டது. பனிப் புகாரூடே வெண்சுண்ணம் பூசப்பட்ட அக்கிறிஸ்தவக் கோயில் நிழலுருவமாகத் தோற்றம் தருவதை சுப்பையர் சிறிது நேரம் பார்த்துக் கொண்டு நின்றிருந்தார்.

அவர் கண்களுக்கு நூற்றாண்டுகளுக்கு முன் அவ்விடத்தில் சைவத்தின் மகோன்னதத்தை பறைசாற்றிக் கொண்டு, கோபுரக் கலசங்களோடு உயர்ந்து நின்றிருந்த கந்தவேள் ஆலயம் தெரிவதாகப்பட்டது. அவர் அக்கோயிலைத் தரிசிக்கும் பாக்கியம் பெற்றவரல்லர். என்றாலும் அவரது கொள்ளுப்பாட்டனார் ஷண்முகநாதக் குருக்கள் வாயிலாக வழிமுறையாக அறிந்துகொண்டிருந்த விபரங்கள் கந்தனாலயத்தின் அருள் விளக்கத்தைத் தெரிந்துகொள்ளப் போதுமானது.

அவர் கண்கள் கலங்கின.

கிருஷ்ணையரின் வலக்கரத்தை பற்றியபடி ஒரு சிறுவன் நின்றிருந்தான். குடுமியும் பூணூலும் இவனும் பிராமண குடும்பத்தைச் சேர்ந்தவன் என அறிவித்தன. கிருஷ்ணையரின் தங்கை மகன் அவன்.

"போவோமா?...." என்று அவன் வலக்கரத்தை உலுக்கினான்.

"கார்த்திகேசா, இந்த இடத்தில் பெரியதொரு ஆலயம் இருந்தது. எம்முன்னோர்கள் தான் குருக்களாக இருந்து இந்த ஆலயப் பூசைகளைச் செய்து வந்தார்கள். ஒரு நூற்றாண்டுக்கு முன் இந்தக் கோயில் பறங்கிகளால்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இடிக்கப்பட்டது. அவ்வேளை இந்நாட்டின் தலைநகர் நல்லூர்தான்... இது தான்! இன்று யாழ்ப்பாணம் தலைநகராகி விட்டது. பெரிய கோயிலினை உடைத்து அதன் கற்களைக் கொண்டு பண்ணையில் பெரியதொரு கோட்டையையும் பறங்கித் தெருவில் வீடுகளும் கட்டிக்கொண்டார்கள்."

"உலாந்தர்களா இங்கிருந்த கோயில்களை உடைத்தார்கள்" எனக் கார்த்திகேசு கேட்டான்.

"இப்போது நம்மை ஆள்கின்ற உலாந்தர்கள் இக்கோயிலை இடிக்கவில்லை. போர்த்துக்கீசப் பறங்கிகளே அந்தப் பாவக் காரியத்தைச் செய்தார்கள். அதனால் அவர்களால் இந்த நாட்டை நீண்ட காலம் ஆள முடியவில்லை. 1658ஆம் ஆண்டு இந்த மண்ணிலிருந்து போர்த்துக்கீசப் பறங்கிகளை உலாந்தர்கள் துரத்தியடித்துவிட்டு ஆட்சிப்பொறுப்பை எடுத்துக்கொண்டார்கள். எப்படி சைவக் கோயில்களை இடித்தும் இடியாதுமாற்றியும் தங்களது கத்தோலிக்க தேவாலயங்களைப் போர்த்துக்கீசப் பறங்கிகள் அமைத்தார்களோ, அதேபழி அவர்களுக்கும் உலாந்தர் வடிவில் வந்தது. கத்தோலிக்க தேவாலயங்களை இவர்கள் புரட்டஸ்தாந்து கிறிஸ்தவ தேவாலயங்களாக மாற்றிவிட்டார்கள்..."

"இங்கு கிறிஸ்தவ தேவாலயங்கள் அமைப்பதற்கு ஏன் அனுமதித்தீர்கள்?..."

கார்த்திகேசுவை கிருஷ்ணையர் இரக்கத்தோடு பார்த்தார்.

"எங்கள் சமயத்தையே அனுஸ்டிக்க முடியாது நாங்கள் எவ்வளவு கஷ்டப்பட்டிருக்கிறோம் தெரியுமா? யாழ்ப்பாண மக்களில் ஒருபகுதியினர் பரசமயத்தவர்களாகி விட்டார்கள். படிப்பு, உத்தியோகம், சமூக அந்தஸ்து என்பவற்றிற்காக மதம் மாறிவிட்டார்கள். யாழ்ப்பாணத்தில் பெரும் சைவமானாக இருந்த கதிர்வேற்பிள்ளை இன்று மதம்மாறி பேதுருப்பிள்ளை ஆகிவிட்டார். ஏன் தூரப்போவான், நல்லூரில் சைவமதத்தின் வளர்ச்சிக்குத் தூணாக விளங்கிய மாப்பாண முதலியார் இன்று கிறிஸ்தவனாக மாறித் தனது பெயரையும் தொன்யுவான் மாப்பாணமுதலியார் என மாற்றிக் கொண்டு விட்டார்..."

"கச்சேரியில் சிறாப்பராக இருக்கிறாரே, அவரா?"

"ஆமாம்...."

கிருஷ்ணையர் மருமகனை அழைத்துக்கொண்டு மேற்குத் திசையாக நடக்கத் தொடங்கினார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"உலாந்தர் ஆட்சியில், நிலைமை இன்று ஓரளவு மாறியிருக்கிறது. ஓரளவு மத விடயங்களில் தலையிடாது ஒதுங்கியிருப்பதாகப் படுகின்றது. பறங்கிகள் காலத்தில் அவர்களது மதத்தைத் தவிர வேறு எந்த மதத்தையும் அனுஷ்டிக்க முடியாது எனச்சட்டம் இருந்தது. அவர்கள் காலத்தில் வீதிகளில் கோயில்கள் இல்லை. இரகசியமாக நமது தெய்வங்களை வீடுகளுக்குள் மறைத்து வைத்து வணங்கினோம். அதனால் தான் சைவ மக்களின் வீட்டுக்கு வீடு மரங்களுக்கு மரம் சிறியதொரு சொரூபங்களை வைத்து இன்றும் இரகசியமாக வணங்கி வருகின்றோம். விரத காலங்களில் வாழையிலைகளில் சாப்பிடுவது கூட நம்மைக் காட்டிக் கொடுத்துவிடும். அதனால் சாப்பிட உபயோகித்த வாழையிலைகளைக் கூரைகளில் மறைவாகச் செருகி வைத்தோம். பறங்கிகளின் குதிரைக் குளம்படி கேட்டால் சிலுவையாகவும் பின்னர் சூலமாகவும் மாற்றக்கூடிய வைரவ சூலங்களை வைத்து வழிபட்டோம்...."

"இன்று குருக்கள் வளவில் அமைக்கப்பட்டிருக்கும் ஒரு சமாதியையும் அதனால் தான் வணங்குகிறீர்களாக்கும்..." எனக் கார்த்திகேசு கூறிவிட்டு சிரித்தான்.

"அபச்சாரம்..." என்றார் கிருஷ்ணையர். "அது சாதாரண சமாதியல்ல. பெரியதொரு யோகியார் உடையது. எல்லா மதத்தவர்களுக்கும் அவர் யோகியாக இருந்தார்...."

கிழக்கே சூரியன் வானில் ஏறத் தொடங்கினான். பனிவெயில் உடலில் உறைக்கத் தொடங்கியது. அவர்கள் குருக்கள் வளவை நெருங்கிக் கொண்டிருந்தார்கள். வரும் வழியில் வலது பக்கமாக ஓரிடத்தை கிருஷ்ணையர் காட்டினார். பெருந்தோட்டமும் அதன் நடுவே அழகிய மாளிகை ஒன்றும் காணப்பட்டன.

"இது தான் பண்டார மாளிகை. பரராசசேகர மகாராசா இங்குதான் இருந்தார். இன்று இது கொம்பனித் தோட்டமாம். உலாந்த அதிகாரிகள் தமது விடுமுறையைக் கழிக்க இத்தோட்டத்திற்கு வருவார்கள்...."

"அலுக்கோசு என்றால்?"

"மரண தண்டனை விதிக்கப்பட்டவனை தூக்கில் மாட்டுபவன்..."

"பக்கத்துவீட்டு கந்தையர் தனது மகனை அன்றைக்கு அலுக்கோசு என்று ஏசியவர்...." என்று கூறியவாறு கார்த்திகேசு சிரித்தான். அவருடன் கிருஷ்ணையரும் சேர்ந்து சிரித்தார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அவர்கள் இல்லத்தை நெருங்கிய போது அவர் கூறினார்.

"கார்த்திகேசா நீ சிறுபிள்ளை, நான் சொல்வதை எவ்வளவு தூரம் விளங்கிக் கொள்வாயோ தெரியாது. எனக்கு இப்போது ஐம்பது வயதாகின்றது. நீண்ட காலமாக என் அடி மனதில் ஓர் ஆசை... அப்படியல்ல ஏதோ ஓர் உந்துதல் ஏற்பட்டிருக்கிறது. அடிக்கடி கந்தவேளை என்கனவில் காண்கிறேன். போர்த்துக்கீசப் பறங்கிகளால் அழிக்கப்பட்ட கந்தவேள் கோட்டத்தை மீண்டும் அமைக்க வேண்டும். அதில் எம்பெருமானைப் பிரதிஸ்டை செய்து எம் முன்னோர் செய்துவந்த பூசாகைங்கரியங்களைச் செய்ய வேண்டும். அவ்வாறு அமையும் கந்தவேள் கோட்டம் அருள்விளக்கம் நிறைந்த பழைய இடத்திலேயே அமைய வேண்டும். பெரிதாக என்னால் என் அப்பனுக்கு திருக்கோயில் கட்டமுடியாவிட்டாலும் சிறியதொரு மடாலயமாவது அவ்விடத்தில் அமைத்தே தீருவேன்..."

கார்த்திகேசு அவரை நிமிர்ந்து பார்த்தான். அவர் விழிகளில் தெறித்த பரவச நிலையை அவனால் புரிந்து கொள்ள முடியவில்லை.

"நிலத்திற்கு எங்கு போவீர்கள்?"

"அருள் விளக்கம் நிறைந்த அவ்விடத்தில் வாழும் உத்தம சைவன் எவனிடமாவது பூமிதானம் கேட்பேன்."



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 2 கந்தவேளுக்கு ஒரு மடாலயம்

**1734** தை மாதத்து காலைப்பொழுது.

தொன்யுவான் மாப்பாண முதலியார் வீட்டு வாசலில் கிருஷ்ணையர் ஏறிநின்றிருந்தார். அக்காலத்து நாற்சார வீடு கச்சேரியில் உயர் உத்தியோகம் பார்க்கும் அதிகாரி ஒருவரின் வீடு. இயல்பான ஒரு தயக்கத்துடன் அவர் நின்றிருப்பது தெரிந்தது.

வாசலில் அவரைக் கச்சேரிக்கு ஏற்றிச் செல்வதற்கான வில் வண்டி நின்றிருந்தது. கம்பீரமான காளைகளை அதில் பூட்டுவதற்கான ஆயத்தங்களை வண்டிச் சாரதி செய்து கொண்டிருந்தான்.

"இருங்கள் ஐயா... ஐயா வருவார்..." என்றான் வண்டில் சாரதி.

வெளி விறாந்தையில் கதிரைகள் இடப்பட்டிருந்தன. முற்றத்தில் ஒரு பக்கமாகப் போர்த்துக்கேயப் பறங்கிகளால் யாழ்ப்பாணத்தில் அறிமுகப்படுத்தப்பட்ட கொய்யா மரங்கள் இரண்டும் அன்னவுன்னா மரங்கள் சிலவும் நின்றிருந்தன. பறங்கி அன்னவுன்னாவில் சிவத்த நிறத்தில் சில காய்கள் தொங்கின. பச்சைக்கிளியொன்று தன் துணையுடன் அம்மரத்தில் அமர்ந்திருந்தது.

அவர் அவற்றைப் பார்த்துக் கொண்டு நிற்கும் போது மாப்பாணமுதலியார் வெளியில் வந்தார். கம்பீரமான தோற்றம். செக்கச்செவேலென்றிருந்தார். பார்த்ததும் மரியாதை கொள்ள வைக்கும் தோற்றம். தார்வாரக வேட்டிகட்டி அதன் மேல் கோர்ட்டும் சால்வையும் அணிந்திருந்தார். தலையில் சிலுவைத் தலைப்பா தரித்திருந்தார்.

கழுத்தில் சிலுவையைத் தரிக்கத் தயங்கிய தமிழ்க் கிறிஸ்தவர்கள் தலையில் தலைப்பாவைச் சிலுவை வடிவில் கட்டிக் கொண்டனர்.

"நீங்கள் யார்? உங்களை நான் கண்டிருக்கிறேன். யாரென நினைவில்லை..."



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

“நான் ஒரு பிராமணன். கிருஷ்ணையர் சுப்பையர் என்பர் அடியேனை. ஓர் நல்ல காரியமாக தங்களிடம் வந்தேன்....”

“அப்படி இருங்கள்..” என்றார் சிறாப்பர் தொன் யுவான் மாப்பாணமுதலியார்.

கிருஷ்ணையர் அவரை ஒருகணம் ஏறிட்டுப் பார்த்தார். மாப்பாணரின் நெற்றியில் மெல்லியதாகத் தெரிந்த திருநீற்றுக் குறி அவருக்கு நம்பிக்கையைத் தந்தது. உள்ளத்தால் அவர் சைவராகத்தான் இருக்கிறாரோ?

“தயங்காமல் கூறுங்கள்.... நானும் அவசரமாகக் கச்சேரிக்குச் செல்ல வேண்டும்.”

“போர்த்துக்கேயப் பறங்கிகளால் அழிக்கப்பட்ட கந்தசுவாமி கோயிலை மீண்டும் நிறுவுகின்ற முயற்சியில் ஈடுபட்டிருக்கிறேன்.”

மாப்பாணமுதலியார் ஏழைக் கிருஷ்ணையரை வியப்புடனும் மறுகணம் கவலையுடனும் பார்த்தார்.

“அக்கோயிலை நிறுவ உம்மால் முடியுமா....”

“நீங்கள் நினைப்பது போல பெரிய ஆலயமாகவல்ல. ஒரு சிறு மடாலயமாக... இந்த ஊரிலுள்ள சைவப் பெருமக்கள் பலரும் மனமுவந்து நன்கொடை வழங்கியிருக்கிறார்கள். ஒரு மடாலயம் நிறுவ அது போதுமானது. இன்னமும் தேவைப்பட்டால் வழங்கத் தயாராக இருக்கிறார்கள்.”

“அவர்கள் யார்?...”

“தங்கள் பெயர்களை வெளியிட அவர்கள் விரும்பவில்லை. இரண்டு காரணங்கள் இருக்கின்றது. ஒன்று ஐயனுக்கு அமைக்கும் கைங்கரியத்திற்கு பெயர் எதற்கு என்பது!. மற்றையது இன்றைய அரசுக்குப் பயந்து... மடாலயம் அமைக்க உதவியவர்களில் பலர் புறத்தில் கிறிஸ்தவர்கள். உள்ளத்தில் சைவர்கள்...”

மாப்பாணமுதலியார் தலையைக் குனிந்து சிந்தனையிலாழ்ந்தார்.

“என்னிடமும் உதவிகேட்டு வந்தீர்களா?...”

“இல்லை ஐயா...”

“நாங்கள் அமைக்கப் போகின்ற மடாலயம் நல்லூர் கிறிஸ்தவ தேவாலயத்திற்கு அருகில் அமையவிருக்கிறது.”

மாப்பாண முதலியார் அவரைக் கவலையுடன் ஏறிட்டுப் பார்த்தார்.

“யமுனாரிக்கும் கிறிஸ்தவ தேவாலயத்திற்கும் இடையில் அமைத்துவரும் கட்டிடம் அதுதானா?....” என்று வியப்புடன் கேட்டார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

“ஆமாம்.... ஐயா.”

“நீங்கள் என்ன காரியம் செய்தீர்கள். ஐயரே..... வேறிடம் உங்களுக்கு கிடைக்கவில்லையா? அவர்களது தேவாலயத்திற்கு அருகில் மடாலயத்தை அமைப்பதா?...”

“அவ்விடம் கந்தவேளின் கோட்டம் ஐயா. என் அப்பன் அருள் விளக்கத்துடன் வீற்றிருந்தவிடம் அவ்விடமே. அவனை வணங்குவதற்கு ஏற்றவிடம்.... மடாலயம் அமையவிருக்கும் காணியைக்கூட அதன் உரிமையாளர் நன்கொடையாக வழங்கியுள்ளார்.”

கிருஷ்ணையரின் விழிகளில் நன்றிப் பெருக்கமும் பக்திப் பெருக்கும் பொங்கின. மாப்பாணமுதலியாருக்கு அந்த உத்தம ஐயரின் நெஞ்சம் புரிந்தது.

“ஐயரே அம்மடாலயத்திற்கு கோபுரம் தூபி என்பன அமையுமா?”

“கோபுரம் தூபி என்பன மடாலயத்திற்குரியனவல்ல ஐயா. அவற்றினை மடாலயத்திற்கு அமைக்கில் மீண்டும் ஐயனின் ஆலயம் அழிவுற நேரிடலாம். உலாந்தர்கள் அதனை விரும்ப மாட்டார்கள்...”

“என்றாலும் நீங்கள் சிக்கலில் மாட்டிக் கொள்ளப் போகிறீர்கள்..... தங்கள் தேவாலயத்திற்கு அருகில் பரசமயக் கோயில் இருப்பதை உலாந்தர்கள் விரும்ப மாட்டார்கள். பறங்கிகளைப் போல மக்கள் தங்கள் சமயத்தைக் கைக் கொள்வதை எதிர்ப்பவர்களல்லர். அதற்காக... இதில் பிரச்சினை இருக்கிறது....”

“அதற்காகத் தான் உங்களிடம் வந்தேன்.”

“மடாலயத்தை நிறுவிக் கொண்டு என்னிடம் வந்ததில் அர்த்தமில்லை, ஐயரே.... அதனை அகற்றும்படி மேலிடம் கட்டளையிட்டால்?.....”

கிருஷ்ணையர் மௌனமாகவிருந்தார். பின் சொன்னார்: “தன் ஆலயத்தை கட்டுவிப்பதும் அழிப்பதும் அவன் கையில் தான் இருக்கிறது. என்ன காரியத்திற்காக இப்படியெல்லாம் நடத்துவிக்கின்றானோ?. யார் அறிவார்? மடாலயத்தை அவ்விடத்தில் அமைப்பதற்கும் என்னை உங்களிடம் அனுப்பியதற்கும் ஏதாவது காரணம் இருக்கலாம். யார் அறிவார்?...”

மாப்பாணமுதலியார் ஐயரை ஏறிட்டுப் பார்த்தார்.

“என்னிடம் நீங்கள் எதனை எதிர் பார்க்கிறீர்கள்?...”

“அவ்விடத்தில் மடாலயம் இருப்பதற்கான உத்தரவினை. அனுமதியினை கமாண்டாரியிடமிருந்து பெற்றுத்தர வேண்டும்....”

“அது இப்போது இயலக் கூடியதல்ல... பிரச்சினைக்குரியது. நீங்கள் வேறிடத்தில் அமைத்திருந்தால் அனுமதி பெறத்தேவையில்லை. நீங்கள்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

துணிச்சலாக அவர்களின் தேவாலயத்திற்கு அருகில் அமைத்து விட்டீர்கள். இனி அனுமதி கேட்கில் அவர்கள் நிச்சயமாக அம்மடாலயத்தை அவ்விடத்திலிருந்து அகற்றும்படி கூறுவார்கள். அவ்விடத்தில் இரகசியமாக வழிபாடு செய்யுங்கள். தெரியவரும் போது தெரியவரட்டும்''

மாப்பாணமுதலியார் எழுந்திருந்தார். கிருஷ்ணையரும் எழுந்திருந்தார். வண்டிலை நோக்கி மாப்பாண முதலியார் செல்ல அவர் பின்னால் ஐயரும் தொடர்ந்தார்.

வில்வண்டிலில் அவர் ஏறிக் கொண்டு ஐயரைப் பார்த்தார்.

''ஐயரே, நல்லதொரு காரியத்தைச் செய்தீர்கள். உங்கள் முயற்சி வெற்றியடையட்டும். எப்போது முருகனைப் பிரதிஷ்டை செய்யப்போகின்றீர்கள்?''

''ஆடி அமாவாசையின் இறுதிநாளன்று... நீங்களும் வருகை தரவேண்டும்..''

''அவன் சித்தம்...'' என்றார் மாப்பாணமுதலியார்: ''சிலாவிக்கிரகமா?''

''இல்லை ஐயா... ஐயன் கை வேலினையே பிரதிஷ்டை செய்யப்போகிறோம்.''

அவர் வண்டில் வீதியில் ஏறி விரைந்தது.

கிருஷ்ணையர் சுப்பையர் அழிக்கப்பட்ட கந்தவேள் ஆலயத்தை சிறுமடாலயமாகப் புனருத்தாரணம் செய்தார்.

நல்லூர் மடாலயத்திற்கு மக்களின் வருகை அதிகரித்தது. ஞாயிற்றுக் கிழமைகளில் கிறிஸ்தவ தேவாலயத்திற்கு வரும் மக்களில் ஒருசிலர் இந்த மடாலயத்திற்கும் சென்று மீண்டனர்.

ஒருநாள் அதிகாலை கிருஷ்ணையர் சுப்பையரை மாப்பாணமுதலியார் ஆள் அனுப்பித் தருவித்தார்.

1749-ம் ஆண்டின் ஆரம்ப காலத்தில் ஒரு நாளாக அது அமைந்தது.

பதினைந்து ஆண்டுகளுக்கு பின்னர் கிருஷ்ணையர் சுப்பையர் மாப்பாண முதலியாரின் வீட்டிற்கு வந்தார்.

''ஐயரே கந்தசுவாமி கோயிலைக் கட்டுவதற்கு அனுமதி தரும்படி நீர் ஒரு விண்ணப்பத்தை உலாந்தத் தேசாதிபதிக்கு எழுதவேண்டும்....''

மாப்பாண முதலியாரை ஐயர் வியப்புடன் பார்த்தார்.

''இனி என்னத்திற்கு ஐயா, மடாலயம் அமைத்து பதினைந்து ஆண்டுகள் கழிந்துவிட்டது. இனி அவர்களின் அனுமதி தேவையா?...''

''மடாலயத்தை பெரிய ஆலயமாக்குவோம்... அதற்கு...''

கிருஷ்ணையர் சுப்பையரின் முகம் சூரியப் பிரகாசமாகியது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"ஆமாம்... ஆனால் இன்று மடாலயம் இருக்குமிடத்திலல்ல...."

ஐயரின் மலர்ந்த முகம் சுருங்கியது.

"பிரச்சினைகளைப் புரிந்து கொள்ளுங்கள். அவ்விடத்திலிருந்து அந்த மடாலயத்தை இடம் மாற்றியே தீரவேண்டும். தேவாலயப்பாதிரியார் மேலிடத்திற்கு முறையிட்டுள்ளார். தேவாலயத்திற்கு வருபவர்கள் மடாலயத்திற்குள்ளும் சென்று வணங்குகிறார்கள் என்று, அதனால் அவ்விடத்திலிருந்து மடாலயத்தை அகற்றுமாறு கட்டளை வந்திருக்கிறது. உமக்காக நான் வாதாடி வேறொரு முடிவு எடுக்கப்பட்டிருக்கிறது."

"என்ன முடிவு, ஐயா?" என்று கலக்கத்துடன் கேட்டார்.

"மடாலயத்தை அவ்விடத்திலிருந்து அகற்றுவோம். குருக்கள் வளவில் அதனை ஆலயமாக நிறுவுவோம்...."

"அவ்விடத்திலா?...."

"உண்மையில் கந்தசுவாமி ஆதிக்கோயில் இருந்த இருந்தவிடம் அதுதான். சிங்கையாரியனின் மந்திரி புவனேகவாகு கட்டிய மூலக் கோயில் அவ்விடத்தில் தான் இருந்தது. ஐயரே சப்புமல் குமாரயா அதனை அழித்துவிட்டு அதற்குப் பரிகாரமாகப் புதுக்கோயிலை முத்திரைச் சந்தியில் அமைத்தான். அது பறங்கிகளால் அழிந்தது. எனவே குருக்கள் வளவுதான் ஏற்றவிடம்." கிருஷ்ணையர் மௌனமாகவிருந்தார்.

"ஐயரே, நீர் ஒப்புக்கொண்டாலும் ஒப்புக்கொள்ளாவிட்டாலும் கிறிஸ்தவ தேவாலயத்திற்கு அருகில் இருக்கும் மடாலயம் அகற்றப்படும். இத்தருணத்தை நாங்கள் பயன்படுத்தி குருக்கள் வளவில் கந்தசுவாமி கோயிலைத் தாபிப்பதற்கு அனுமதி பெற்றுவிட வேண்டும்...."

"அவ்விடத்தில் முகம்மது சமயத்தவர்கள் உள்ளனர்...."

"அது வேறு விடயம்.... முதலில் குருக்கள் வளவுக்குரிய தோம்பை எமக்குரியதாக எழுதுவிப்போம்.... பின்னர் ஆலயத்தை பழைய இடத்தில் நிறுவுவோம்...."

மாப்பாண முதலியார் கிருஷ்ணையரைச் சம்மதிக்க வைத்தார். ஐயருக்கும் வேறு மார்க்கம் தெரியவில்லை. புதிய ஆலயம் நிறுவுவதற்குத் தானும் பூரண ஆதரவு வழங்குவதாக மாப்பாண முதலியார் உறுதியளித்தார்.

கிருஷ்ணையர் சுப்பையர் கந்தசுவாமி கோயிலைக் குருக்கள் வளவில் நிறுவுவதற்கு அனுமதி கேட்டு, ஒல்லாந்தத் தேசாதிபதிக்கு விண்ணப்பம் எழுதி மாப்பாண முதலியாரிடம் கையளித்தார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இரகுநாதமாப்பாண முதலியார் சமூகா

# 3

நள்ளிரவு கடந்து வெகு நேரமாகியும் கிருஷ்ணையர் சுப்பையர் நித்திரையின்றிப் படுக்கையில் உழன்றார். மார்கழி மாதத்துப் பௌர்ணமி நிலவு வானத்தில் பவனி வருவது, வாங்கில் கிடந்தபடி பார்க்கும் போது தெரிந்தது.

அவர் உள்ளம் ஆனந்தத்தால் நிறைந்திருந்தது. நாளை மறுநாள் நல்லூர்க் கந்தசுவாமி கோயில் கும்பாபிஷேகம். குருக்கள் வளவில் முருகன் தனக்குரிய ஆலயத்தை அமைப்பித்துக் கொண்டான். ஆதிக் கோயிலமைந்திருந்த திருவிடத்தில் ஐயன் மீண்டும் எழுந்தருளப் போகின்றான். தனக்காக அவன் அமைப்பித்துக் கொள்ளும் கோயில் இதுவாகும்.

இதுவே காலம் காலமாக இந்த மண்ணில் நிலைத்து நிற்கப் போகிறது என கிருஷ்ணையரின் ஆழ்மனதில் பட்டது. அந்த இடத்தில் கந்தசுவாமி கோயிலைக் கட்டுவதற்கு எவ்வளவு சிரமங்களை எதிர்கொள்ள நேர்ந்தது.

சிறாப்பர் தொன் யுவான் மாப்பாணமுதலியார் கிருஷ்ணையர் சுப்பையரின் விண்ணப்பத்தை கச்சேரிக்கு எடுத்துச் சென்று மேலதிகாரியிடம் சமர்ப்பித்து கந்தசுவாமி கோயிலை மீண்டும் கட்டுவதற்கு உத்தரவு பெற்றுக் கொடுத்தார். முத்திரைச் சந்தியிலுள்ள கிறிஸ்தவ தேவாலய மருங்கிலிருந்து கந்தமடாலயத்தை அகற்றுவதற்கு குருக்கள் வளவில் ஆலயமமைக்க அனுமதிப்பதைத் தவிர வேறு மார்க்கமிருக்கவில்லை.

கிருஷ்ணையர் சுப்பையரைக் கச்சேரிக்கு அழைத்தார்கள். அந்த நாள் அவருக்கு நல்ல நினைவு இருக்கிறது. மாப்பாண முதலியாரின் வில் வண்டியில் அவரும் கூடவே சென்றார். குருக்கள் வளவுக்கான தோம்பு அங்கு எழுதப்பட்டது. "யார் பெயரில் அக்காணியைப் பதிவு செய்வது?" என காணிப் பதிவாளர் கேட்டார். மாப்பாண முதலியார்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கிருஷ்ணையரை ஏறிட்டுப்பார்த்தார். அவர் விழிகளில் "உம்பேரில் பதிவோமா?" என வினாவின. கிருஷ்ணையரின் இதயப்பறையில் பொறிதட்டியது.

"அம்பலவாணர் கந்தப்பச்செட்டி பெயரில் பதியுங்கள்..." என்றார் கிருஷ்ணையர். தோம்பு பதிந்து முடிந்தது. இருவரும் வில் வண்டியில் திரும்பிக் கொண்டிருந்த போது மாப்பாண முதலியார் கேட்டார்.

"யார் அந்த அம்பலவாணர் கந்தப்பச் செட்டி?"

கிருஷ்ணையர் சிரித்தார்.

"அம்பலவாணர் என்றால் சிவன், கந்தப்பச்செட்டி என்பது எம்பெருமான் கந்தசுவாமி... தங்களுக்குத் தெரியாதா?"

மாப்பாணமுதலியாரின் உதடுகளில் குறுநகை விரிந்தது.

"ஐயரே, ஆலயம் அமைப்பதற்குத் தேவையான நிதியைச் சேகரிப்பது சிரமமல்ல. யாழ்ப்பாணத்துச் சைவப்பெருமக்கள் ஆலயத் திருப்பணிக்கு வாரிவழங்க என்றும் பின்நிற்பவர்களல்லர். நிதி சேகரிப்பதற்கு நான் உங்களுடன் வர முடியாது. தெரிந்தோ தெரியாமலோ நான் புறத்தில் கிறிஸ்தவனாகிவிட்டவன். ஆதலால்..."

"ஐயா, தங்களது சைவ உள்ளத்தை நான் அறிவேன். இதுவரை தாங்கள் செய்துவரும் உதவியே மேலானது...."

"எனக்குப் பதிலாக என்மகன் இரகுநாதமாப்பாணன் உம்முடன் வருவான். இளைஞன் என்று எண்ணாதீர். அவன் பரம சைவன். கந்தசுவாமி கோயிலை அமைப்பதில் எம்குடும்பத்தினருக்குப் பங்குண்டு என்றால் அது இரகுநாத மாப்பாணனுக்குச் சேரட்டும்.... ஆலயத் திருப்பணிக்கான செலவில் ஒரு பங்கினையும் அவன் தருவான்.... அவன்மூலம் நான் தருவேன்....."

"நன்றி ஐயா..."

"ஐயரே, குருக்கள் வளவில் இன்று வாழ்ந்து வரும் இஸ்லாமியர்கள் அவ்விடத்தை விட்டு அகல ஒப்புக்கொள்ள வேண்டுமே?"

வானத்தில் தொங்கிக் கொண்டிருந்த நிலவை கிருஷ்ணையர் சுப்பையர் ஆழமாகப் பார்த்தார்.

இத்தகைய ஒரு பௌர்ணமி நாளில் குருக்கள் வளவில் சைவப்பெருமக்கள் பலர் ஒன்று கூடினர். அழிந்து போன பெரிய ஆலயத்தைத் தாபிப்பதற்கு அவர்கள் திடசங்கற்பம் எடுத்துக்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கொண்டார்கள். "இப்புண்ணிய பூமியில் நிறுவப்படவிருக்கும் கந்தசுவாமி கோயிலின் பிரதம குருக்களாக கிருஷ்ணையர் சுப்பையர் இருக்க வேண்டுமெனவும் அந்த ஆலயத்தின் தர்மகர்த்தாவாக தொன்யுவான் மாப்பாண முதலியாரின் மைந்தன் இரகுநாத மாப்பாணமுதலியார் இருக்க வேண்டுமெனவும் பிரேரிக்கின்றேன்..." கல்வியங்காட்டுச் சைவவேளான் சரவணமுத்தர் திருப்பணிச் சபையில் பிரேரித்ததை சபை ஏற்றுக் கொண்டது.

வெகுவிரைவாக ஆலயம் அமைக்கப்பட்டுவிட்டது. கல்லினாலும் செங்கற்களினாலும் திருப்பணி நடைபெற்றது. கள்ளிக்கோட்டையிலிருந்து ஓடுகள் தருவிக்கப்பட்டு வேயப்பெற்றது.

நாளை மறுநாள் கும்பாபிஷேகம்.

கிருஷ்ணையர் சுப்பையரே மூலஸ்தானத்தில் வேலினை பிரதிஷ்டை செய்து பிரதம குருக்களாகத் திருப்பணியை நிறைவு செய்யப்போகின்றார்.

யாழ்ப்பாண மக்களது மூலத்தேவாலயம் எண்ணூறு ஆண்டுகளுக்குப் பின்னர் அதேயிடத்தில் பொலிந்து அருள் பாலிக்கப் போகின்றது. சிறிய தேவாலயமாக நிறுவப்பட்டிருக்கும் கந்தசுவாமி கோயில் கால கதியில் கீழைவாயிலில் சிற்ப வேலைப்பாடமைந்த ஐந்தடுக்குக் கோபுரமும் அதன் இருமருங்கிலும் அழகிய மணிக்கோபுரங்களும் கொண்டதாகப் பரிணமிக்கப்போகின்றது என்பதும், பரிவார மூர்த்திகள், திருக்குளம், பூந்தோட்டம், தேரோடும் வீதிகள் என்பனவற்றோடு பொலிவுறப் போகின்றது என்பதும் அன்று கிருஷ்ணையர் சுப்பையருக்குத் தெரிந்திருக்க நியாயமில்லை. தீவினை தீர்க்கும் திருமுருகனுக்கு சைவப்பெருமக்கள் ஆயிரக்கணக்கில் கூடித்திருவிழா எடுப்பார்கள் என்பது அவருக்குத் தெரிந்தது. கிருஷ்ணையர் சுப்பையர் திரிகாலமும் உணர்ந்த ஞானியரல்லர், ஓர் உத்தம பிராமணோத்தமர். அதனால் வானத்து நிலவைக் கூர்ந்து பார்த்தபடி படுத்திருந்த அவருக்குக் கந்தவேள் கோட்டத்தில் பிற்காலத்தில் நிகழப்போகின்ற திருவிளையாடல்கள் தெரிந்திருக்க நியாயமில்லை.

1808 ஆம் ஆண்டு கந்தசுவாமி கோயிலின் பிரதமகுருவாக கிருஷ்ணையர் சுப்பையரின் பேரன் சுப்பையா வருவார். அவ்வேளை தர்மகர்த்தாவாக இரகுநாதமாப்பாண முதலியாரின் மகன் ஆறுமுக மாப்பாணர் இருப்பார். இருவருக்கும் கோயில் பரிபாலனத்தில் சிக்கல் ஏற்படும். பிரச்சினை நீதிமன்றம் வரை செல்லும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அவ்வேளை பிரதம நீதியரசராக இருக்கும் சேர் அலெக்சாண்டர் யோன்ஸ்ரன், கோயிலின் பரிபாலனம் பிரதம குருக்களாலும், மாப்பாண முதலியாராலும் சேர்த்து நடாத்தப்பட வேண்டும். கோயில் சொத்துக்களுள்ள அறை இரண்டு பூட்டுக்களைக் கொண்டிருக்க வேண்டும். ஓர் பூட்டின் சாவி குருக்களிடமும் மற்றைய பூட்டின் சாவி மாப்பாணமுதலியாரிடமும் இருக்கவேண்டும் எனத் தீர்ப்பளிப்பார்.

1811 ஆம் ஆண்டு ஆறுமுகமாப்பாணரின் முறையீடொன்றினை விசாரித்த யாழ்ப்பாணக் கலெக்டர் (அரசாங்க அதிபர்), குருக்களிடமிருந்து திறப்பினை மீளப்பெற்று ஆறுமுகமாப்பாணரிடம் வழங்குவார்.

1823 செப்டம்பர் மாதம் 3ஆம் திகதி மிறன் வின்ஸ்லோ என்ற ஆங்கிலேயப் பெண்மணி நல்லூர்க்கந்தசுவாமி கோயிலுக்கு வருவார். தேர்த்திருவிழா நடந்துகொண்டிருக்கும். சிற்ப வேலைப்பாடுகளோடு கூடிய தேரும் பத்தாயிரத்திற்கும் அதிகமாக குழுமி நிற்கும் பக்தர் கூட்டமும் அவருக்கு வியப்பைத்தரும். கோயில் தேவதாசிகள் தேரின் முன் அலங்கார ரூபிகளாக நடனமாட, அரைநிர்வாணக் கோலத்தில் தேரின் பின் அங்கப்பிரதிஷ்டை செய்யும் பக்தர்கள் சேற்றில் புரள்வது அவருக்கு வருத்தத்தை தரப்போகிறது.

1875 ஆம் ஆண்டு செப்டெம்பர் மாதம் 20 ம் திகதி நல்லூர் ஆறுமுக நாவலர் கந்தசுவாமி கோயில் குறித்து கண்டனம் ஒன்று வெளியிடுவார். "எந்தக் கோயிலுக்கும் சூலலிங்கம், சூக்கும லிங்கம், பத்திரலிங்கம் என்னும் மூன்றும் அமைந்திருத்தல் வேண்டும். தூலலிங்கமாவது தூபி, சூக்கும லிங்கமாவது கர்ப்பக்கிரகத்துள் இருக்கின்ற மூலமூர்த்தி, பத்திர லிங்கமாவது பலிபீடம். இக்கோயிலுக்குத் தூபி இல்லையே? தூபியில்லாதது கோயிலாகாதே? முன் புலையர்கள் அறையும் பறையொலியோடு குமிழஞ்சூழ் வெளிச்சத்திலே திருவிழா நடந்தது. இன்று நானாவித வாத்தியவொலியோடு தீவர்த்தி வெளிச்சத்தில் திருவிழா நடக்கிறது. சுவாமி எழுந்தருளப்பண்ணும் தேரின் உருளையிலே ஆடு வெட்டுவது வைரவருக்குப் பிரியம் என்று இக்கோயிலார் வெட்டுவிக்கிறார்கள். இங்கு குமாரதந்திர விதிப்படி பூசை திருவிழா நடைபெறவில்லை...." என ஆறுமுக நாவலர் குரல் எழுப்புவார்.

கந்தவேள் கோட்டத்தில் தேரடிச் செல்லப்பா சுவாமிகளும், யாழ்ப்பாணத்து யோகர் சுவாமிகளும் அருள் பெற்று அருள்பாலிப்பார்கள்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

என்பன போன்ற வருங்கால நிகழ்வுகள், அந்தப் பௌர்ணமி இரவில் கிருஷ்ணையர் சுப்பையருக்கு தெரிந்திருக்க நியாயமில்லை.

'எப்பவோ முடிந்த காரியம்' என்ற அருள் வாக்குப் பிறக்கவிருக்கும், கந்தவேள் கோட்டத்தில் நாளை மறுநாள் கும்பாபிஷேகம் என்ற நினைவு அவரது உள்ளத்தில் உவகையாக பொங்கியது. அக்கோயிலைத் தாபிக்கத் தன்னோடு நின்றுழைத்து வரும் இரகுநாத மாப்பாணமுதலியாரை ஒருகணம் எண்ணிக் கொண்டார்.

"கந்தசுவாமி கோயிலை அமைப்பதில் எம் குடும்பத்தினருக்கு பங்குண்டு என்றால் அப்பெருமை இரகுநாத மாப்பாணருக்குச் சேரட்டும்." என மாப்பாண முதலியார் கூறியதன் அர்த்தம் புரிவது போன்ற உணர்வில் கிருஷ்ணையர் சுப்பையர் விருட்டெனப் படுக்கையில் எழுந்து அமர்ந்தார்.

அவர் இருந்தாற் போலப் பெருங்குரலில் வாய்விட்டுப் பின்வருமாறு கூறத் தொடங்கினார்.

"ஸ்ரீமான் மகாராஜாதி ராஜாய அகண்ட பூமண்டல ராத்தியதிகிந்த விஸ்ராந்த கீர்த்தி ஸ்ரீ கஜவல்லி மகாவல்லி ஸமேத ஸ்ரீ சுப்ரமண்ய பாதாரவிந்த ஜனாதிரூட சிவகோத்திரோற்ப வகா இரகுநாத மாப்பாண முதலியார் சமூகா..."

பின்னர் நல்லூர்க் கந்தசுவாமி கோயில் கட்டியமாகப் போகும் வாக்கியங்கள் இவை. பௌர்ணமி நிலவு கிருஷ்ணையர் சுப்பையரை வியப்புடன் பார்ப்பதாகப் பட்டது.

*கந்தவேள் கோட்டம் முற்றும்*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஆசிரியர் தொகுத்தும், பதிப்பித்தும் உள்ள நூல்கள்

1. கதைப்பூங்கா
   (பேராதனைப் பல்கலைக்கழக படைப்பாளிகளின் சிறுகதைகள்)
2. விண்ணும் மண்ணும் (செம்பியன் செல்வன்)
3. காலத்தின் குரல்கள் (கலா பரமேஸ்வரன்)
4. சம்பந்தன் சிறுகதைகள்
   (செங்கை ஆழியான் + செம்பியன் செல்வன்)
5. மறுமலர்ச்சிச் சிறுகதைகள்
6. சிரித்திரன் சுந்தரின் நானும் எனது கார்ட்டூன்களும்
7. ஈழகேசரிச் சிறுகதைகள்
8. முனியப்பதாசன் சிறுகதைகள்
9. புதுமைலோலன் கதைகள்
10. சுதந்திரன் சிறுகதைகள்
11. தேவன் – யாழ்ப்பாணம் சிறுகதைகள்
12. அகதி அரிசி – தையிட்டி அ. இராசதுரை
13. கோபதி கதைகள்
14. ஈழநாடு சிறுகதைகள் (அச்சில்)
15. ஆ. முத்துத்தம்பி பிள்ளையின் யாழ்ப்பாணச் சரித்திரம்
16. எஸ். ஜோனின் யாழ்ப்பாணச் சரித்திரம்
17. சுவாமி ஞானப்பிரகாசரின் யாழ்ப்பாண வைபவ விமர்சனம்
18. மயில்வாகனப் புலவரின் யாழ்ப்பாண வைபவமாலை

# ஆசிரியரின் பல்சுவைக் கட்டுரை நூல்கள்


1. கூடாரவாழ்க்கை.
2. சுனாமி
3. ஈழத்து சிறுகதை வரலாறு
4. ஈழத்தவர் வரலாறு
5. யாழ் கோட்டை வரலாறு
6. 24 மணிநேரம்
7. 12 மணிநேரம்
8. மீண்டும் யாழ்ப்பாணம் எரிகிறது.
9. மகாவம்சம் கூறும் இலங்கை வரலாறு
10. சூளவம்சம் கூறும் இலங்கை வரலாறு
11. இலங்கைச் சுருக்க வரலாறு

**கமலம் பதிப்பகம்**
75/10 A, பிறவுண் வீதி, யாழ்ப்பாணம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org





# கந்தவேள் கோட்டம்

## செங்கை ஆழியான்

ISBN: 978-955-1624-07-1

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

UNIE ARTS (PVT) LTD., 48B, BLOEMENDHAL ROAD, COLOMBO 13. TEL: 2330195